Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN WEEKLY

තමිලන් සතිඅන්තය

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 01, இதழ் : 50- பிலவ வருடம், வைகாசி மாதம் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (06.06.2021) ஹிஜ்ரி - 1442, ஷவ்வால் பிறை - 24, 0115886187 பக்கங்கள் 14

## 'வெழி'மணியம்



தெற்கு ஆசியாவிலேயே மிக அதிகமான புத்தகங்களைக்கொண்ட அரும்பெரும் நூலகத்தை கொழுத்தி எரிச்சுப்போட்டு;

கொழும்பிலே சீனாவிடம் பிச்சை எடுத்து மிக உயர்ந்த தாமரைக்கோபுரத்தை கட்டிய விநோதமான நாடுதான் எங்கட நாடு.

"யாழ்ப்பாண நூலக எரிக்கப்பட்டு " நாற்பது ஆண்டுகள் கடந்தும் கூட இன்றும் கூட அந்த நூலகத்தில் எரிக்கப்பட்ட 97000 இக்கும் அதிகமான புத்தகங்களின் கருகிய வாசம் காற்றில் இருக்கிறது.

1981 இல் பேரினவாத காவாலிகளால் எரிக்கப்பட்ட "யாழ் நூலகம்" ஆசியாவின் மிகப்பெரிய நூலகமாக இருந்தது.

பல கோடி குடுத்தாலும் மீண்டும் உருவாக்கமுடியாத பல ஓலைச்சுவடிகளும் தமிழ் நூல்களும் ஒரே இரவில் கொழுத்தப்பட்டன.

02

## நக்கல் நமசிவாயம்



கோதாரி.. போற போக்க பார்க்கேக்க பரிதாபப்பட்டு நாங்கள் தான் அரசாங்கத்துக்கு ஐயாயிரம் ரூபா கொடுக்கவேண்டி வரும்போலக் கிடக்குது...

# மக்களை வாட்டும் காலநிலை: 10 பேர் பலி, ஐவரை காணோம்!



(படப்பிடிப்பு – லலித் பெரேரா)

*யோ.தர்மராஜ்*

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 10 பேர் உயிரிழந்து ஐவர் காணாமல் போயுள்ளனர். பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். தொடர்மழையால் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது.

பயணக்கட்டுப்பாடு அமுலில் இருப்பதால் பல இடங்களில் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்வதில் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை நேற்று மாவனெல்லை, தெவனகல பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் பலியாகியுள்ளனர். காணமல் போன நால்வரின் சடங்களும் மிகுந்த பிரயத்தனத்துக்கு மத்தியில் நேற்றுமாலை மீட்கப்பட்டன.

இதேவேளை, தொடர் சீரற்ற கால நிலையால் இதுவரை 7 மாவட்டங்களில் 41 ஆயிரத்து 717 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 83 ஆயிரத்து 28 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

கொழும்பு, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தளை, நுவரெலியா, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் சீரற்ற நிலையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

02

# 21ஆம் திகதிவரை நீடிக்கும் பயணத்தடை!



*நா. தினுஷா*

கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்காக தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத்தடை எதிர்வரும் 21 ஆம் திகதிவரை நீடிக்கப்படவுள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பயணத்தடை நீடிக்கப்படவேண்டுமென சுகாதாரத் தரப்பினரும் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அறியமுடிந்தது.

முன்னதாக எதிர்வரும் 14ஆம் திகதிவரை பயணக்கட்டுப்பாடு நீடிக்கப்படுமென அரசு அறிவித்திருந்தது.ஆனால் பயணக்கட்டுப்பாடு அமுலில் இருந்த காலத்தில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடையாமல் ஆபத்தான நிலைமை தொடர்வதால் பயணக்கட்டுப்பாட்டை இவ்வாறு நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பயணக்கட்டுப்பாடு அமுலில் இருந்த காலப்பகுதியில் மக்கள் பொறுப்பற்று நடந்துகொள்வதால் நாளை முதல் தனிமைப்படுத்தல் சட்டதிட்டங்களை கடுமையாக்க பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

## முல்லைத்தீவில் பதிவானது கொரோனா முதல் மரணம்

*வன்னி செய்தியாளர்*

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பலர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாடளாவிய ரீதியில் 1656 மரணங்கள் பதிவாகியுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாவது கொரோனா மரணம் பதிவாகியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே இவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்ப்பட்ட மாணிக்கபுரம் பகுதியை சேர்ந்த 44 அகவையுடைய நபரே இவ்வாறு கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்துள்ளார்.

இவர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட நிலையிலேயே கொரோனா காரணமாக உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 577 பேருக்கு இதுவரை கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் 346 பேர் சிகிச்சை பெற்று வீடுகளுக்கு திரும்பியுள்ள நிலையில் 231 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புகளை பேணிய 1224 குடும்பங்களை சேர்ந்த 3179 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 487 குடும்பங்களை சேர்ந்த 1156 பேர் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து வெளியேறியுள்ள நிலையில் 737 குடும்பங்களை சேர்ந்த 2023 பேர் தொடர்ந்தும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூன்றே நாட்களில் கொரோனா பாதிப்பு : 10,000 நோயாளர்கள் - 129 மரணங்கள் !

*யோ.தர்மராஜ்*

நாட்டில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கு பயணக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டிருந்தாலும் கடந்த மூன்று நாட்களுக்கு மேலாக கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 3 ஆயித்தை தாண்டி அடையாளம் காணப்படுவதுடன், மரணங்களின் எண்ணிக்கையும் 45 ஐ தாண்டி பதிவாகியுள்ளது.

அதன்படி, கடந்த 2 - 4 ஆம் திகத வரையான மூன்று நாட்களில் மாத்திரம் 10 ஆயிரத்து 13 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதேவேளை, குறிப்பிட்ட மூன்று நாட்களில் 129 மரணங்களும் பதிவாகியுள்ளது. அதன்படி, 2 ஆம் திகதி 3 ஆயிரத்து 306 பேர், 3 ஆம் திகதி 3 ஆயிரத்து 297 பேர் மற்றும் 4 ஆம் திகதி 3 ஆயிரத்து 410 பேர் என மொத்தமாக 10 ஆயிரத்து 13 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

02

## அமரர் சிவசிதம்பரத்திற்கு கரவெட்டியில் அஞ்சலி



02

## வவுனியாவில் கர்ப்பவதிப் பெண் உட்பட 18 பேருக்கு கொரோனா

*திவ்யா*

வவுனியாவில் கர்ப்பவதி பெண் உட்பட 18 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனா நோயாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற்றும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் முடிவுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின.

அதில், சூசைப்பிள்ளையார்குளத்தைச் சேர்ந்த கர்ப்பவதிப் பெண் ஒருவருக்கும், திருநாவற்குளம் பகுதியில் ஒருவருக்கும், மகாறம்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், தோணிக்கல் பகுதியில் ஒருவருக்கும், ஒமேகா ஆடைத் தொழிச்சாலையில் பணியாற்றும் ஒருவருக்கும் என 5 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா சகாயமாதாபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 13 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி வவுனியாவில் 18 நோயாளர்கள் புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர்.

நோயாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




## அட்டனில் இடம்பெற்ற வாகன விபத்தில் சப் - இன்ஸ்பெக்டர் பலி ,6 பேர் படுகாயம்

### கொரோனா சடலங்களை ஓட்டமாவடிக்கு எடுத்துச் சென்ற வாகனத்துக்கு துணைபோனபோது சம்பவம்



02

## சுகாதார அறிவுறுத்தலை மீறிய திருமண மண்டபத்திற்கு சீல்

### வவுனியாவில் நடவடிக்கை

*வவுனியா நிருபர்*

வவுனியாவில் சுகாதார அறிவுறுத்தல்களை மீறி திருமண நிகழ்வு ஒன்று இடம்பெற்றமையால் திருமண மண்டபம் சுகாதாரப் பிரிவினரால் சீல் வைத்து மறுஅறிவித்தல்வரை மூடப்பட்டது.

வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவில் உள்ள ஞானவைரவர் ஆலய வீதியில் அமைந்துள்ள திருமண மண்டபம் ஒன்றில் மன்னாரைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்கும், வவுனியாவைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது.

இதன்போது சுகாதார அறிவுறுத்தல்களை மீறி அதிகளவிலான உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டதுடன், சுகாதார அறிவுறுத்தல்களும் பின்பற்றப் படவில்லை. இந்நிலையில் அங்கு சென்ற சுகாதாரப் பிரிவினர் அங்கு கூடியிருந் தவர்களை கடும் எச்சரிக்கை வழங்கி அங்கிருந்து வெளியேற்றியதுடன், திருமண வீட்டாருக்கும் கடும் எச்சரிக்கை வழங்கினர். சுகாதார அறிவுறத்தல்களை மீறி மண்டபத்தை வழங்கி மக்களை ஒன்று கூட்டியமை தொடர்பில் திருமண மண்டபம் சுகாதாரப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் சீல் வைக்கப்பட்டு மறு அறிவித்தல்வரை மூடப்பட்டது.

# பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியுடன் சந்திப்பு...



இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர், சாரா ஹல்டனுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குமிடையிலான சந்திப்பொன்று, நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கொரோனா தொற்றைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற வேலைத்திட்டங்களைப் பாராட்டிய உயர்ஸ்தானிகர், தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைக்கு வழங்கக்கூடிய ஒத்துழைப்பு பற்றி இங்கு கருத்துத் தெரிவித்தார்.

வணிகப் பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி எடுத்துவரும் முயற்சிக்கு, பிரித்தானிய அரசாங்கம் வழங்கக்கூடிய பங்களிப்பு தொடர்பாகவும் உயர்ஸ்தானிகர் கவனம் செலுத்தினார். 2030ஆம் ஆண்டாகும்போது, இந்நாட்டு வலுசக்தி உற்பத்தியில் 80சத வீதத்தை மீள்பிறப்பாக்க வலுசக்தி மூலம் பெற்றுக்கொள்வதற்கு, அரசாங்கம் முன்னெடுக்கின்ற வேலைத்திட்டங்களுக்கு அவசியமான தொழிநுட்ப அறிவைப் பரிமாறிக்கொள்வதற்கும் சூரிய சக்தியை களஞ்சியப்படுத்தல் மற்றும் பரிமாற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவும், சாரா ஹல்டன் இங்கு இணக்கம் தெரிவித்தார்.

சேதனப் பசளைப் பயன்பாட்டின் மூலம் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தை பிரித்தானிய உயர்ஸ்தானிகர் பாராட்டினார். 20.8சத வீதமான "வன ஒதுக்கீட்டை" 30சத வீதம் வரை உயர்த்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதற்கு அவசியமான அறிவு மற்றும் பொறிமுறைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு, உயர்ஸ்தானிகர் தனது கவனத்தைச் செலுத்தினார்.

"எக்ஸ் – பிரஸ் பர்ள்" கப்பல் மூலம் ஏற்பட்ட பாதிப்பை ஆய்வு செய்வதற்கு, பிரித்தானியாவின் தொழிநுட்ப ஒத்துழைப்பை வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். ஜெனிவா முன்மொழிவு தொடர்பாகவும் தெளிவுபடுத்திய ஜனாதிபதி , காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது உள்ளிட்ட ஏனைய விடயங்கள் பற்றி அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற வேலைத்திட்டங்களைத் தெளிவுபடுத்தினார்.

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் முதலாவது செயலாளர் அன்ரூ பிரைஸ் ஜனாதிபதியின் பிரதம ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.





**உடப்புக்கு அண்மையில் உள்ள முத்துப்பந்திய கிராம அறுவாய் கடந்த வெள்ளிக்கிழமை மாலை வெட்டப்பட்டது. அண்மையில் பெய்த மழை,அத்துடன் இந்தப்பகுதியில் கூடுதலாக இறால் பண்ணைகள் காணப்படுகின்றன. மழையின் காரணமாக இறால் பண்ணைகளின் அருகில் நீரின் மட்டம் உயர்வடைந்தது. அதே நேரம் இறால் பண்ணைகளின் பாதிப்பையும் கருத்திற் கொண்டு இந்த அறுவாய் வெட்டப்பட்டுள்ளது.மேலும் உடப்பு கரைவலை மீனவர்கள் அறுவாய் பகுதியை கடந்து சென்று மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவது தடைப்பட்டுள்ளது. அத்தோடு முத்துப்பந்திய கிராமத்துக்கு மக்கள் கடற்கரை வழியாக செல்வதும் தடைப்பட்டுள்ளது. (உடப்பு நிருபர்)**

## அமரர்..

*வடமராட்சி செய்தியாளர்*

சிரேஷ்ட தமிழ்த் தலைவர்களில் ஒருவரும் நாடாளுமன்றத்தின் முன்னாள் உபசபாநாயகரும் உடுப்பிட்டிநல்லூர்த் தொகுதிகளின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் மு சிவசிதம்பரத்தின் 19 ஆவது ஆண்டு நினைவுதினநிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை நெல்லியடி கரவெட்டிப் பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்டன .

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம்நெல்லியடி பஸ்நிலைய சதுக்கத்தில் அமைந்துள்ள அன்னாரின்உருவச்சிலையடியில் அஞ்சலி நிகழ்வைமேற்கொண்டனர். நிகழ்வில் உருவச்சிலைக்கு வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் அபிவிருத்தி ஒன்றிய உபதலைவர் இ.இராகவன்ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.முன்னதாக ஒன்றியத்தலைவர் உபாலிபொன்னம்பலம் தீபம் ஏற்றியிருந்தார்

சுகாதார பாதுகாப்பு காரணங்களுக்காக நிகழ்வுக்கு மூன்றுபேர் மாத்திரமே அனுமதிக்கப்பட்டனர். பொதுமக்கள் எவரும்அனுமதிக்கப்படவில்லை கடும் போலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

## அட்டனில்...

*க.கிஷாந்தன்*

அட்டன் - கொழும்பு பிரதான வீதியில் நேற்றுக்காலை 7.30 அளவில் இடம்பெற்ற விபத்தில் அட்டன் பொலிஸ் நிலைய சிறு மற்றும் பாரிய குற்றப்பிரிவுக்கு பொறுப்பான சப் இன்ஸ்பெக்டர் உயிரிழந்துள்ளார்.

அட்டனில் இருந்து கண்டி இராணுவ முகாமில் ஒப்படைப்பதற்காக கொரோனா சடலங்களை கொண்டு சென்ற வாகனத்திற்கு பாதுகாப்பு வழங்க சென்ற 57 வயதான எஸ்.பெனடிக் என்ற பொலிஸ் அதிகாரியே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

உப பொலிஸ் பொறுப்பதிகாரி பயணம் செய்த வாகனம் வட்டவளை கரோலினா தோட்ட பகுதியில் வீதியை விட்டு விலகி சுமார் 200 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் உப பொலிஸ் பொறுப்பதிகாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், மேலும் 3 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வாகன சாரதி, சடலத்தின் உறவினர்கள் இருவர் ஆகியோர் காயமடைந்த நிலையில் வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் கேகாலை பிரதேசத்தை சேர்ந்தவர் என அட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீதியில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக உப பொலிஸ் பொறுப்பதிகாரி பயணித்த வாகனம் வழுக்கி வீதியை விட்டு விலகி பள்ளளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் அட்டன் மற்றும் வட்டவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மஸ்கெலியாவில் இருவருக்கு கொரோனா

*மஸ்கெலியா செ. தி.பெருமாள்*

**மஸ்கெலியா சுகாதார அதிகாரி பிரிவில் நேற்று 59 பேருக்கு மேற்கொண்ட பி. சி. ஆர். பரிசோதனையில் இருவர் கொவிட் 19 நோயாளர்களாக இனங்கண்டு உள்ளதாக மஸ்கெலிய பொது சுகாதார அதிகாரி நரேந்திர குமார் தெரிவித்தார்.**


**நேற்றுமுன்தினம் நடைபெற்ற எழுமாறான பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட வேளையில் மஸ்கெலியா கோவில் வீதியில் ஒருவர் மற்றும் குடாமஸ்கெலிய பகுதியில் ஒருவரும் தொற்றுக்குள்ளானதால் அவர்களை அவர்களது இல்லத்தில் தனிமைப் படுத்தபட்டுள்ளதாகவும் அதிகாரி நரேந்திர குமார் கூறினார்.**

## மூன்றே நாட்களில்...

அதேபோன்று, 2 ஆம் திகதி 39 மரணங்கள், 3 ஆம் திகதி 42 மரணங்கள் மற்றும் 4 ஆம் திகதி 48 மரணங்கள் என மூன்று நாட்களில் 129 மரணங்கள் பதிவாகியுள்ளது. இதில் நேற்று முன்தினம் 4 ஆம் திகதி பதிவான 48 மரணங்களே இலங்கையில் ஒரு நாளில் பதிவாக அதிக கூடிய மரணங்களின் எண்ணிக்கையாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், இதுவரை நாட்டில் ஒரு இலட்சத்து 99 ஆயிரத்து 254 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், ஆயிரத்து 656 மரணங்களும் பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கேகாலை மாவட்டத்தில் மண்சரிவு அபாயம்!



*அருள் – எட்டியாந்தோட்டை*

கேகாலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழை காரணமாக பல பிரதேசங்கள் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது.



நேற்றுமுன்தினம் இரவு பெய்த காற்றுடன் கூடிய அடை மழையால் ருவான்வெல்ல பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கல்பாத்த, எகொடமுல்ல பிரதேசத்தில் வீடொன்றில் மண்சரிவு சரிந்ததால் வீடு பகுதி அளவில் சேதமடைந்துள்ளது. 70 வயதான ஒரு வயோதிபர் உறங்கும் இடத்திலே இது நடந்தது. குறிப்பிட்ட வயதானவர் நித்திரையில் இருந்து எழும்பி சில மணி நேரங்களிலேயே இச் சம்பவம் நடந்ததும் குறிப்பிடத்தக்கது அந்த வீட்டில் இரண்டு வயது சிறு குழந்தையும் ஏழு 7 பேரும் தற்காலிகமாக உறவினர்கள் வீட்டில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதே போல கேகாலை மாவட்டத்தில் களனி கங்கை நீர்மட்டம் அதிகரித்துள்ளதாகவும் காணப்படுவதால்மக்கள் பெரும் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர் .

## மக்களை...

இந்த நிலையில், களனி கங்கைக்கு அருகாமையில் தொடர்ந்து மழை பெய்து வரும் காரணத்தினால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ள அபாய நிலைமை மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தெஹியோவிட்ட, ருவன்வெல்ல, சீதாவக்க, தொம்பே , ஹோமாகம, கடுவலை, பியகம, கொலன்னாவ, கொழும்பு மற்றும் வத்தள ஆகிய பகுதிகளில் இவ்வாறு வெள்ள நிலைமை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் மற்றும் அப்பகுதிகள் ஊடாக பயணிக்கும் வாகன சாரதிகள் அவதானமாக இருக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், சீரற்ற காலநிலையால் கொழும்பு, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தளை, நுவரெலியா, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறுகளின் கரையோரத்தில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வது குறித்து அரச அதிகாரிகள் நேற்று விரிவாக ஆராய்ந்துள்ளனர்.கொரோனா வைரஸ் பரவல் நிலைமை இருப்பதால் மக்களின் சுகாதார பாதுகாப்பினை உறுதி செய்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.











**சீரற்ற காலநிலை காரணமாக இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயத்தில் பாரிய மண்சரிவு ஏற்பட்டு கட்டடங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. மேலும் சில கட்டடங்கள் சரியும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன. புதிய இடத்தில் பாடசாலை அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என பாடசாலை சமூகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இரத்தினபுரி செய்தியாளர்)**

## வெடிமணியம் தொடர்ச்சி...

*அதன் பிறகு எரிந்த அந்த நூலகத்துக்கு காலத்துக்கு காலம் வரும் அரசுகளால் வெள்ளையடிக்கப்பட்டாலும்;*

*இன்றுவரை ஆறாத எரிகாயங்களோடுதான் சரஸ்வதி அந்த நூலகத்தின் முன்னால் கண்கண்ட சாட்சியாக இருக்கிறாள்.*

*எரித்தவர்களும்; எரிக்கச்சொன்னவர்களும்;*

*கூட நின்றவர்களும் இன்றும் எங்களின் முன்னால் உயிரோடுதான் இருக்கிறார்கள்.*

*40 ஆண்டுகள் ஆகியும் இன்றுவரை தமிழினத்தின் மேல் நிகழ்த்தப்பட்ட "இனத்தின் கலாச்சார படுகொலைக்கான" நீதி கிடைக்கவேயில்லை.*

*சுமார் 88 ஆண்டுகால நீண்ட நெடிய வரலாற்றைக்கொண்ட யாழ்ப்பாண நூலகத்தின் ஒவ்வொரு கற்களிலும் தமிழர்களின் உழைப்பும் வியர்வையும் இருக்கிறது.*

*ஆரம்பத்தில் 1933 தொடக்கம் வீடு வீடாக சென்று இந்த நூலகத்துக்காக பலர் சிறுக சிறுக அரியவகை தமிழ் நூல்களையும் ஓலைச்சுவடிகளையும் சேகரித்தார்களாம்.*

*அப்படி உயிராக நேசித்த புத்தகங்களையும் நூலகத்தையும் ஒரே இரவில் பேரினவாதம் எரித்து சாம்பலாக்கியது.*

*"மொழியை அழித்தால் இனத்தை அழிக்கலாம்" என்று நினைத்த பேரினவாத காவாலிகளின் குரூர எண்ணத்தின் ஆரம்பப்புள்ளித்தான் "யாழ்ப்பாண நூலக எரிப்பு"!*

*நூலகத்தின் வாசலில் காவலுக்கு காவலாளியை அடிச்சுக்கலைச்சுப்போட்டு;*

*வெள்ளைத்தாமரையில் வீணையோடு வீற்றிருந்த கல்வித்தாய் சரஸ்வதியை நள்ளிரவில் துகிலுரிந்தார்கள் காக்கி உடையில் இருந்த சிங்கள காடையர்கள்.கூடவே துணையிருந்தார்கள் தெற்கில் இருந்து வந்த யானைக்கட்சியின் சண்டியர்கள்.*

*எல்லோரும் வயிறுமுட்ட சாராயத்தை குடித்துவிட்டு தீயில் எரிந்த கலைவாணியின் முன்னால் ஆட்டம் போட்டார்கள்.*

*கூப்பிடு தூரத்தில் காவலுக்கு இருக்கும் கோட்டை முனியப்பன் கூட வரவில்லை.*

*நல்லூர்க்கந்தனும் ஆழ்ந்த நித்திரை!*

*அடுத்தநாள் யாழ்ப்பாணத்தில் எல்லோர் வீட்டிலும் ஒப்பாரி கேட்டது.*

*அவரவர் வீடுகள் பத்தி எரிஞ்சதுபோல எல்லோரும் அழுதுகுழறினார்கள்.*

*நான்கு தசாப்தமாக கனன்றுகொண்டிருக்கும் ஆறாத கனல் இது.*

*என்னதான் இன்று யாழ்நூலகத்துக்கு வெள்ளையடித்தாலும்;*

*ஆங்காங்கே அந்த நூலகவளாகத்தின் மூலையில் உடைத்து எறியப்பட்ட கற்கள் வரும் தலைமுறைக்கு இந்த " இன அழிப்பை" சொல்லிக்கொண்டேயிருக்கும்.*

*இது இனவழிப்பா? ஆதாரம் இருக்கா ? எண்டு கொஞ்சப்பேர் வருவினம்.*

*97000 புத்தகங்களும் 97000 உயிர்களுக்கு சமம்.*

*பெற்றோல் ஊத்தி கொழுத்தி எரித்து அழிக்கப்பட்டது புத்தகங்கள் அல்ல! அவை தமிழர்கள் உயிரிலும் மேலாக நேசிக்கும் புத்தகங்கள்.*

★★★

*சீனாக்காறனின் கண்ணும் மூக்கும்தான் சின்னன்.ஆனால் அவங்கட மூளை பெரிசு.*

*கொறோணாவை குடுத்த சீனாக்காறன் இண்டைக்கு அதால தன்ர பொருளாதாரத்தை நினைச்சுப்பாக்க முடியாத அளவுக்கு வளத்திட்டான்.*

*நோயையும் குடுத்து அதைத்தடுக்க ஊசியையும் குடுக்குறான்.*

*கோடியில் அல்ல மில்லியனில் உழைக்கிறான்.*

*இலங்கைக்கு 15 டொலருக்கு கொறோணா ஊசியை விக்கிற சீனாக்காறன் அதை பங்காளதேசுக்கு 10 டொலருக்கு குடுக்கிறானாம்.*

*இதென்னடா புதினமாக்கிடக்கு எண்டு விசாரிச்சா;*

*5 டொலரை எங்கட ஆக்கள் பொக்கற்றுக்குள்ள போடுகினம் எண்டு யானைக்கட்சி முதலாளி போர்க்கொடி தூக்குறார்.*

*ஊசிக்கணக்கை கூட்டிக்கழிச்சுப்பாத்தா சுமார் 1400 கோடி ரூபாய்கள் சுழையா தேறுமாம்.*

*இந்த கோடிகளைவைச்சு அடுத்த தேர்தலில் சும்மா சிம்பிளா கன விளையாட்டுகளை காட்டலாம் எண்டு கொழும்பில கதைக்கினம்.*

*"ஊசியிலுமாடா ஊழல்!"*
*எண்டு தெற்கில் சிலர் முனகுகினமாம். அதோட சரி. அதுக்குமேல பொங்கினால் கொறோணா ஊசிக்கிப்பதிலா வேற ஊசிதான் அவைக்கு ஏத்தப்படும்.*

*இலங்கையை சீனாவிடம் அடைவுவைச்சுப்போட்டு திரும்ப திரும்ப சீனாவிடம் கையேந்திக்கொண்டே போகிறது ஆளும் மொட்டுக்கட்சி!*

*சீனா நினைச்சால் சிம்பிளா சில லச்சம் கொறோணா ஊசிகளை இலங்கைக்கு இலவசமா குடுத்திருக்கலாம். அவங்களிட்ட இல்லாத ஊசியா? காசா?*

*ஏன் இலவசமா சீனா இலங்கைக்கு கொறோணா ஊசி குடுக்கவேணும் எண்டு சிலர் குதர்க்கமா கேள்வி கேப்பியள்.*

*அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் 15000 ஏக்கர் காணியையும் கொழும்பு போர்ட் சிற்றியையும் சும்மா சிம்பிளா தூக்கிக்குடுத்த சிறிலங்காவுக்கு கைமாறா மில்லியன் கணக்கில் காசு குடுத்தால் மட்டும் காணாது.*
*கொறோணா ஊசியையும் குடுக்கத்தானே வேணும்.*

*கொழும்பு துறைமுக நகர[ போர்ட் சிற்றி] ஆணைக்குழுவின் தலைவராக சிங்களவர் ஒருத்தர் கண்துடைப்புக்காய் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*அது பேரளவிலான பதவிக்கதிரை மட்டும்தான். சட்டமூலம் நிறைவேறிவிட்டது. இனி ஆரும் ஒரு ஆணியைக்கூட புடுங்கமுடியாது.*

*சீனா நினைச்சால் இந்த துறைமுக நகரத்தின் கீழ சுரங்கம் வெட்டி அதை தன்ர நாட்டோட இணைச்சாலும் ஒருத்தனும் கேள்வி கேக்கேலாது பாருங்கோ!*
*உதென்ன பேக்கதை எண்டு நினைப்பியள். சீனாக்காறன் செய்தாலும் செய்வான்.*

★★★

*வடக்கில் கொறோணா தாண்டவம் ஆடி கொஞ்சம் அடங்க கிழக்கில் அதன் ஆட்டம் தொடங்கிவிட்டது.*

*சரியான விழிபுணர்வோ அல்லது சுய கட்டுப்பாடோ இல்லாமல் கொஞ்சச் சனம் விளையாடித்திரியுதுகள்.*

*கொஞ்சச்சனம் இந்த நோய்தாக்கத்தின் விளைவுகளை அறிந்து வீட்டுக்குள்ளையே முடங்கி கிடக்குதுகள்.*

*கொறோணா வந்தால் அந்த வீட்டை "தீண்டத்தகாத வீடாக" பார்க்கும் ஒரு கேவலமான மனநிலை பல இடங்களில் காணமுடிகிறது.*

*ஒரு வீட்டில கொறோணா எண்டால் அயலட்டை அந்த வீட்டைக்கடக்கக்கூட பயப்பிடுகிறார்கள்.*

*சொந்தங்கள் கூட தூரவிலகி நிற்கிறார்கள்.*

*உண்மையில் தனிமைப்படுத்தப்பட்ட நேரத்தில் தான் அந்தகுடும்பத்துக்கு உளரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஆதரவு தேவை.*

*சினிமாவில் வருவது போல ஊரைவிட்டே அந்த குடும்பத்தை தள்ளிவைக்கும் கோமாளித்தனமான செயலை ஆங்காங்கோ காணமுடிகிறது.*

*ஒரு போன் அடிச்சு சொல்லிப்போட்டு சமைத்த உணவுகளையோ அல்லது உலர் உணவுகளையோ அந்த வீட்டு வாசலில் வையுங்கோ.*

*வெளிநாடுகளில் உள்ள உறவுகளும் கூட உங்கள் ஊரில் எந்தக்குடும்பம் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகியிருக்கு எண்டு விசாரிச்சு அறிஞ்சு உதவி செய்யுங்கோ.*

*இப்பதானே வெளிநாடுகளில் இருந்து இணையத்தளத்தில் உணவுப்பொருட்களை ஓடர் குடுத்தால் உடன கொண்டே குடுக்கிற வசதி இருக்கு.*

*வெளிநாடுகளில் உள்ளவை சமூகவலைத்தளங்களில் உலாவும் போலியான புறோக்கர்களை நம்பி காசை அனுப்பி கரியாக்காமல்;*

*சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நேரடியா தொடர்புகொண்டு என்ன சாமானுகள் வேணும்? எண்டு கேளுங்கோ!*

*ஊரில் உள்ள பலசரக்கு கடைகளுக்கு நேரடியா வைபர், வட்ஸ்ஸபில அடிச்சு கதைச்சு அத்தியாவசிய பொருட்களை ஓடர் குடுங்கோ.*
*கஸ்ரப்படும் சனத்துக்கு கொஞ்ச நாளுக்கு பசியில்லாமல் வயிறு நிறைய வாங்கிக்குடுங்கோ.*

*கோயிலுக்கு பல லச்சம் செலவு செய்து கும்பாபிசேகம் செய்யுறதை விட நூறு மடங்கு புண்ணியம் கிடைக்கும்.*



# தீப்பற்றிய கப்பலால் நீண்டநாள் பாதிப்பு!

## தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன (நாரா) தலைவர் கருத்து

***இலங்கை கடற்பரப்பில் தீப்பரவலுக்குள்ளான எக்பிரஸ் பேர்ள் கப்பலில் உள்ள உலோகங்கள் கடல் நீரில் கலந்தால் அது எமது ஏற்றுமதி பொருளாதாரத்தை பாரியளவில் பாதிக்கும் என்று தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (நாரா) தலைவர் பேராசிரியர் ஏ. நவராட்ணராஜா தெரிவித்தார்.***

***தற்போதைய நிலையில் கடலின் Ph நிலை சராசரி நிலையில் உள்ளது. ஆனால் கப்பலிலிருந்து வெளியாகியுள்ள ப்ளாஸ்டிக் பொருட்கள் நிச்சயமாக எமது கடல் சூழலுக்கு நீண்டநாள் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.***

***தமிழன் வார இதழுக்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.***

***செவ்வியின் முழு விபரம் வருமாறு,***

**கேள்வி : கொழும்புத் துறைமுகத்துக்கு அண்மையில் எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பரவலுக்கு உள்ளாகியதால் கடற்சூழல் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. அதற்கமைய, இந்த கப்பல் சம்பந்தமான நாரா அமைப்பின் தற்போதைய ஆய்வு நடவடிக்கைகள் எந்தக் கட்டத்தில் இருக்கின்றன?**

**பதில்:** இந்தக் கப்பல் 20 ஆம் திகதி தீப்பரவலுக்குள்ளாகியிருந்த நிலையில் 22ஆம் திகதி நாரா அமைப்பு அவசர நிலை பிரிவொன்றை நியமித்திருந்தது. இந்த கப்பலைக் கையாள்வது தொடர்பான திட்டங்கள் வகுக்கப்பட்டு வந்த நிலையில் 25ஆம் திகதி மீண்டும் தீப்பரவல் அதிகமாகி கப்பல் உரிய ஆரம்பித்து விட்டது. நைட்ரிக் அமிலம், கொஸ்டிக் சோடா உள்ளிட்ட இன்னும் வேறுபல இரசாயன திரவியங்கள் இந்த கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், அழகு சாதனபொருட்கள், ப்ளாஸ்டிக் பொருட்கள் போன்றன வந்துள்ளன என்பது ஆரம்பத்தில் தெரிய வந்திருந்தாலும் அதில் மேலும் பல பொருட்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

செம்பு போன்ற இரசாயன பொருளும் இந்த கப்பலில் வந்துள்ளது. இவ்வாறான பொருட்கள் நீண்டகாலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை. இதன் காரணமாக இரசாயனம், ப்ளாஸ்டிக் (மூன்று வகையான ப்ளாஸ்டிக் பொருட்கள் இந்த கப்பலிலுள்ள கொள்கலன்களில் இருந்துள்ளன. இவற்றை மூன்றாகப் பிரித்து அவற்றை கையாள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுத்து வருகின்றோம். இந்தக் கப்பலில் கிட்டத்தட்ட 322 வரையான மெட்ரிக் தொன் எண்ணெய் உள்ளது.

கப்பலில் உள்ள எண்ணெய் வெளியாகுமென்றால் அது பாரதூரமான சிக்கலை ஏற்படுத்தும். ஆனால், இதுவரையில் கப்பலில் எண்ணெய் கசிவு எதுவும் ஏற்படவில்லை. இரசாயனம் பொருட்கள் எனும்போது நைட்ரிக் அமிலம், சோடா போன்றவற்றை எடுத்துக்கொண்டால் பரவலடையும் வீதத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். சுற்றுச்சூழலில் சுமார் 10 கிலோமீட்டர்கள்தான் பாதிப்பை ஏற்படுத்தும். இருந்தபோதிலும் எமது பாதிப்பை ஏற்படுத்திக்கொள்வதற்காகச் சம்பவ இடத்திலிருந்து தென்பக்கமாக 30 கிலோமீட்டர் தூரம் வரையும் அதாவது பாணந்துறை வரையும், வடக்குப் பக்கமாக 20 கிலோ மீட்டர் தூரம் வரையில் கொச்சிக்கடை வரையில் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கடலின் ஒவ்வொரு பகுதிகளிலும் உள்ள நீர், இறக்கும் மீன்கள் என சிலவற்றிலும் மாதிரிகளை எடுத்து அவற்றை பரிசோதனைக்கு உட்படுத்தி வருகின்றோம்.

**கேள்வி: அந்த பரிசோதனை நடவடிக்கைகள் எந்தளவு தற்போது சாத்தியமாகியுள்ளன?**

**பதில்:** எந்தளவு இதன் நச்சுத்தன்மை பரவலடைகிறது என்பதை உறுதிப்படுத்த முடியாது. படிப்படியான பரிசோதனைகளிலேயே அதனை உறுதிப்படுத்த முடியும். தொடர்ச்சியாகக் கப்பலைச் சுற்றி மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்குப்படுத்தப்பட்டு வருகின்றது. அதனூடாகவே இந்த இரசாயனங்களின் நிலையில் மாற்றம் ஏற்படுகிறதா இல்லையா என்பதை அறிந்துகொள்ள முடியும். முக்கியமாக, நைத்திரேட்(Nitrate), நைத்திரைற் (Nitrite) போன்றவை நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்த கூடியதாகவுள்ளது.

தற்போது வரைக்கும் நீரின் Ph (பி.எச்.) நிலை அதாவது கார அமில நிலை சாதாரணமாகவே உள்ளது. சாதாரண நாட்களிலுள்ள Ph நிலையே தற்போதும் காட்டுகின்றது (Ph 7.5). இவ்வாறு ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்டு வரும் பரிசோதனைகளையும் எதிர்வரும் 10 ஆம் திகதி மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்தவுள்ளோம். அந்த ஆய்வின் அறிக்கைகளுக்கமைய மீன்பிடி நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையைப் பகுதிகளைக் குறைப்பதா இல்லை மேலும் சில பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கைகளுக்குத் தடைவிதிப்பதா என்று அறிவிப்போம்.

**கேள்வி: மேற்குறிப்பிட்டது போன்று அமிலங்களின் நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்பட வில்லையா?**

**பதில்:** தற்போது வரைக்கும் சாதாரண நிலையிலேயே இருக்கிறது. பரிசோதனைகளை அதிகரிப்பதன் மூலமே அமிலத்தன்மையின் உயர்வை அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

மிகப்பெரிய பாரதூரமான பிரச்சினை என்னவென்றால் கப்பலிலுள்ள மேகரின், குரோமியம், கொப்பர், ஈயம் போன்ற பார உலோகங்கள் கலந்தால் அது பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். ஒன்று இந்த உலோகங்கள் ப்ளாஸ்டிக் பொருட்களில் படியும் தன்மை உடையவை. இந்த உலோகங்கள் நீருடன் கலந்து மீன்களின் உடல்களில் கலக்குமானால் அது பாரதூர பிரச்சினையாக மாறும்.

இந்த பிரச்சினை எமது ஏற்றுமதியில் பாரதூர சிக்கலை ஏற்படுத்தும். காரணம் இந்த உலோகங்கள் உடலுக்கு கேடுவிளைவிக்க கூடியவை. இந்த மாதிரியான உலோகங்கள் கலந்த கடல் உணவுகளைச் சர்வதேச சந்தைகளில் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆகவே

***கப்பலிலிருந்து வெளியாகும் ப்ளாஸ்டிக் பொருட்கள் கிழக்கு கடற்பரப்பையும் சென்றடைவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளன.***

இந்த நிலையை நாங்கள் மிக முக்கியமாகக் கையாள வேண்டும்.

மற்றைய, பாரதூர பிரச்சினை எண்ணெய்க் கசிவு. தற்போது வரையில் எண்ணெய் கசிவு எதுவும் ஏற்படாததால் எந்த சிக்கலும் இல்லை.அந்த எண்ணெயைக் கட்டாயம் நீக்கிவிட்டால் இந்த பிரச்சினைக்குத் தீர்வை காணக் கூடியதாக இருக்கும். அவ்வாறு எதிர்ச்சியாக எண்ணெய் கசிவு ஏற்பட்டால் அவற்றை எடுப்பதற்கு எண்ணெயை வடிக்கட்டி எடுக்கும் சுற்று வளைகளை (Booms) விரிக்கவுள்ளோம். அந்த வலைகளைவிரிவித்து விட்டால் குறித்த எல்லைக்கு அப்பால் எண்ணெய் செல்லாது.

மூன்று வகையான ப்ளாஸ்டிக் பொருட்கள் இந்த சம்பவத்தால் கடலில் கலந்துள்ளன. சில ப்ளாஸ்டிக் பொருட்கள் கடல் மண்ணுடன் கலந்தவுடன் கடல்மட்ட வெப்பம் அதிகரித்து ஆமைபோன்ற உயிரினங்களின் உருவாக்கத்தைக் குறைத்து விடுவதற்கான வாய்ப்புகளும் அதிகம் இருக்கின்றன.

உயிரிழந்த நிலையில் கரையொதுங்கிய மீன்களில் மேற்கொண்ட பரிசோதனைகளின் போது ப்ளாஸ்டிக் துண்டுகள் அடைத்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மீன்களின் வயிற்றுக்குள்ளும் சிறிய சிறிய ப்ளாஸ்டிக் துண்டுகளை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.இந்த ப்ளாஸ்டிக் பொருட்கள் 25 கிலோமீட்டர் வரையில் பரவக்கூடியவை.

**கேள்வி: ஆனால், எண்ணெய் படிவுகள் கரையொதுங்குவதாக கூறப்படுகிறதே?**

**பதில்:** இல்லை. அவ்வாறு எந்த படிவுகளும் இல்லை. ஆனால், எவ்வளவு இரசாயனம், எவ்வளவு ப்ளாஸ்டிக் கடலுடன் கலந்துள்ளது என்பதை தற்போதைக்கு உறுதியாகக் கூற முடியாது. இதுவொரு நீண்டநாள் அனர்த்த முகாமைத்துவ திட்டம். படிப்படியாகவே சகலவற்றையும் உறுதிப்படுத்த முடியும். ப்ளாஸ்டிக் பொருட்கள் தான் அதிக விளைவுகளை ஏற்படுத்தும்.

பொருளாதார விளைவுகள் குறித்து மிக அவதானத்துடன் செயற்பட வேண்டியுள்ளது. முக்கியமாகக் கடலட்டை, நண்டு போன்ற உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டும். பொருளாதாரத்தைப் போன்று சுற்றுச்சூழல் குறித்தும் மிக அவதானத்துடன் இருக்கவேண்டும். சுற்றுச்சூழல் மாசடைந்தால் அது நேரடியாக எமது பொருளாதாரத்துக்கே பாதிப்பை ஏற்படுத்தும்.

**கேள்வி: அதேபோன்று, இந்த விபத்து எமது மூன்றாவது தலைமுறையினரையும் பாதிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றதே?**

**பதில் :** ப்ளாஸ்டிக் போன்ற பொருட்களே எமக்கு நீண்ட பாதிப்பை ஏற்படுத்தும். காரணம் ப்ளாஸ்டிக் பொருட்கள் நச்சுத் தன்மையை உரிஞ்சு வைத்துக்கொள்ளும். அவற்றை மீன்கள் உண்ணும்போது அது மீன்களின் உடலில் கலக்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதேபோன்று, மெகரின், குரோமியம், கொப்பர், ஈயம், ஆசனிக் போன்ற உலோகங்கள் கலந்தாலும் நீண்ட நாட்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும். ஆகவே, மிகவும் கவனமாகக் கையாள்வதுடன், பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டியது அவசியம்.

நாரா அமைப்பின் கீழ் கடல் வாழ் உயிரினங்களுக்காக விஞ்ஞான பிரிவொன்றும் இயங்கி வருகின்றது. அதனூடாக இறந்து கரையொதுங்கும் உயிரினங்களின் இறப்புக்கான காரணங்களை அடையாளப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

**கேள்வி: இந்த கப்பலில் வாகன உதிரிப்பாகங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது? அது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்?**

***காலம் செல்லும்போது மேகரின் போன்ற பார உலோகங்கள் கடல நீருடன் கலப்பதற்கான சாத்தியமுள்ளதால் மீன்வளத்தை பாதுகாக்க வேண்டியது அவசியம்.***

**பதில்:** அப்படியும் தெரிவிக்கப்படுகின்றது. அதுவும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதுதான். அந்தப் பொருட்களை அகற்றினால் கடற்பரப்பின் நிலையைப் பராமரிக்கக் கூடியதாக இருக்கும்.

**கேள்வி: இது நீண்டநாள் நடவடிக்கை என்கிறீர்கள். அதனைக் கையாள்வதற்கான எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும்?**

**பதில்:** கப்பலுக்குள் நீர் நுழைய ஆரம்பித்து விட்டது. நிலைமை பாரதூரம் என்பதால் அதனை அகற்ற வேண்டும். அதனால் கப்பலின் நிலை தொடர்பிலான அறிக்கைகள் பெற வேண்டியது அவசியம். தற்போது அதன் விளைவுகள் எமக்குக் கிடைக்கப் போவதில்லை. இதன் விளைவுகளை இன்னும் நாட்கள் போகும் போதே அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

**கேள்வி: மீன்களை உட்கொள்வது தொடர்பில் மக்கள் அச்சமடையும் நிலை காணப்படுகின்றதே?**

**பதில்:** தற்போதைய நிலைமையில் மீன்களை உட்கொள்ளலாம். பாணந்துறையிலிருந்து நீர்கொழும்பு கொச்சிக்கடை வரையான பகுதிகளுக்கே மீன்பிடி நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளன. அவ்வாறு தடைசெய்தாலும் ஒருசில மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் . அதற்கு மாற்றுத் தீர்வு வழங்க முடியாத நிலை.

ஆனால் தற்போது அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் ஆழ்கடலில் பிடிக்கப்பட்ட மீன்களே சந்தைக்கு வருகின்றன. இரசாயனங்கள் பொதுவாக 10 அல்லது 15 கிலோ மீட்டர் தூரத்துக்கே பரவும். இருந்த போதிலும் எமது பாதுகாப்புக்காகவே தேவைக்கதிமான தூரம் தற்போது பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

**கேள்வி: இந்த சம்பவம் கிழக்கு போன்ற மீன்பிடி பிரதேசங்களைப் பாதிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறதா?**

**பதில்:** ப்ளாஸ்டிக்பொருட்கள் கட்டாயம் செல்லும். அதனைத் தடுக்க முடியாது. கட்டாயம் இந்தியாவின் முனை பிரதேசத்திலும் கூட பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. யாழ்ப்பாணம் பிரதேசத்துக்கு இந்த ப்ளாஸ்டிக் பொருட்கள் செல்லுமாக இருந்தால் கன்னியாகுமரி பகுதி வரை செல்வதற்கான பாதிப்பும் இருக்கிறது. ஆனால். ப்ளாஸ்டிக் பொருட்கள் இரசாயனங்களை உறிந்துகொண்டால் ப்ளாஸ்டிக்சென்று கரையொதுங்கு பிரதேசங்களுக்கு இரசாயனம் செல்லும் வாய்ப்பும் இருக்கிறது.

**கேள்வி : கடல் தாவரங்களுக்குப் பாதிப்பை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளனவா?**

**பதில்:** கட்டாயம் தாவரங்கள் பாதிப்படைவதற்கான வாய்ப்புகள் இருக்கிறன. கப்பலுக்கு அருகிலுள்ள தாவரங்கள் நிச்சயம் அழிவடையும். கடல் தாவரங்கள் மிக அவசியம். இதுவரையில் தாவரங்கள் தொடார்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை. விரையில் அதற்கான நடவடிக்கைகள் இடம்பெறும்.

**உரையாடல் - நா. தினுஷா**

தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 012 67 34 42. தொலைபேசி : 0115 88 61 87
விளம்பரம் : 077 693 0739
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

# தீதும் நன்றும் பிறர்தர வாரா!

மட்டக்களப்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் ஐஸ் போதைப்பொருள் பைக்கற்றுகளை வாயில் போட்டு விழுங்கியதன் காரணமாக உயிரிழந்துள்ளார் என பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

25 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலைய கூட்டில் அடைத்து வைக்கப்பட்ட இளைஞர் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்த அந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை (04) அதிகாலையில் இடம்பெற்றது.எவ்வாறாயினும் அந்த இளைஞரின் பெற்றோர் கைது செய்யப்பட்ட இளைஞன் பொலிசாரின் தாக்குதலில் உயிரிழந்ததாக முன்னதாக குற்றஞ்சட்டியிருந்தனர்.

இதனையடுத்து உயிரிழந்தவரின் சடலத்தை நீதவான் பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார். அதேவேளை வாழைச்சேனை பொலிஸ் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த தலைமையில் விசேட பொலிஸ்குழு அமைக்கப்பட்டு விசாணைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

அதனையடுத்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற பிரேத பரிசோதனையில் குறித்த நபர் 4 பைக்கற்றுகளை கொண்ட ஐஸ் போதைப் பொருளை வாயில் போட்டு விழுங்கிய நிலையில் அது நெஞ்சுப் பகுதியில் வெடித்ததில், நுரையீரல் பாதிக்கப்பட்டு உயிரிழப்பு இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் நடந்த கையோடு அதற்கு பல கற்பிதங்கள் சொல்லப்பட்டன.பொலிஸாரால் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட பலர் கடந்த காலங்களில் உயிரிழந்த சம்பவங்கள் பல இருப்பதால் அந்த சந்தேகத்தில் ஒரு நியாயம் இருக்கிறது.அதேபோல கைதாகும் சந்தேகநபர்களிடம் உண்மைகளை கறக்கும் போர்வையில் அவர்களை அடி உதை என்று துன்புறுத்தும் பல சம்பவங்கள் நடந்திருப்பதால் இந்த இளைஞரின் உயிரிழப்பின் பின்னணியில் சந்தேகம் வந்தமையில் தவறில்லை.

அதனால் தான் இந்த சம்பவத்தை கேள்விப்பட்ட கையோடு , சம்பந்தப்பட்ட இளைஞர் போதைப்பொருளுடன் கைதானவர் என்று பொலிஸார் தரப்பில் கூறப்பட்ட பின்னரும் ,தமிழ் அரசியல்வாதிகள் பலர் குறிப்பிட்ட இளைஞரின் உயிரிழப்பு குறித்து தேட ஆரம்பித்தனர்.அதன் காரணமாக இந்த உயிரிழப்பு குறித்து விசாரணை நடத்துமாறு பாதுகாப்புத்துறை மேல்மட்டத்திலிருந்தும் உத்தரவுகள் பறந்தன. ஒரு நபர் மற்றுமொருவரை கொலை செய்தவரென தெரிந்தாலும்கூட அவர் மீதான குற்றச்சாட்டுகள் தெட்டத்தெளிவாக நிரூபிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் சட்டத்தின்பால் எடுக்கப்படும்வரை அவரை குற்றவாளியாக கருதுவதற்கோ அல்லது அவரின் உயிரை பறிப்பதற்கோ எவருக்கும் எந்த அதிகாரமும் இல்லை.தனிமனித உயிரென்பது மகத்தானது முக்கியத்துவமானது.

அதேசமயம் இதில் இன்னுமொரு துயரமான பக்கமும் இருக்கிறது.தற்கால இளைஞர்களிடம் இருக்கும் போதைவஸ்து பழக்கத்தினால் ஏற்படும் துயரங்கள்.மூன்று தசாப்த கால போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கின் மக்கள் போரினால் ஏற்படும் வலி வேதனைகளுக்கு ஒத்த வேதனையை இந்த போதைவஸ்து அரக்கனால் எதிர்கொள்கின்றனர்.

வடக்கு கிழக்கின் பெரும்பாலான இடங்களில் எல்லா வகையான போதைவஸ்துகளும் தாராளமாக புழங்குகின்றன.இவற்றின் பின்னால் அதிகாரங்கள் கொண்ட சக்திகள் இருக்கக் கூடும்.ஆனால் இவற்றுக்கு நமது இளம் சமுதாயம் அடிமையானது எப்படி ?இதற்கான பெரும் பொறுப்பை பெற்றோர்களே ஏற்கவேண்டும்.

தவறுக்காக பாடசாலைகளில் பிள்ளையை ஆசிரியர் கண்டித்தால் பிள்ளை செய்த தவறை விட்டுவிட்டு ஆசிரியரை கண்டித்தல் , பிள்ளைகள் தங்கள் இஷ்டப்படி உலாத்த விடுவது , ஏன் ,எதற்கென கேட்காமல் தேவையான பணத்தை வழங்குவது , நேரம் கெட்ட நேரத்தில் வீடுகளுக்கு வரும் பிள்ளைகளிடம் எதுவும் விசாரிக்காதிருத்தல், பிள்ளைகளின் நடத்தையை கண்காணிக்கத் தவறுதல் ,அவர்கள் கொண்டுவரும் பணத்திற்கான மூலத்தை விசாரிக்காமல் விடுதலென பெற்றோர் விடும் தவறுகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இளைய சமுதாயம் பொலிஸ் நிலையத்திற்குள் செல்லும்போது அங்கே ஏதோ இருக்கிறது. எனவே அந்த பொலிஸ் நிலைய வாசலுக்கு செல்ல அடிகோலிய காரணிகளை பெற்றோர் ,உற்றோர் தேடிப்பார்த்தல் வேண்டும். பொலிஸுக்குள் செல்லவேண்டிய நிலைமை வந்தாலே பாரதூரம் என்று தெரிந்து தெரிந்தும் இளைய சமுதாயம் தவறிச் செல்வது பாரதூரமான சீர்கேடல்லவா .?

மட்டக்களப்பு இளைஞரின் மரணம் துர்ப்பாக்கியமானது அப்படியான சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டியதே இனியுள்ள தேவை.தீதும் நன்றும் பிறர்தர வாரா.நன்மையும் தீமையும் நாங்கள் தேடிக்கொள்வது.



# ஆழியில் அழியாத சுவடுகள்

## தலைமுறை கடந்தும் தவிர்க்க முடியாத பாதிப்பு



கட்டுரை
**சபீர் மொஹமட்**

இந்தியாவில் ஹஸீரா துறைமுகத்திலிருந்து கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்து கொண்டிருந்த MV Express pearl என்ற கப்பல் கடந்த மாதம் 20 ஆம் திகதி தீப்பற்றியது. சிங்கப்பூர் நாட்டுக் கொடியின் கீழ் செயற்படுகின்ற இந்தக் கப்பலில் தீப்பரவிய சந்தர்ப்பத்தில் 25 மெட்ரிக் தொன்களுக்கும் அதிகமான நைட்ரிக் அமிலம், எதனோல் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் உட்பட மேலும் பல மருத்துவ இரசாயன பதார்த்தங்கள் 1486 கொள்கலன்களினுள் இருந்துள்ளன.

கொழும்புத் துறைமுகத்திற்கு வடமேற்கே 9.5 கடல் மைல் தொலைவில் நங்கூரமிடப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலேயே குறித்த கப்பலில் தீ பற்றியுள்ளது. இலங்கை கடற்படையினர் மற்றும் துறைமுக அதிகாரிகள் இந்திய கடலோர பாதுகாப்புப் பிரிவின் உதவியுடன் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்த போதிலும் காலநிலை மற்றும் இரசாயனத் திரவங்கள் காரணமாக அவ்வாறு கட்டுப்படுத்த முடியாமல் போனது. ஜூன் மாதம் 2ஆம் திகதி காலை முதல் கப்பல் கடலில் மூழ்கத் தொடங்கியுள்ள நிலையில், அதனை ஆழ்கடலுக்கு இழுத்துச் செல்லும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடல் வழியாக கொண்டுசெல்லப்படுகின்ற ஆபத்தான இரசாயனப் பதார்த்தங்களை ஆங்கிலத்தில் Dangerous Cargo (D/C) என்பார்கள். கடல் வழியாக இவ்வாறான பொருட்களை கொண்டு செல்லும்போது கப்பலின் அதிகாரிகள் மற்றும் மாலுமிக்கு சர்வதேச கடல்சார் அமைப்பின் International Maritime Organization(IMO) கோட்பாடுகளுக்கு அமைய ஒரு சில பொறுப்புகள் மற்றும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் சில உள்ளன. இவற்றை IMDG code என்பார்கள். அதாவது பாதுகாப்பான முறையில், ஆபத்தான பொருட்களை கடல் வழியாகக் கொண்டு செல்வதற்கான வழிகாட்டி என்று கூறலாம். இதற்கு அமைவாகவே கடல்வழி கொள்கலன் போக்குவரத்துக்கள் நடைபெற வேண்டும்.

ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கொண்டு செல்கின்ற பதார்த்தங்கள் மூலம் ஏதேனும் விபத்துக்கள் ஏற்பட்டால், அந்த சந்தர்ப்பத்தில் குறித்த கப்பலின் உரிமையாளர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றிய சர்வதேச சாசன விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் காணப்படுகின்றன. அதனை hazardous and noxious substances (HNS) என்பார்கள்.

அத்துடன் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் குறித்த கப்பல் இரண்டாகப் பிளவுபட்டு கடலினுள் மூழ்கினால், அதனை நாங்கள் கட்டாயம் அகற்ற வேண்டும். ஏனென்றால், கொழும்புத் துறைமுகத்திற்கு வருகின்ற கப்பல்கள் அந்த குறித்த இடத்தைக் கடந்து அந்தப் பாதை வழியாகவே பெரும்பாலும் துறைமுகத்தை வந்தடைகின்றன. மூழ்கிய கப்பல் அங்கேயே இருக்குமானால் துறைமுகத்தை நோக்கி வருகின்ற ஏனைய கப்பல்களுக்கு அதனால் சேதங்கள் ஏற்படலாம். எனவே, குறித்த கப்பலை அகற்றுவதற்கு ஒரு சர்வதேச சமவாயம் உள்ளது. அதனை நாங்கள் Nairobi International Convention on the Removal of Wrecks என்று அழைப்போம். 2007ஆம் ஆண்டு மே மாதம் கென்யாவில் நடைபெற்ற ஒரு சர்வதேச மாநாட்டில் முன்மொழியப்பட்ட இந்த சாசனமானது கிட்டத்தட்ட 10 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் 2015ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது.

எமது பிராந்திய கடல் எல்லைக்குள் தீப்பற்றி எரிந்து மூழ்கிய வண்ணம் இழுத்துச் செல்லப்பட்டு கொண்டிருக்கின்ற இந்த MV Express pearl கப்பல் சம்பந்தப்பட்ட அநேகமான சட்ட நடவடிக்கைகளை 2008ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல் மாசுறல் தடுப்பு சட்டம், குற்றவியல் மற்றும் சிவில் சட்டம் போன்ற மிகவும் குறுகிய உள்நாட்டு வரையறையொன்றுக்குள்ளிருந்து மாத்திரமே எடுக்க முடியும்.

தொடர்ச்சி..... 05

# ஆழியில் அழியாத சுவடுகள்...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஏனென்றால் நாம் மேலே கூறிய 1996ஆம் ஆண்டின் hazardous and noxious substances (HNS) மாநாடு மற்றும் 2007 ஆம் ஆண்டின் நைரோபி சர்வதேச சேதங்களை அகற்றுவதற்கான மாநாடு Nairobi International Convention on the Removal of Wrecks போன்ற அபாயகரமான மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்களின் விளைவாக ஏற்படும் பாதிப்புகளைக் கோருவதற்கான எந்த ஒரு கடல்சார் மாநாட்டிலும் இலங்கை இதுவரை கையெழுத்திடவில்லை.

எனவே, இதுபற்றி நாங்கள் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் நிறைவேற்று அதிகாரியும், கடல் மற்றும் கடல்சார் சட்ட நிபுணர் கலாநிதி சட்டத்தரணி டான் மலிக் குணசேகரவிடம் வினவியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''இதுபோன்ற சம்பவங்களின் போது சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையான, சர்வதேச சமவாயங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திட்டு அவை எட்டப்படாமைக்கான பிரதான காரணம் நமது அரசாங்கம் உட்பட உரிய அதிகாரிகளின் பலவீனமேயாகும். இதுபற்றி நான் உரிய அதிகாரிகளுக்கு கடந்த பத்து வருடங்களாக கூறி வருகின்றேன். எனினும், அவர்கள் ஏதேனும் ஒரு பொய்யை சொல்லி மழுப்பி விடுகின்றார்கள்.

தற்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த நெருக்கடியான சூழ்நிலையில் கூட நான் அரசாங்கத்திற்கும், உரிய அதிகாரிகளுக்கும் எனது முழுமையான பங்களிப்பை வழங்குவதற்குத் தயாராகவே உள்ளேன். எனினும், ஊடகங்களைத் தவிர வேறெவரும் எனக்கு எந்தவித சந்தர்ப்பமும் வழங்குவதில்லை. ஆனால், கடந்த வருடம் ஜூலை மாதம் மொரீஷியஸிலுள்ள வகாசியோ எண்ணெய்க் கப்பல் விபத்தில் கப்பலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்கறிஞர் அந்த வழக்கு தொடர்பான சட்ட விதிமுறைகள் பற்றி என்னிடமே கேட்கிறார்'' என்றார்.

கலாநிதி சட்டத்தரணி டான் மாலிக் குணசேகரவே இந்த சம்பவத்தின் சட்டப் பின்னணி பற்றி விவாதிப்பதற்கான சரியான நபராவார். கடல்சார் சட்டங்கள் குறித்து இவர் முழுமையாகத் தேர்ச்சி பெற்றுள்ளார். நெதர்லாந்தின் உட்ரெக்ட் ( Utrecht University) பல்கலைக்கழகத்தில் சர்வதேச சட்டத்தில் முதுகலைப் பட்டமும், ஜேர்மனியின் ஹாம்பர்க் (University of Hamburg) பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டமும் பெற்றுள்ளார். மேலும் வணிக கடல்சார் சட்டத்தில் கலாநிதி (PHD) பட்டம் பெற்ற ஒரே இலங்கையரும் இவரேயாவார். இலங்கையின் கப்பல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் நிர்வாக இயக்குநராக இருந்துள்ள இவர் கடல்சார் சட்டம் பற்றிய பல நூல்களையும் எழுதியுள்ளார்.



**இதுபோன்ற சம்பவங்களின் போது சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையான, சர்வதேச சமவாயங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திட்டு அவை எட்டப்படாமைக்கான பிரதான காரணம் நமது அரசாங்கம் உட்பட உரிய அதிகாரிகளின் பலவீனமே ஆகும்.**
**-சட்டத்தரணி டான் மலிக் குணசேகர**



**தொழில்நுட்ப வசதிகள் இல்லை என்பதைவிட தொழில்நுட்பத்தை சரியான முறையில் பயன்படுத்தக் கூடிய வல்லுனர்களை ஈடுபடுத்தாமையே இப்படிப்பட்ட அழிவுக்கு பிரதான காரணமாகும்**
**- கெப்டன் இஷாரக பெரேரா**



**இதனால் பல ஆண்டுகளுக்கு மீன்பிடித்துறை பாதிப்படையும். அழிவடைந்துள்ள இந்த சுற்றாடலை திரும்பப் பெற 50 முதல் 60 ஆண்டுகள் வரை செல்லும். எதையாவது கொன்றுவிட்டு பணத்தால் அதற்கு புத்துயிர் கொடுத்து விட முடியாது. அரசாங்கமும், உரிய அதிகாரிகளும் இதனைப் புரிந்து கொண்டதாக தெரியவில்லை**
**-கலாநிதி அஜந்தா பெரேரா**

**தீயை ஏன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் போனது**

''அவசர நிலைமைகளின்போது பயன்படுத்தப்படுகின்ற தொழில்நுட்பமானது கப்பல்களின் அளவைப் பொறுத்து வேறுபடுகின்றது. இலங்கை வசம் காணப்படுகின்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்தி MV Express pearl கப்பலில் ஏற்பட்டிருக்கின்ற தீயினை அணைப்பதென்பது இலேசானதொரு காரியமல்ல. ஏனெனில், இரசாயன பதார்த்தக்கசிவு காரணமாக ஏற்பட்டிருக்கின்ற இந்த தீயினை நீர் விசிறி அணைக்க முடியாது. இந்த தீயை முதலிலேயே முழுமையாக அணைத்தனர். எனினும், அதன் பின்னர் இரவு நேரத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளை சரியாக செய்யாமையால் மீண்டும் மறுதினம் கப்பல் தீப்பற்றிக் கொண்டது. எனவே, தொழில்நுட்ப வசதிகள் இல்லை என்பதைவிட தொழில்நுட்பத்தை சரியான முறையில் பயன்படுத்தக்கூடிய வல்லுனர்களை ஈடுபடுத்தாமையே இப்படிப்பட்ட அழிவுக்கு பிரதான காரணமாகும்'' என மசகு எண்ணெய் மற்றும் வணிகக் கப்பல்களில் உயர் அதிகாரியாகவும், பிரதான கேப்டனாகவும் 15 வருட காலம் பணியாற்றிய அனுபவம் வாய்ந்த கேப்டன் இஷாரக பெரேரா குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், ''தீப்பற்றி எரிகின்ற கப்பல்கள் மற்றும் காடுகள் மீது உலர் இரசாயனப் பொடிகளை வீசுவதற்கென பிரத்தியேக விமானங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் அவ்வாறான விமானங்கள் இல்லை. மேலும், குறித்த கப்பலில் தீப்பற்றக்கூடிய பதார்த்தங்கள் யாவும் தற்போது பற்றி எரிந்துள்ளன. திரும்பவும் தீப்பற்றக்கூடிய பதார்த்தங்கள் எதுவும் இல்லை என நான் நம்புகிறேன். அத்துடன் இந்த கப்பலின் கீழ்ப்பகுதியில் காணப்படுகின்ற பெறுமதியான சரக்குகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை. குறைந்தபட்சம் 20 சதவீதமான கொள்கலன்களே தீக்கிரையாகியுள்ளதுடன் ஏனையவை இன்னும் பாதுகாப்பாகவே உள்ளன" என கேப்டன் இஷாரக பெரேரா குறிப்பிட்டார்.

தீயணைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, விமானங்கள் மூலம் உலர் இரசாயனப் பொடிகளை எறிவதன் மூலமும், கப்பலைச் சுற்றியுள்ள வளிமண்டலத்தை நீர் விசிறியும் குளிர்மைப்படுத்த மட்டுமே முடியும். ஏனெனில், கப்பலில் தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பது வெவ்வேறுபட்ட இரசாயன பதார்த்தங்கள் என்பதனால் தீயின் மீது நீரைச் செலுத்துவதன் மூலம் மேலும் வெடிப்புகள் ஏற்படக்கூடும். எரிகின்ற பதார்த்தங்களைப் பொறுத்து அதனை அணைக்கின்ற செயன்முறையும் வேறுபடுகின்றது. எனவே, வெவ்வேறுபட்ட இரசாயன திரவியங்கள் குறித்த கப்பலில் இருந்தமையினால் சுற்றுச்சூழலை குளிர்மைப்படுத்தும் செயற்பாட்டில் மாத்திரமே எம்மால் நீர்வழியாக ஈடுபட முடிந்தது.

மேலும், இந்த தீப்பற்றலுக்குக் காரணமாக இருந்த இரசாயன பதார்த்தங்கள் கப்பலின் கொள்கலன்களுக்கு உள்ளே காணப்பட்டமையினால் உலர் இரசாயன பொடிகளை ஆகாயத்திலிருந்து எறிவதென்பது நடைமுறையில் சாத்தியமற்றதொன்றாகும். எனவே, தீ ஆரம்பித்தது தொடக்கம் கப்பல் முழுமையாகப் பற்றி எரியும் வரை கப்பலின் சுற்றுப்புறத்தை குளிர்மைப்படுத்தும் செயற்பாட்டை மட்டுமே தீயணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மேற்கொண்டதனை அவதானிக்க முடிந்தது.



**இந்தத் தீ விபத்தினால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்பு**

எரிந்து சிதைவடைந்த கப்பலில் காணப்பட்ட பொருட்கள் காரணமாக இலங்கையின் மேற்குக் கரையோரம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. குறிப்பாக கல்பிட்டி முதல் நீர்கொழும்பு உஸ்வெடிகெய்யாவ, பமுனுகம, தெஹிவளை, கல்கிஸை, பாணந்துறையினூடாக ஹிக்கடுவ வரையிலான தெற்குக் கரையோரத்தின் பல பகுதிகளுக்கும் குறித்த கப்பலின் சிதைவுகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. கரைதட்டியுள்ள குறித்த சிதைவுகளை அப்புறப்படுத்தும் பணிகளில் இலங்கை கடற்படை, கடல் மாசுறல் தடுப்பு அதிகாரசபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் கரையோர பாதுகாப்பு அதிகாரசபை என்பன ஈடுபடுத்தப்பட்டுள்ளன.





இந்த கப்பல் விபத்து காரணமாக ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்புகள் பற்றி நாம் சுற்றுச்சூழல் ஆர்வலர் கலாநிதி அஜந்தா பெரேராவிடம் வினவியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''நைட்ரிக் அமிலம் போன்ற ஓர் அமிலம் கடல் நீரினுள் விழும்போது மீன்களால் வாழ முடியாது. சிறிய உயிரினங்கள் உட்பட அனைத்தும் இறந்து, கால்சியம் கார்பனேட் மூலம் ஆக்கப்பட்டுள்ள அவற்றின் உடல்கள் கரைந்து விடுகின்றன. பவளப்பாறைகள் அழிக்கப்படுகின்றன. மிகத் தெளிவாக, கப்பலைச் சுற்றியுள்ள கடல் இப்போது முற்றிலும் இறந்துபோயுள்ளது. இது பல ஆண்டுகளுக்கு இலங்கையின் மீன்பிடித் துறையை பாதிப்படையச் செய்யும். அழிவடைந்துள்ள இந்த சுற்றாடலை திரும்ப பெற ஐம்பது முதல் அறுபது ஆண்டுகள் வரை செல்லும். எதையாவது கொன்றுவிட்டு பணத்தால் அதற்கு புத்துயிர் கொடுத்து விட முடியாது. அரசாங்கமும், உரிய அதிகாரிகளும் இதனைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. மேலும், இதன்மூலம் எமது சதுப்பு நிலங்களுக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. சதுப்பு நிலம் என்பது எமது சுற்றாடல் தொகுதியின் மிக முக்கியமான ஒரு பகுதியாகும். இவை அழிவடைதல் என்பது எதிர்காலத்தில் தாங்க முடியாத இழப்பாகும்.

மற்றைய பிரச்சினை பிளாஸ்டிக் ஆகும். இது எல்லா இடங்களுக்கும் சிதறிச் சென்றுள்ளது. இந்த பிளாஸ்டிக் பொருட்களை விலங்குகள் உட்கொள்கின்றன, அதனால் ஏராளமான விலங்குகள் உயிரிழக்கக்கூடும்.

நமக்குக் கிடைக்கவுள்ள பணத்தை விட நாம் இழந்துள்ள இந்த சுற்றாடல் தொகுதி விலைமதிப்பற்றது. இவற்றின் விளைவுகளை எதிர்வரும் நாட்களில் காண மாட்டோம். இன்னும் ஒரு சில மாதங்களில் அவை ஒன்றன்பின் ஒன்றாக வெளிப்படும். இந்த பேரழிவு நடந்து முடிந்துவிட்டது. இதன் பாதிப்புகளை குறைப்பதற்கென அரசாங்கத்தினால் செய்யக்கூடிய மிக சொற்பமான காரியங்களே எஞ்சியுள்ளன. இனிமேலாவது இதுபோன்ற அழிவுகள் வராமல் தடுக்க அரசு உரிய திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்'' என்றார்.

**கப்பல் போக்குவரத்தில் இலங்கையின் அமைவிடம்**

இலங்கை கடல்சார் பாதுகாப்பு அதிகார சபைக்கு இலங்கையை விட 8 மடங்கு விசாலமான கடல் பரப்பொன்றினை மாசுபடாமல் பாதுகாப்பதற்கான பொறுப்புள்ளது. மேலும், சர்வதேச கப்பல் போக்குவரத்தின் மத்திய நிலையமாக காணப்படுகின்ற இலங்கையின் கடல் எல்லையின் ஊடாகவே மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து மலேஷியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு மசகு எண்ணைக் கப்பல்கள் பயணிக்கின்றன.

இவ்வாறு வருடமொன்றிற்கு கிட்டதட்ட 60 ஆயிரம் சரக்கு, எண்ணெய் மற்றும் எரிவாயு கப்பல்கள் செல்கின்றன. வருடமொன்றிற்கு மாத்திரம் இலங்கை கடற்பரப்பின் ஊடாக 525 மெட்ரிக் தொன் மசகு எண்ணெய் கொண்டு செல்லப்படுகின்றது. அத்துடன் நாளொன்றுக்கு ஹம்பாந்தோட்டையை அண்டிய கடல்பரப்பில் 200 தொடக்கம் 300 வரையான மசகு எண்ணைக் கப்பல்கள் செல்வதோடு, வருடம் ஒன்றிற்கு இலங்கையின் துறைமுகங்களை நோக்கி வருகின்ற 5000ற்கும் மேற்பட்ட கப்பல்கள் மூலம் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எண்ணைக்கசிவுகளோ அல்லது வெடிப்புக்களோ ஏற்பட்டு தீ அனர்த்தங்கள் ஏற்படலாம்.

இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு கடந்த வருடம் செப்டெம்பர் 3 ஆம் திகதி இலங்கையின் கிழக்கு கடற்பரப்பில், அதாவது சங்கமங்கந்தையில் இருந்து 37 கடல் மைல் தொலைவில் பயணித்துக் கொண்டிருந்த பனாமா நாட்டிற்கு சொந்தமான MT NEW DIAMOND கப்பல் தீப்பற்றிய சம்பவமாகும். ஐக்கிய அரபு இராச்சியத்தின் மினா அல்-அஹ்மதி துறைமுகத்திலிருந்து இந்தியாவின் ஒடிஷா மாநிலத்தின் பிரதீப் துறைமுகம் நோக்கி சென்றுகொண்டிருந்த இந்த கப்பலானது தீப்பற்றும்போது அதனுள் 270,000 மெட்ரிக் தொன் மசகு எண்ணெய் மற்றும் கப்பலின் இயக்கத்திற்காக சுமார் 1,700 மெட்ரிக் தொன் டீசல் என்பன இருந்தன. இந்தத் தீயினை அணைக்கும் முயற்சியில் இலங்கைக் கடற்படை, விமானப்படை மற்றும் இந்திய கடலோர பாதுகாப்பு படையின் சிறப்பு தீயணைக்கும் பிரிவின் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன. அதனடிப்படையில் பகீரத பிரயத்தனம் ஒன்றின் பின்னர் செப்டெம்பர் ஒன்பதாம் திகதி குறித்த தீ முற்றுமுழுதாக கட்டுப்படுத்தப்பட்டது. ஒருவேளை இந்த கப்பலில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டு எண்ணெய் கசிவுகள் நிகழ்ந்திருந்தால் அது மிகப்பெரியதொரு அழிவினை எமது கடல் பரப்பிற்கு ஏற்படுத்தியிருக்கும்.

MT NEW DIAMOND சம்பவமானது MT Express pearl கப்பல் விபத்திற்கு முன் மிக அண்மைய காலத்தில் இலங்கை கடற்பரப்பில் ஏற்பட்ட மேலுமொரு விபத்தாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் நாம் பிரச்சினைகள் ஏற்பட்ட பின்னர்தான் தீர்வுகளை தேடுகின்றோம். அனைத்து விதமான பிரச்சனைகளுக்கும் இந்த நுட்பத்தினை பயன்படுத்த முடியாது. அதற்கு மிகச் சிறந்த உதாரணம் தற்போது முற்றுமுழுதாக கடலில் மூழ்கடிக்கப்பட்டுள்ள MT Express pearl கப்பலின் இந்த பேரழிவு. எனவே, இதன் பின்னராவது துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளுக்கு முதலிடம் கொடுத்து திருத்தப்பட வேண்டிய சட்டதிட்டங்களை மாற்றி மேலும் இது போன்ற ஒரு அழிவு ஏற்படுவதற்கு இடமளிக்காமல் இருக்க வேண்டும். **(முற்றும்)**



# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# பல்கலைக்கழக அனுமதி – கல்வியாண்டு 2020/2021

# www.ugc.ac.lk

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிகோரும் பொருட்டு 2020 அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஆகக்குறைந்த தேவைகளைத் திருப்திசெய்துள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும். பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தேவைகளை யார் திருப்தி செய்துள்ளார்கள் என்பதை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சார்த்திகளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

**பல்கலைக்கழக அனுமதிக்கு இணைய வழி ஊடாக விண்ணப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பது மாணவர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.**

### பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தகைமைகள்

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானோர் என அறிவிக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் பெற்றிருக்கவேண்டியவை.

**(அ)** அங்கீகரிக்கப்பட்ட சகல மூன்று பாடங்களிலும் ஒரே தடவையில் குறைந்தது சாதாரண சித்தி (S) களை ஆகக்கூடுதலாக 3 அமர்வுகளுள் பெற்றிருத்தல்.

**(ஆ)** பொது சாதாரண வினாத்தாளில் ஆகக்குறைந்தது 30% புள்ளிகள் பெற்றிருத்தல்.

**குறிப்பு 1: பொது சாதாரண வினாத்தாளில் ஆகக்குறைந்தது 30% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரிகள் Z புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவாயினும் நடப்பு வருட கல்வியாண்டில் பல்கலைக்கழக கற்கைநெறிக்கு பதிவுசெய்வதற்கு தகுதியற்றவர்களாவர்.**

**அவ்வாறான ஒரு விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட தேவையை முந்திய தடவையில் அதாவது க.பொ.த. (உ/த) பரீட்சையின் அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் ஆகக் குறைந்தது 30% புள்ளிகளைப் பெற்று பூர்த்திசெய்திருப்பின், அவ்விண்ணப்பதாரி தற்போது தெரிவாகியிருக்கும் கற்கைநெறியினை உரிய பல்கலைக்கழகத்தில் தொடர்வதற்காக பதிவு செய்வதற்குத் தகுதி பெறுவர்.**

**ஏற்கனவே அனுமதிக்குத் தெரிவாகி பொது சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30% புள்ளிகளையேனும் பெற்றுக்கொள்ளாத மாணவரொருவர் அடுத்துவரும் பல்கலைக்கழக அனுமதிக்காக அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் பொது சாதாரண வினாத்தாள் பரீட்சையில் தோற்றி குறிப்பிட்ட தேவையைப் பூர்த்திசெய்தால் மட்டுமே Z புள்ளிகளின் அடிப்படையில் ஏற்கனவே தெரிவாகியிருக்கும் கற்கைநெறியினை எதிர்வரும் கல்வியாண்டொன்றில் குறித்த பல்கலைக்கழகத்தில் தொடர்வதன் பொருட்டு பதிவுசெய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.**

### 2020/2021ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி கையேட்டினை பெற்றுக்கொள்ளும் முறை

2020/2021ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி கைநூலொன்றை கீழ்வரும் முறைகளில் 21.05.2021ஆம் திகதியிலிருந்து ஒரு கைநூலுக்காக ரூபா 500 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**(அ)** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகம், இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு 07.

**(ஆ)** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட விநியோக முகவர்களிடமிருந்து (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ள விநியோக முகவர்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது).

**(இ)** தலா ரூபா 500 ஸ்ரீ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கணக்கில் வைப்பில் இட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து www.ugc.ac.lk பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலின் மென்நகலினை பதிவிறக்கம் செய்யலாம்.

**(ஈ)** பின்வரும் பல்கலைக்கழக நலன்புரி பிரிவுகளிலிருந்து:

i. கொழும்புப் பல்கலைக்கழகம்
ii. பேராதனைப் பல்கலைக்கழகம்
iii. ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்
iv. களனிப் பல்கலைக்கழகம்
v. மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
vi. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
vii. உறுகுணைப் பல்கலைக்கழகம்
viii. கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
ix இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
x. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
xi. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
xii. இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
xiii. இலங்கை ஊவா - வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
xiv. கட்புல அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகம்
xv. இலங்கை கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்

**(உ)** பல்கலைக்கழக அனுமதிக் கைநூலினை தபால் மூலமும் பெற்றுக்கொள்ளமுடியும்.

இதற்காக வேண்டி இலங்கை வங்கியின் ரொரிங்ரன் கிளையிலுள்ள ப.மா.ஆ. திரட்டுக் கணக்கு இலக்கம் 0002323287 இன் அல்லது மக்கள் வங்கியின் நகர மண்டபக் கிளையிலுள்ள திரட்டுக் கணக்கு இலக்கம் 167-1-001-4-3169407 இற்கு வரவு வைக்கும் விதமாக, இலங்கை வங்கியின் அல்லது மக்கள் வங்கியின் ஏதாவது ஒரு கிளையில் ஒவ்வொரு கைநூலுக்கும் ரூபா 500 இனைச் செலுத்தி பெற்றுக்கொண்ட கொடுப்பனவு பட்டோலை, அனுமதிக் கைநூலிற்கான எழுத்துமூல வேண்டுகோளுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும், குறித்த பணத்தை செலுத்தியமைக்கான வங்கியின் இலச்சினை பொறிக்கப்பட்டு அதிகாரமுடைய அலுவலர் ஒருவரினால் கொடுப்பனவு பட்டோலையில் முறையாக ஒப்பமிடப்பட்டிருக்கவும் வேண்டும்.

அவ்வாறு வங்கிக் கொடுப்பனவுப் பட்டோலையை அனுப்பி அனுமதிக் கைநூலினை தபால் மூலமாகப் பெற்றுக்கொள்ளும்போது, விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் விண்ணப்பதாரி பெற விரும்பும் அனுமதி கைநூலின் ஊடகம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு சுய முகவரியிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்படாததுமான 37 செ.மீ. x 26 செ.மீ. அளவுக்குக் குறையாத கடிதவுறையொன்றுடன் எழுத்துமூல கோரிக்கையொன்றினை, சிரேஷ்ட உதவிச் செயலாளர் (பல்கலைக்கழக அனுமதிகள்), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரிக்கு விண்ணப்பதாரி அனுப்பிவைத்தல் வேண்டும்.

**"இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கான அனுமதி - கல்வியாண்டு 2020/2021"** எனத் தலைப்பிடப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலுடன் (37 செ.மீ. x 26 செ.மீ.) கடிதவுறை ஒன்றும் தரப்படும் என்பதும் அறிந்திருக்கவேண்டிய முக்கிய விடயமாகும். இணையவழி விண்ணப்பச் செயன்முறையின் இறுதியில் விண்ணப்பதாரி பெற்றுக்கொள்ளும் இணையவழி விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியை முறையாக நிரப்பிக் கையொப்பமிட்டு அனுப்புவதற்காக இக் கடிதவுறையை விண்ணப்பதாரிகள் உபயோகிக்க வேண்டும். பரீட்சார்த்திகள் கைநூலை வாங்கும்போது மேற்கூறப்பட்ட கடிதவுறை தமக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

### இணையவழி மூலம் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் முறை

பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி மூலம் www.ugc.ac.lk எனும் பல்கலைக்கழக ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக விண்ணப்பித்தல் கட்டாயமாகும்.

**குறிப்பு 2: விண்ணப்ப நடைமுறை தொடர்பான வழிகாட்டல்களுக்கு 2020/2021ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் பகுதி 4இனை வாசிக்குமாறு மாணவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.**

**குறிப்பு 3: இணைய வழியாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் 2020/2021ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் பகுதி 5இல் தரப்பட்டுள்ளது.**

**குறிப்பு 4: இணைய வழியாக விண்ணப்பிக்க வசதியற்ற விண்ணப்பதாரிகள், நாடெங்கிலுமுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்கள் (NAC Centres), கல்வியமைச்சின் கீழுள்ள மாகாண மற்றும் வலய கணினி வள (ICT Centres) நிலையங்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர்களின் (ICTA) கீழான நெனசல நிலையங்கள் ஆகிய நிலையங்களுள் ஒன்றுக்கு அவர்களது அலுவலக நேரங்களில் சென்று எதுவித கட்டணமுமின்றி (இலவசமாக) பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி விண்ணப்பிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறான வசதிகள் செய்யப்பட்டுள்ள நிலையங்கள் பற்றிய விபரம் 2020/2021ஆம் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக் கைநூலின் பகுதி 5இன் இறுதியில் தரப்பட்டுள்ளது.**

**குறிப்பு 5 : க.பொ.த. (உ/த) பரீட்சையின்போது தனது ஆளடையாளத்தை நிருபிப்பதற்காக தேசிய அடையாள அட்டையினைப் பயன்படுத்தாத மாணவர்களுக்கு இணையவழி சேவையினைப் பயன்படுத்தி விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்குரிய அறிவுறுத்தல்கள் 2020/2021ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் பகுதி 5இன் பக்கம் 123-124இல் தரப்பட்டுள்ளது.**

**குறிப்பு 6 : பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி விண்ணப்பத்தை நிரப்புவதில் சிரமங்கள் ஏதும் ஏற்படின் அரச தகவல் நிலையத்தினை (1919) இனை தொடர்புகொண்டு அறிவுறுத்தல்களைப் பெறலாம்.**

### விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி

**விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி 18.06.2021 ஆம் திகதி ஆகும்.** குறித்த **18.06.2021ஆம்** திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என பரீட்சார்த்திகள் அனைவரும் அறிவிக்கப்படுகின்றனர்.

பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்து, இணையவழி விண்ணப்பத்தொகுதியிலிருந்து பெறப்படும் இணையவழி விண்ணப்பப்படிவ அச்சுப்பிரதியை சிரேஷ்ட உதவிச் செயலாளர் (பல்கலைக்கழக அனுமதிகள்), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு – 07 என்று முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இத்தேவைக்காக கைநூலுடன் வழங்கப்பட்ட தபால் உறை மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும்.

> நாட்டில் நிலவும் கொவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலில் குறிப்பிட்டுள்ள ஏனைய தேவைப்பாடுகளை நிறைவு செய்வதுடன்,
>
> இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் அச்சிடப்பட்ட இணையவழி விண்ணப்பத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் அல்லது தெளிவான புகைப்படத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு பதிவு தபால் ஊடாக அனுப்புவதற்கு மேலதிகமாக apply2020@ugc.ac.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவேண்டியது கட்டாயத் தேவை என்பதை நினைவில் கொள்க.

அச்சிடப்பட்ட இணையவழி விண்ணப்பம் பதிவுத் தபாலில் மட்டுமே அனுப்பப்படல் வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வருகைதந்து விண்ணப்பத்தினைக் கையளிக்க முடியாது.

### பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியின்மை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் உள்வாரி மாணவர்களாக அனுமதிக்கு பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூல் கல்வியாண்டு 2020/2021 பிரிவு 1.7 இற்கு அமைய பின்வரும் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் தகுதியற்றோராவார்;.

1. க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு மூன்றுக்கு (3) மேற்பட்ட அமர்வுகளில் தோற்றிய மாணவர்கள்.

2. 1978இன் 16ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில்/ உயர் கல்வி நிறுவனத்தில் கற்கை நெறியொன்றிற்கு உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள். [இப்பந்தியின் கீழ்வரும் பல்கலைக்கழகங்களினதும் உயர் கல்வி நிறுவனங்களினதும் பெயர்கள் 2020/2021ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 1.6(8) மற்றும் 1.6(10) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது]

3.1978இன் 16ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டம் அல்லாத ஏனைய பாராளுமன்ற சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் அல்லது ஏனைய உயர் கல்வி நிறுவனமொன்றில் முதல் பட்டப்பயில் நெறிகளுக்காக இலவச கல்வி முறையின் கீழ் உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்த/பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.
அவையாவன:

1. இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்
2. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்
3. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (As Enlisted Officer Cadets)
4. வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்
5. இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் (2017 ஆண்டிலும் அதன் பின்னரும் பதிவுசெய்த மாணவர்கள்)

4. கல்விக் கல்லூரி (College of Education) ஒன்றில் கற்கைநெறியொன்றினை தொடர்வதற்காக உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

5. வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் கீழ் வருகின்ற பல்கலைக்கழக கல்லூரிகளில் (University College) மூன்று (03) வருட டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு இலவச கல்வி முறையின் கீழ் உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

6. கீழே பந்திகள் **"முக்கியம்"** என்ற தலைப்பின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக பின்வரும் நிறுவனங்களில் 03 வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான காலப்பிரிவிற்கு கீழ் காட்டப்பட்டிருக்கும் கற்கை நெறியொன்றைப் பயில்வதற்கு முழுநேர மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

(அ) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (உ.தே.டி. - HND)

(ஆ) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் (NAITA), எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தில் (IET), இயந்திரவியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (இ.வி.தே.டி - NDES)

**முக்கியம் :**

ஆயினும் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (உ.தே.டி.-HND) அல்லது / அத்துடன் தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் (NAITA) கீழ் வருகின்ற பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (IET) பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (பொ.வி.தே.டி-NDES) ஆகிய மூன்று வருட கால அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தினைக் கொண்ட முழுநேர கற்கைநெறிகளுக்கு பதிவுசெய்த மாணவரொருவர் தமக்கு இந்நிறுவனங்களில் பதிவுசெய்வதற்கு வழங்கப்பட்ட இறுதித் தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் தனது பதிவினை மீளப்பெற்றுவிட்டால் மாத்திரமே பின்னைய ஆண்டொன்றில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி நிறுவனமொன்றில் கற்கைநெறி ஒன்றைப் பின்பற்றுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

மேலே பந்தி 6இல் குறிப்பிடப்பட்ட நிறுவனமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள கற்கை நெறியொன்றிற்குப் பதிவுசெய்த மாணவரொருவர், பதிவுசெய்வதற்கு கொடுக்கப்பட்ட இறுதித் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் தனது பதிவை மீளப்பெறாவிட்டால், அவர் மேலே பந்தி 6இல் குறிப்பிட்ட பிரிவில் வருவதுடன், பின்னைய ஆண்டொன்றில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின்கீழ் அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கற்கை நெறியொன்றைப் பின்பற்றுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவராவார்.

ஆயினும், மேலே குறிப்பிட்ட இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (உ.தே.டி.-HND)அல்லது தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் (NAITA) கீழ் வருகின்ற பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (IET) பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (பொ.வி.தே.டி-NDES) ஆகிய கற்கைநெறிகளுக்கு **வெற்றிடங்களை நிரப்புவதற்காக** மேலே பந்தி 6 இல் குறிப்பிட்டவாறு அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 60 நாட்களுக்குள் பதிவினை மீளப்பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான சலுகை வழங்கப்பட மாட்டாது.

**குறிப்பு 7: மேலே பந்தி 6இல் குறிப்பிட்ட ஒரு கற்கை நெறிக்கு பதிவுசெய்வதற்காக கொடுக்கப்பட்ட இறுதித் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் நிறுவகமொன்றிலிருந்து பதிவை மீளப்பெற்ற மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்துடன் குறித்த நிறுவனத்தில் பதிவை மீளப் பெற்றமை தொடர்பான கடிதத்தின் பிரதியையும் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும்.**

7. முதலாவது பட்டமட்டத்தில் கற்கை நெறியொன்றைக் கற்பதற்கு உயர் கல்வி அமைச்சினூடாக வழங்கப்பட்ட வெளிநாட்டுப் புலமைப் பரிசிலொன்றை ஏற்றுக்கொண்ட மாணவர்கள்.

8. மேலே 2, 3, 4, 5, 6 மற்றும் 7ஆம் பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புகளிலிருந்து முதல் பட்டமொன்றை அல்லது அதற்குச் சமமான தகைமையொன்றைப் பெற்றுக்கொண்ட மாணவர்.

9. தற்போதைய கல்வியாண்டில் அல்லது முன்னைய கல்வியாண்டு ஒன்றில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும்போது அல்லது பதிவினை மேற்கொள்ளும்போது தவறான பிரகடனங்களைச் செய்த மாணவர்கள் / மற்றும் போலியான ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் மாணவர்கள்.

**குறிப்பு 8: பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட முன்னர் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும்போது அல்லது பதிவினை மேற்கொள்ளும்போது பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய் / தவறானவை எனக் கண்டறியப்பட்டால் அக் கல்வி ஆண்டிற்கான அவரின் தேர்வு மற்றும் அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் இரத்துச்செய்யப்படுவதுடன் ஏனைய எவ் எதிர்கால கல்வியாண்டிலும் மீண்டும் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.**

**மேலும், பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்டதன் பிற்பாடு பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும்போது அல்லது பதிவினை மேற்கொள்ளும்போது பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய், தவறானவை என எவ்விதத்திலாவது கண்டுபிடிக்கப்பட்டால் அம்மாணவரை பல்கலைக்கழகத்தில், உயர் கல்வி நிறுவனத்திலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கருத்திற் கொள்ளவும்.**

### இதர முக்கிய தகவல்கள்

### a. விண்ணப்பத்தில் கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான விருப்பொழுங்கைக் குறிப்பிடுதல்

2020/2021ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற 15 தேசிய பல்கலைக்கழகங்களினாலும், 3 வளாகங்களினாலும் 4 உயர் கல்வி நிறுவனங்களினாலும் 119 வெவ்வேறு கற்கைநெறிகள் நடத்தப்படும்.

குறித்தவொரு பல்கலைக்கழகத்தினால் / வளாகத்தினால் / நிறுவனத்தினால் வழங்கப்படும் கற்கைநெறி ஒவ்வொன்றிற்கும் தனியானதொரு குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் குறியீடுகள் **"யுனி கோட்" (Uni-Code)** என அழைக்கப்படும். மொத்தமாக 244 "யுனி கோட்" (Uni-Code) கள் உள்ளன. "Uni-Codes "களின் பட்டியல் 2020/2021ஆம் கல்வியாண்டிற்குரிய கையேட்டின் 137-142ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

மாணவர்கள் தாம் தகுதி பெற்றுள்ள எவ்வளவு எண்ணிக்கையான யுனி-கோட்களுக்கும் (அதாவது பல்கலைக்கழகங்கள் மற்றும் கற்கைநெறிகள் எத்தனைக்கும்) விண்ணப்பிக்க முடியும். மாணவர்கள் சகல 244 "Uni-Codes"களுக்கும் விண்ணப்பிப்பதற்கு தகுதிபெறமாட்டர். விண்ணப்பதாரியினது யுனி-கோட் (Uni-Code) தெரிவுகள் அவர் க.பொ.த.(உ/த) பரீட்சையில் தோற்றிய பாடங்களின் அடிப்படையில் அமையும். ஆயினும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தில் ஆகக்கூடுதலாக 125 தெரிவுகள் வரை குறிப்பிடலாம்.

அவர்கள் தங்கள் "Uni-Code"களை அதிகூடிய விருப்பு யுனி-கோட் இலிருந்து அதிகுறைந்த விருப்பு யுனி-கோட் வரை ஒழுங்குபடுத்தல் வேண்டும். ஒழுங்குபடுத்தலானது, மாணவனது மனதில், யுனி-கோட்களில் உள்ள ஆர்வம் குறைந்து செல்லும் வரிசையைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டும். மாணவர்கள் தமது விருப்பொழுங்கில் ஒரே யுனி-கோட்டை (Uni-Code) ஒரு தடவைக்கு மேல் பதிய அனுமதிக்கப்பட மாட்டர்.

**தெரிவின் போது கற்கைநெறியும் பல்கலைக்கழகமும் ஒன்றாகவே கருத்திற்கொள்ளப்படும்.**

மாணவர்கள் தங்களது விண்ணப்பத்தை நிரப்பும்போது தாம் தகுதிபெறுகின்ற ஆகக்கூடிய எண்ணிக்கையான யுனி-கோட்களைக் குறிக்குமாறு கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றனர். விண்ணப்பதாரிகள் தாம் விருப்புரிமை வழங்கிய கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகம் என்பவற்றுக்கு மாத்திரமே கருத்திற்கொள்ளப்படுவர். **விண்ணப்பதாரி எவரும் அவர் வேண்டிக்கொள்ளாத (விண்ணப்பிக்காத) யுனி-கோடொன்றுக்கு (Uni-Code) அனுமதிக்கப்படமாட்டார்.** இதன்படி, குறித்தவொரு பல்கலைக்கழகத்தின் குறித்தவொரு கற்கைநெறிக்கு அனுமதி பெற போதுமான Z-புள்ளியை விண்ணப்பதாரியொருவர் பெற்றிருப்பினும், அவ்விண்ணப்பதாரி அதற்குரிய யுனி-கோட்டைத் தனது விண்ணப்பத்தில் கோரியிராதவிடத்து, அந்த யுனி-கோட் (Uni-Code) (அதாவது அதற்குரிய பல்கலைக்கழகமும் கற்கைநெறியும்) அவ்விண்ணப்பதாரிக்கு வழங்கப்படமாட்டாது. அதற்குப் பதிலாக அவர் தனது விருப்பொழுங்கில் அடுத்த தெரிவாகக் குறிப்பிட்டுள்ள கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் ("Uni-Code") அனுமதிக்கப்படுவது பற்றியே பரிசீலிக்கபடுவார்.

**குறிப்பு 9: "யுனி-கோட்" களை பயன்படுத்தி விருப்பொழுங்கைக் குறிப்பிடுவது தொடர்பான வழிகாட்டல்களுக்கு 2020/2021ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் பகுதி 3 ஐ வாசிக்குமாறு மாணவர்கள் ஆலோசனை கூறப்படுகின்றனர்.**

**குறிப்பு 10: தெரிவுசெய்யப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு (Uni-Code) மாணவர் ஒருவர் பதிவு செய்யாதுவிடின், எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் அதே கற்கைநெறியை வேறு பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்கு மாணவரது விண்ணப்படிவத்தில் அவற்றிற்கு உயர் தெரிவு வழங்கப்பட்டிருப்பினும் அனுமதிக்கு கருத்திற்கொள்ளப்படமாட்டார். பதிலாக, அவர்களது விண்ணப்பத்தில் அடுத்த விருப்பொழுங்கிலுள்ள கற்கைநெறியிற்கு அவர்கள் கருத்திற்கொள்ளப்படுவர்.**

கல்வியாண்டு 2020/2021க்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் பக்கம் 110-111 இல் வழங்கப்பட்டுள்ள "முக்கியம்" எனும் பகுதியை படிப்பதன் மூலம் மாணவர்கள் இது தொடர்பில் மேலதிக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### b.செயன்முறை / உளச்சார்பு பரீட்சை சித்தி பெறுவதற்கான தேவைப்பாடு

கீழே பட்டியலிடப்பட்டுள்ள கற்கை நெறிகளுக்கு அனுமதி பெறல் பற்றி பரிசீலிக்கப்பட விரும்பும் பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தினால்/ உயர்கல்வி நிறுவனத்தினால் நடத்தப்படும் செயன்முறை /உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைய வேண்டும். சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனம் செயன்முறை / உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிக்கும் என்பதுடன் செயன்முறை / உளச்சார்புப் பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவங்களை மாணவர்கள் நேரடியாகவே உரிய பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளருடன் அல்லது நிறுவனத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளருடன் தொடர்புகொள்ளலாம். சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் / உயர்கல்வி நிறுவனங்களின் தொலைபேசித் தொடர்பு இலக்கங்கள் பக்கம் 283இல் தரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் குறித்த கற்கைநெறிக்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு செயன்முறை / உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைவதற்கு மேலதிகமாக உரிய கற்கைநெறியின் வெட்டுப் புள்ளித் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்திருப்பதும் கட்டாயமாகும்.

| கற்கைநெறி | பல்கலைக்கழகம்/வளாகம்/நிறுவகம் | Uni Code |
|---|---|---|
| கலை (SP) - வெகுசன ஊடகம் | கொழும்புப் பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகம் | 020S |
| கலை (SP) - அரங்கேற்றல் கலை | கொழும்புப் பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகம் | 041S |
| கட்டடக்கலை | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 023G |
| வடிவமைப்பு | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 024G |
| முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் | களனிப் பல்கலைக்கழகம் | 027D |
| நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 034G |
| தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | 038K |
| தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் | யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகம் | 038R |
| கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 065U |
| தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 066U |
| இசை | இராமநாதன் நுண்கலைக்கழகம் | 068X |
| இசை | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 068Y |
| இசை | கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 068Z |
| நடனம் | இராமநாதன் நுண்கலைக்கழகம் | 069X |
| நடனம் | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 069Y |
| நடனம் | கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 069Z |
| சித்திரமும் வடிவமைப்பும் | இராமநாதன் நுண்கலைக்கழகம் | 070X |
| நாடகமும் அரங்கமும் | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 071Y |
| நாடகமும் அரங்கமும் | கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 071Z |
| கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும் | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 072Y |
| கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 075U |
| உடற்றொழில் கல்வி | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 081E |
| உடற்றொழில் கல்வி | இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம் | 081L |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 082C |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 082D |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம் | 082L |
| பேச்சும் செவிமடுத்தலும் விஞ்ஞானம் | களனிப் பல்கலைக்கழகம் | 083D |
| கட்புலக் கலை | கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 085Z |
| விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 090U |
| தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 091G |
| தகவல் முறைமைகள் | கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்லூரி | 096T |
| நிலத்தோற்றக் கட்டிடக்கலை | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 097G |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | களனிப் பல்கலைக்கழகம் | 098D |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 098E |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை | 098H |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம் | 098L |
| சினிமா தொலைக்காட்சி பற்றிய கற்கைகள் | களனிப் பல்கலைக்கழகம் | 100D |
| நிதி பொறியியல் | களனிப் பல்கலைக்கழகம் | 110D |

**e. தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்கு பதிவினை மேற்கொள்ளல்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2020/2021ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த Z-பெறுபேறுகள் (வெட்டுப்புள்ளிகள்) வெளியிடப்பட்ட பின், தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகம் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படும். கல்வியாண்டு 2020/2021இற்கான பல்கலைக்கழக அனுமதிக் கைநூலின் 1.6(5), 1.6(6) மற்றும் 4.1ஆம் பந்திகளுக்கமைய மாணவன் தரப்பட்ட வாய்ப்பை ஏற்றுக்கொள்ள முடிவு செய்யின், வங்கியில் அல்லது இணையவழி ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்கிற்கு பதிவுக் கட்டணமான ரூபா 50 இனை வரவுவைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பதிவுசெய்வதற்கு வழங்கப்பட்ட இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் தாம் தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு பதிவுசெய்தல் வேண்டும்.

மேலும் இணையத்தினூடாக பதிவுசெய்யும்போது வங்கி மூலமாக கட்டணம் செலுத்தப்படின் ஸ்கேன் செய்யப்பட்ட கட்டணப் பற்றுச்சீட்டு பதிவேற்றப்பட்டு உறுதிசெய்துகொள்வதன் பொருட்டு இணையத்தினூடாக ப.மா.ஆ.இற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இணையதளத்தில் பதிவுசெய்த பின்னர், அச்சுப்பிரதி செய்யப்பட்டு சரியான முறையில் ஒப்பமிடப்பட்ட இணையதள பதிவுப் படிவத்துடன் (Online Payment Receipt) வங்கியில் செலுத்தியிருப்பின் தேவையான கொடுப்பனவை செலுத்தியமைக்கான அத்தாட்சிப்பத்திரத்தின் [Paying-in-Voucher] இனையும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**குறிப்பு 11 : தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறி, பல்கலைக்கழகத்திற்கு இணையவழி ஊடாக பதிவுசெய்தலும் 2020/2021ம் கல்வியாண்டிற்குக் கட்டாய தேவையாகும் என்பதை கருத்திற்கொள்க.**

**குறிப்பு 12 : பல்கலைக்கழக வளாகத்தினுள்ளும் வெளியிலும் பகிடிவதை உட்பட எல்லாவகையான வன்முறைகளில் இருந்தும் தவிர்ந்துகொள்வதாக சத்திய கடதாசி (Affidavit) ஒன்றினை தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்கு பல்கலைக்கழகத்தில் பதிவினை மேற்கொள்ளும்போது மாணவர்கள் அனைவரும் ஒப்பமிடுதல் வேண்டும். அந்த சத்திய கடதாசி மாணவரினாலும், அவர்களது பெற்றோரினாலும் ஒப்பமிடப்படல் கட்டாயமாகும். பெற்றோர் இல்லாத பட்சத்தில் மாணவர் மற்றும் மாணவரது சட்ட ரீதியான பாதுகாவலரினால் ஒப்பமிடப்பட வேண்டும்.**

**தலைவர்**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

## 2020/2021ம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விநியோக முகவர்கள்

**01. கொழும்பு -**
எஸ். கொடகே அன்ட் பிரதர்ஸ்,
675, மருதானை வீதி, கொழும்பு 10.
சதீபா புத்தக நிலையம்,
1060, மருதானை வீதி, பொரளை, கொழும்பு 08.
விஜிதா யாப்பா புத்தக நிலையம், 130,
எஸ்.டீ.எஸ். ஜயசிங்க மாவத்தை, கொஹுவல, நுகேகொட.
விஜிதா யாப்பா புத்தக நிலையம், யுனிட்டி பிளாஸா,
02, காலி வீதி, கொழும்பு 04.
விஜிதா யாப்பா புத்தக நிலையம்,
32, தேர்ஸ்டன் வீதி, கொழும்பு 03.
விஜிதா யாப்பா புத்தக நிலையம்,
G 6 A, கிரஸ்கட் பொல்வாட், கொழும்பு 03.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி.,
30, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி.,
44/9, வை.எம்.பீ.ஏ. கட்டடம், கோட்டே.
சரசவி புத்தக நிலையம் (கடை),
70/1/5, வை.எம்.பீ.ஏ. கட்டடம், பொரளை.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி.,
74, ஹைலெவல் வீதி, மஹரகம.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி.,
92A, பாராளுமன்ற வீதி, பொலவத்த, பத்தரமுல்ல.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி.,
592, மருதானை வீதி, கொழும்பு 10
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்)லிமி.,
4ஆம் மாடி, வன் கோல்பேஸ் மால், கொழும்பு 02
சசிரி பிரைவேற் லிமி.,
14, ஹைலெவல் வீதி, மஹரகம.
பாலசிங்கம் புத்தகசாலை,
340, செட்டியார் தெரு, கொழும்பு 11.
துசித்த புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி.,
433 Q, காலி வீதி, ரத்மலானை.
சித்துறுவன புத்தக நிலையம்,
08, இங்கிரிய வீதி, பாதுக்க.
விக்டரி புத்தக நிலையம்,
21, யட்டியந்தோட்ட வீதி, அவிசாவலை.
சித்துமின புத்தக நிலையம்,
62, பிரதான வீதி, அத்துருகிரிய.
சமுத்ரா புத்தக நிலையம்,
இல. 1141, மருதானை வீதி, பொரளை.
நலன்புரி சங்கம், ப.மா.ஆ.,
இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு 07.
சந்தலி புத்தக நிலையம்,
76/4, சேனாநாயக்க கட்டிடத் தொகுதி, ஹோமாகம.
ஸ்டைலீஸ் புத்தக நிலையம்,
18/B, டி மெல் லேன், மொரட்டுவ.
ஒனேரோ பொத் மெதுர,
87 ஹைலெவல் வீதி, மஹரகம.
கிரந்தாலோக அச்சகம் மற்றும் புத்தக நிலையம்,
12, ஹைலெவல் வீதி, கொட்டாவ, பன்னிபிட்டிய.
சரசவி நிலையம் (பிரைவேற்) லிமி.,
02, ஸ்டென்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி.,
02B, சமுத்ராதேவி மாவத்தை, நுகேகொட.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி.,
24, ஹில் வீதி, தெஹிவளை.
சரசவி நிலையம்
20A, ஹில் வீதி, தெஹிவளை.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி.,
70/1/2, Y.M.B.A. கட்டிடம், கொழும்பு 8.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி.,
14, உத்யான வீதி, பிலியந்தல
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி.,
இல. 47, இக்கொனமிக் சென்டர், நாரஹேன்பிட்டி.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி.,
147, புனித. மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 3.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., மகளிர் கல்லூரி,
இல. 66, ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 7.
சரசவி புத்தக நிலையம்,
16 ஹொரன வீதி, பாதுக்க.
நியாகயான் புத்தக நிலையம்,
இல. 14, ஹைலெவல் பிளாசா டெல்கந்த, நுகேகொட.
நியூ சேனாதீர புத்தக நிலையம்,
இல. 13, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
ஆசிரி புத்தக நிலையம்,
இல. 10, பாதுக்க வீதி, கொடகம, ஹோமாகம.
சிதுருவன புத்தகசாலை (பிறைவட்) லிமி,
61, பிரதான வீதி, ஹங்வெல்ல
சிதுருவன புத்தகசாலை (பிறைவட்) லிமி,
112, ஹைலெவல் வீதி, மீப்பே சந்தி, பாதுக்கை
சிதுருவன புத்தகசாலை (பிறைவட்) லிமி,
20, எம்.டி.எச்.ஜயவர்தன மாவத்தை, ஹொரன வீதி, பாதுக்கை
சரசவி புத்தகசாலை (பிறைவட்) லிமி,
1/50, வை.எம்.பி.ஏ. கட்டடம், பொரளை
சரசவி புத்தகசாலை (பிறைவட்) லிமி,
82, மொறட்டுவ வீதி, பிலியந்தல
சரசவி புத்தகசாலை (பிறைவட்) லிமி,
175, ஹொரண வீதி, கொட்டாவ, பன்னிபிடிய
சரசவி புத்தகசாலை(பிறைவட்) லிமி,
413, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07
மெக்மிலன் புத்தகசாலை,
195, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 11
சுசார வெளியீடுகள்(பிறைவட்)லிமி,
180/43, பீபள்ஸ் பார்க், கொழும்பு 11
சுசார வெளியீடுகள்(பிறைவட்)லிமி,
65, மாகொல வீதி, கிரிபத்கொட
எம்.டீ.குணசேன & (பிறைவட்) லிமி,
217, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 11.
எம்.டீ.குணசேன & (பிறைவட்) லிமி,
27, காலி வீதி, பம்பலப்பிட்டி.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி,
1129, மருதானை வீதி, கொழும்பு 08.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி,
239, கில் வீதி,தெஹிவலை.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி,
04, கண்டி வீதி, கிரிபத்கொட.
எம்.டீ.குணசேன & (பிறைவட்) லிமி,
சிஎம்எஸ் மகளிர் பாடசாலை,
66, ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த, கொழும்பு 07
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி,
133D, வஜிர வீதி, கொழும்பு 05.
எம்.டீ.குணசேன & (பிறைவட்) லிமி,
20, சென் செபஸ்டியன் மலை, கொழும்பு 12.
எம்.டீ.குணசேன & (பிறைவட்) லிமி,
73, இரத்தினபுர வீதி, அவிசாவளை.

**02. கம்பஹா-**
கே.ஏ. ஆரியதாஸ அன்ட் கொம்பனி,
32, பிரதான வீதி, வெயன்கொட.
சம்பத் பாலித டீ சேரம் புத்தக நிலையம்,
60, சம்பத் நிதி கட்டிடம், கண்டி வீதி, கிரிபத்கொட
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி.,
87, மினுவன்கொட வீதி, கம்பஹா.
விஜிதா யாப்பா புத்தக நிலையம்,
135, ராஜபக்ஷ புரோட்வே, நீர்கொழும்பு.
றோஹன புத்தக நிலையம் மற்றும் ஹார்ட்வேர் ஸ்டோர்ஸ்,
புதிய கண்டி வீதி, தெல்கொட.
கங்கா புத்தகசாலை, 134, கண்டி வீதி, நிட்டம்புவ.
சரசவி புத்தக நிலையம், இல.36, பிரதான வீதி, கம்பஹா.
பேர்னோ ஸ்டேசனர்ஸ், இல.92, நீர்கொழும்பு வீதி, ஜா-எல.
மஹாஜன புத்தக நிலையம்,
141, சேரம் கட்டடம், கண்டி வீதி, கடவத்த.
திஸ்னா புத்தக நிலையம், 650, அத்தனகல வீதி, நிட்டம்புவ.
வன்மினி புத்தக நிலையம், 20/5, பஸ்யால வீதி, மீரிகம.
மின்சர புத்தக நிலையம், 12, வாடி வீட்டு வீதி, கம்பஹா.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி.,
134A, பழைய நீர்கொழும்பு வீதி, வத்தளை
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி.,
151/1, கண்டி வீதி, கிரிபத்கொட.
பொன்சேகா புத்தக நிலையம்,
77, சிலாபம் வீதி, கொச்சிக்கடை.
புதிய ஆசிரி புத்தக நிலையம்,
இல 18, திவுலபிட்டிய வீதி, மினுவங்கொட
சமனல ரீட்ரய்ட் இன்டனசனல் (பிரைவேட்) லிமி.,
19, சிறிவர்தன மாவத்த, மினுவங்கொட
சமனல ரீட்ரய்ட் இன்டனசனல் (பிரைவேட்) லிமி,
இல 136, நீர்கொழும்பு வீதி, நாகொட, கண்டான.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி,
7B, மங்கள வீதி, கம்பஹா.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி,
இல 64, டீ குரூஸ் வீதி, நீர்கொழும்பு.
விஜிதா யாபா புத்தக நிலையம்,
நீர்கொழும்பு அச்சகம், நீர்கொழும்பு.

**03. களுத்துறை-**
ஒகிட் என்டர்பிரைசஸ்,
109, அங்குறுவத்தோட்ட வீதி, ஹொரணை.
விஜய புத்தக நிலையம், இல. 20, அளுத்கம வீதி, மத்துகம.
விஜய புத்தக நிலையம்,
இல. 54E , பிரதான வீதி, களுத்தறை தெற்கு.
லக் இசுறு (பிரைவேற்) லிமி., 324, பிரதான வீதி, பாணந்துறை.
நியு பிரதீபா புத்தக நிலையம்,
51/C களுத்துறை வீதி, பண்டாரகம.
வாத்துவ புத்தக நிலையம், காலி வீதி, வாதுவ.
லுமினேக்ஸ் கிரோசர்ஸ், (பிரைவேற்) லிமி.,
465, காலி வீதி, பாணந்துறை.
கொடகே அன்ட் பிரதர்ஸ், 507, காலி வீதி, பாணந்துறை.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி.,
41, அங்கறுவத்தொட்ட வீதி, ஹொரன
விஜய பத்திரிகைக் கடை, இரத்தினபுரி வீதி, பதுரெலிய
சவிது புத்தகசாலை, இல.20, இரத்தினபுரி வீதி, இங்கிரிய
ரன்சிக்க புத்தகசாலை,
437/18, மதுகம வீதி, அம்பகா சந்தி, தர்கா நகர்.
எம்.டீ.குணசேன & (பிறைவட்) லிமி,
இல 377 D காலி வீதி, பாணந்துறை.
எம்.டீ.குணசேன & (பிறைவட்) லிமி,
இல 92, காலி வீதி, களுத்தறை தெற்கு.
சரசி புத்தக நிலையம், இல. 05, காமினி வீதி, மத்துகம.
பத்திரிகைக் கடை,
இல.03, தும்பிரியபொல வீதி, களுத்தறை தெற்கு.
காலி புத்தகசாலை மற்றும் விநியோகஸ்தர்கள்,
இல. 91, அங்கறுவத்தொட்ட வீதி, ஹோரன.

**04. மாத்தளை-**
மாலக்க டிரேடர்ஸ் (பிரைவேற்) லிமி.,
55/57, பிரதான வீதி, மாத்தளை.
அமரசிங்க அன்ட் சன்ஸ், இல.7, தம்புள்ள வீதி,
மாத்தளை சந்தி, கலேவெல.
சுமகா புத்தக நிலையம், 6, மாத்தளை வீதி, உக்குவளை.
புதிய ஜயதிஸ்ஸ புத்தக நிலையம், 469, குருனாகல சந்தி, தம்புள்ளை

**05. கண்டி-**
விஜிதா யாப்பா புத்தக நிலையம்,
05, கொட்டுகொடல்ல வீதி, கண்டி.
தவச பொத் மெதுர, இல. 12, நுவரெலியா வீதி, கம்பொல.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி.,
86, டி.எஸ்.சேனநாயக்க வீதி, கண்டி.
லங்கா மத்திய புத்தகசாலை, 84, கொழும்பு வீதி, கண்டி.
சமுத்திர புத்தக நிலையம், பேராதெனிய வீதி, கண்டி.
சமுத்திர புத்தக நிலையம்,
இல 74, டி.எஸ்.சேனநாயக்க வீதி, கண்டி
சீவலி புத்தகசாலை, இல.16, யட்டினுவர வீதி, கண்டி.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி.,
21, லெவல் 2, கண்டி சிட்டி சென்டர், கண்டி.
மு.ஆ.யு புத்தக நிலையம், 56, மாத்தளை வீதி, அக்குறனை.
எம்.டீ.குணசேன & (பிறைவட்) லிமி,
இல 33, யட்டி நுவர வீதி, கண்டி.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி,
இல 104, கொழும்பு வீதி, கண்டி.
விஜிதா யாபா புத்தக நிலையம்,
இல 20, 2ஆம் மாடி, கண்டி சிட்டி சென்டர், கண்டி.

**06. நுவரெலியா-**
சீப்சைட் புத்தக நிலையம், 40, கம்பொல வீதி, நாவலப்பிட்டி.
சரசவி மின் உபகரணம் மற்றும் புத்தக நிலையம்
இல 06, கண்டி வீதி, ரிகிலகஸ்கட

**07. காலி-**
விஜிதா யாபா புத்தக நிலையம்,
இல. 12, வக்வெல்ல வீதி, காலி.
ரோயல் புத்தகசாலை, 152, பிரதான வீதி, அம்பலாங்கொடை.
விதான புத்தக நிலையம், 04, பத்தேகம வீதி, வந்துரம்ப.
சேன புத்தக நிலையம், எல்பிட்டிய.
கமகே புத்தக நிலையம், இல. 20, நாகொட வீதி, பத்தேகம.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி.,
1ஆவது மாடி, மத்திய பஸ் நிலையம், காலி.
எம்.டீ.குணசேன & (பிறைவட்) லிமி,
இல 02, மாத்தரை வீதி, காலி.
வெனச புத்தக நிலையம், ஹங்கொடவத்த, யக்கலமுல்ல, காலி.

**08. மாத்தறை-**
எச்.பீ.எரமானிஸ் அப்புஹாமி அன்ட் சன்ஸ்,
87, தர்மபால மாவத்தை, மாத்தறை.
வீரசிங்க புத்தக நிலையம், மாத்தறை வீதி, கம்புறுபிட்டய.
சரசவி புத்தக நிலைம் (பிரைவேட்) லிமி.,
4, ஸ்டேசன் வீதி, மாத்தறை.
விஜிதா யாபா புத்தக நிலையம்,
05A –1/1, தர்மபால மாவத்தை, மாத்தறை.
விஜிதா யாபா புத்தக நிலையம்,
இல 10, ஹக்மான வீதி, மாத்தறை.
லஸ்ஸன புத்தக நிலையம், தெனியாய வீதி, மொரவக்க.
ஷஸ்கோ டேட்டா பியுரோ அன்ட் புக் ஷொப்,
93, வேல்ட் மார்க்கட், அக்குரஸ்ஸ.
சமுத்ரா புத்தக நிலையம், 127, S.K.சினிமா கட்டிடம்,
தங்கல்ல வீதி, கொட்டுவேகொட, மாத்தறை.
சமுத்திர புத்தக நிலையம், இல 128, எஸ்.கே.சினிமா கட்டிடம்,
கொட்டுவேகொட, மாத்தறை அபேவிக்ரம புத்தக நிலையம்,
வீரகோன் வத்த, ஊறுபொக்க.
ரசிக்க புத்தக நிலையம்,
50A, அக்குறஸ்ஸ வீதி, ராஹூல சந்தி, மாத்தறை.
சுசர பதிப்பகம் (பிறைவட்) லிமி,
இல14, ஆரியரத்ன கட்டிடம், ஹக்மான வீதி, மாத்தறை.
எம்.டீ.குணசேன & (பிறைவட்) லிமி,
இல.27, அனாகரீக தர்மபால மாவத்தை, மாத்தறை.

**09. ஹம்பாந்தோட்டை-**
முத்துமால புத்தக நிலையம், 117, பிரதான வீதி, தங்காலை.
எம்.ஏ.எஸ். டிரேடர்ஸ், 24, சுப்பர் மார்க்கட், வலஸ்முல்ல.
நியு சுமிஹிரி டிரேட் சென்டர்,
இல. 11, பிரதான வீதி, அம்பலந்தொட்ட.
நியு லஹிரு புத்தக நிலையம், இல. 562, ஹம்பந்தொட்ட வீதி,
கங்கசிரிபுர, திஸ்ஸமஹாராம.
ஆபயசிங்க புத்தக நிலையம், தலவா வீதி, மிடியெனிய.
சீவலி புத்தக நிலையம், பாடசாலை வீதி, சூரியவெவ நகரம்.

**10. யாழ்ப்பாணம்-**
பூபாலசிங்கம் புத்தகசாலை,
04, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

**11. வவுனியா-**
இராமச்சந்திராஸ், 20A, பஸ் நிலைய தொகுதி, வவுனியா.

**12. திருகோணமலை-**
ரெயின்போ மினி லாப் (பிரைவேற்) லிமி.,
113, வித்தியாலயம் வீதி, திருகோணமலை.
சுர்பா கொமினியுகேசன் ஸ்டேசனரி அன்ட் மல்டி டிரேட்ஸ்,
160, பிரதான வீதி, கிண்ணியா.

**13. மட்டக்களப்பு-**
R.D. புத்தக நிலையம், தங்கமணிப்பதி, இல 05, பிரதான
வீதி, பெரியகல்லார் – 02 (30250), கல்லார்

**14. அம்பாறை-**
போட்டோ ரியோ, 120A, பிரதான வீதி, கல்முனை.
சென்ரல் புத்தக நிலையம், பொத்துவில் வீதி, அக்கரைப்பற்று.
ப்ளஸ் கொம், 84/B/1, G.M.M.S. வீதி, சாய்ந்தமருது - 11.
மேகாலைன் மெகா புத்தக நிலையம் மற்றும் ஸ்டேசனரி,
53, பிரதான வீதி, கல்முனை.

**15. புத்தளம்-**
சமந்தி புத்தக நிலையம், 39, மாரவில வீதி, நாத்தாண்டியா.
த பேப்பர் ஹவுஸ், 12, கொழும்பு வீதி, புத்தளம்.
மயுர புத்தக நிலையம், 8, கொழும்பு வீதி, சிலாபம்.
அக்மினி புத்தக நிலையம்,
இல. 3/5, தனியார் பஸ் நிலையம், சிலாபம்
ரம்பசேவன புத்தக நிலையம், வென்னப்புவ.
A to Z புத்தக நிலையம், இல.230, மன்னார் வீதி, புத்தளம்.
ரெட்சி புத்தகசாலை,
02, மக்கள் வங்கி அண்மையில், நாத்தாண்டிய

**16. குருநாகல்-**
சமுத்ர புத்தக நிலையம், 10, புத்தளம் வீதி, குருநாகல்.
சமுத்ர புத்தக நிலையம், 8/2, மிகுந்து மாவத்தை, குருநாகல்.
சமுத்ர புக் கியுரியோ, இல 25/27, புத்தள வீதி, குருநாகல்.
சமுத்ர புத்தக நிலையம்,
இல 04, ராஜபில மாவத்தை, குருநாகல்.
சரசவி மார்கட்டிங் என்டர்பிரைஸ்,
135, கொழும்பு வீதி, குருநாகல்.
சத்துரங்க புத்தக நிலையம், இல. 60, குருநாகல் வீதி, பன்னல.
மிகிர புத்தக நிலையம், 41, சிலாப வீதி, வாரியபொல.
சமாதி புத்தக நிலையம், 7-8, புதிய பஸ் நிலையம், கல்கமுவ.
பவித்ரா பொத்ஹல, பிரதான வீதி, மஹவ.
சம்பத் புத்தக நிலையம், 49, கொழும்பு வீதி, குருநாகல்.
சரசவி புத்தக நிலையம், இல. 56, கொழும்பு வீதி, குருநாகல்.
ஹன்சித்த புத்தக நிலையம்,
43/1, குருநாகல் வீதி, வாரியபொல.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி,
இல 67, கொழும்பு வீதி, குருநாகல்.
குமுதித்த புத்தக நிலையம்,
101/C, புத்தள வீதி, நிக்கவரட்டிய

**17. அனுராதபுரம் -**
குணசேகர அன்ட் கோ, 234, மைத்திரிபால சேனநாயக்க
மாவத்தை, அனுராதபுரம்.
புத்திக புத்தக நிலையம்,
282, பிரதான வீதி, பேங் பிளேஸ், அனுராதபுரம்.
முத்துகுட பேப்பர் கோணர் அன்ட் பிரின்டர்ஸ்,
நியூ டவுண், தம்புத்தேகம.
பேண்டா ஹவுஸ், தலாவ வீதி, எப்பாவல

**18. பொலன்னறுவை-**
தீபனி புத்தகசாலை, 70, பொதுச் சந்தை, ஹிங்குரக்கொடை.
நியு தீபனி புத்தகசாலை, 125, டீ.எஸ்.சேனாநாயக வீதி ,
ஹிங்குரக்கொடை.
புவச புக் மெதுர, வைத்தியசாலை சந்தி, பொலன்னறுவை.
பிரியங்கர புத்தக நிலையம், 09, பிரதான வீதி, கதுறுவல.

**19. பதுளை-**
இசுறு பெயார், 80, நுவரெலியா வீதி, வெலிமட.
மகிந்தாஸ் புத்தக நிலையம், இல.50, 52, பஸார் வீதி, பதுளை.
விக்ரிக் மல்டி சொப் (பிரைவேற்) லிமி.,
இல.04, புத்த மாந்திர் வீதி, வெலிமட.
செனல்நெட் புத்தகசாலை, இல.06, பதுளை வீதி,
மகியங்கனய

**20. மொனராகலை-**
மைசன் டிரேட் சென்டர், 26, பிரதான வீதி, மொனராகலை.
ஏ.டீ.எஸ். ஏஜென்சீஸ், இல. 14, பிரதான வீதி, பிபில.
சுமதுர புத்தக நிலையம், 22, பொத்துவில் வீதி, மொனராகல.
சுகத புத்தகசாலை, திஸ்ஸ வீதி, வெல்லவாய.

**21. கேகாலை-**
ஸ்ரீலங்கா புத்தக நிலையம், 89, நீதிமன்ற சந்தி, கேகாலை.
தர்மவர்தன புத்தக நிலையம், பஸ் தரிப்பு,
இல. 1, கீழ்த்தளம், அங்குறுவெல, றுவன்வெல.
லங்கா புத்தக நிலையம், 122, பிரதான வீதி, வறக்காபொல.
A J கொமியுனிகேசன் அன்ட் புத்தகசாலை,
21A, நீதிமன்ற வீதி, மாவனெல்ல.
ஜயந்தி புத்தக நிலையம்,
இல. 132, பிரதான வீதி, மாவனெல்ல.
கல்யாணி புத்தக நிலையம்,
இல.44, பிரதான வீதி, ருவன்வெல்ல.
லங்கா புத்தக நிலையம்,
50/10B, அங்குருவெல்ல வீதி, வரகாபொல
சமகி புத்தக நிலையம், பிரதான நகர நிலையம்,கலிகமுவ

**22. இரத்தினபுரி-**
கருணாரத்ன பிரதர்ஸ், 16, தேவாலய வீதி, இரத்தினபுரி.
ஜினசிறி டிரேட் சென்ரர், 96, பிரதான வீதி, பலாங்கொட.
குருளு புத்தக நிலையம் & கொமினியுகேசன்,
79/G, பிரதான வீதி, பெல்மடுல்ல.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி., இல. 23/1,
செனவிரத்ன கட்டிடம், முதலாம் மாடி, கொழும்பு வீதி,
இரத்தினபுரி.
சுபசேகர ஸ்டோர்ஸ், 168A, பிரதான வீதி, கஹவத்த.
சிகின புத்தக நிலையம், பஸ் நிலைய வீதி, குருவிட்ட

**23. கிளிநொச்சி-**
அறிவுநதி புத்தக நிலையம்,
இல 06, கண்கபுரம் வீதி, கிளிநொச்சி

**20, வாட் பிளேஸ்,**
**கொழும்பு 07.**
**06.06.2021**

# இலக்கிய சங்கமம்

sangamamjeeva@gmail.com
ஜீவா சதாசிவம்

## யாழ். மக்களின் மரபுவழிக்கலையை பாதுகாத்தவர் அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜா

சொந்த மண்ணில் வாழ்ந்து பணியாற்றும் அண்ணாவியார் அ.பேக்மன் ஜெயராஜா ஆவார். நாட்டுக்கூத்து மற்றும் நாடகங்களை எமது தமிழ் மக்களின் பாரம்பரிய சொத்து எனலாம். இவற்றை அழியவிடாது பாதுகாத்து இளைஞர்கள் மற்றும் யுவதிகளைப் பழக்கி யாழ். திருமறைக் கலா மன்றத்திலும் மற்றும் பல கிராமங்களிலும், பாடசாலைகளிலும் தொடர்ந்து ஆர்வத்துடன் செயற்பட்டு வருபவர் அண்ணாவியார் அ.பேக்மன் ஜெயராஜா.

21-10-1945 இல் பிறந்த இவர் தமது 24ஆவது வயதில் அதாவது 1969ஆம் ஆண்டு அண்ணாவியார் வின்சன் டி.போலின் நெறியாள்கையில் சஞ்சுவாம் நாட்டுக்கூத்தில் நடித்தபோது இவரது குரல் வளத்தை அவதானித்த மறைந்த அண்ணாவியார் கலாநிதி பூந்தான் யோசேப்பு, 'கருங்குயில் குன்றத்துக்கொலை' என்னும் நாட்டுக்கூத்தில் பிரதான பாத்திரத்தை ஏற்று நடிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

அதன்பின்பு யாழ். நவரச நாட்டுக்கூத்துக் கலா மன்றத்தின் உதவிச் செயலாளராக இணைந்து அன்றைய நாட்களில் நாட்டுக்கூத்தில் பிரபலமாக இருந்த அண்ணாவிமார்கள் கலாநிதி பூந்தான் யோசேப்பு, பக்கிரி சின்னத்துரை, சாமிநாதர் குணசிங்கம், பாவிலுப்பிள்ளை, இராசாதம்பி, அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளை, வின்சன் டி போல், பெலிக்கான், செல்வம், நாரந்தனை அருளப்பு, மயிலிட்டி மனப்பு மற்றும் பலருடன் சேர்ந்து இணையாகப் பாடி நடித்துப் பாராட்டுகளைப் பெற்றார்.

அது மட்டுமல்ல, கொழும்புத்துறையில் நடிக்கப்பெற்ற சங்கிலியன் என்னும் நாட்டுக்கூத்தில் அப்பொழுது யாழ். மறைமாவட்ட ஆயராக இருந்த அதிவண, தியோகுப்பிள்ளை ஆண்டகையால் 'இசைக்குயில்' பட்டம் வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

அண்ணாவியார் கலாநிதி பூந்தான் யோசேப்பு காலமாகிய பின்பு நாட்டுக்கூத்தை அழியாது பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தனது நண்பர் நடிகர் பிரான்சிஸ் ஜெனத்துடன் சேர்ந்து யாழ். நவரச நாட்டுக்கூத்துக் கலா மன்றத்தை நடத்தி வந்தார். அத்துடன் மேலே கூறப்பட்ட அண்ணாவிமார்களை அழைத்து தேவசகாயம்பிள்ளை இ.எஸ்.தாக்கியார் போன்ற நாடகங்களை மேடையேற்றி மக்களின் பாராட்டுகளைப் பெற்றார்.



அத்துடன் நின்றுவிடாது யாழ். மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் ஒவ்வொரு கிராமமாக (சில்லாலை, மயிலிட்டி, ஒட்டகப்புலம், வசாவிளான், அச்சுவேலி, பலாலி, தாளையாடி, கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களுக்கு) சென்று பல கலைஞர்களையும், இளைஞர்களையும், யுவதிகளையும் இணைத்து பல நாட்டுக் கூத்துக்களைப் பழக்கி மேடையேற்றினார்.

அந்நாட்களில் இலங்கை வானொலியில் நாட்டுக்கூத்துப் பொறுப்பாதிகாரியாயிருந்த வீ.ஏ.சிவஞானத்தின் வேண்டுகோளுக்கிணங்க பல நாட்டுக்கூத்துக் கலைஞர்களை அழைத்துச்சென்று கொழும்பிலுள்ள இலங்கை வானொலியில் ஒலிப்பதிவு செய்ய உதவி புரிந்தார். 1988ஆம் ஆண்டு முதல் யாழ்.திருமறைக் கலா மன்றத்தில் இணைந்து நீ ஒரு பாறை, அனைத்தும் அவரே, தேவசகாயம்பிள்ளை, எஸ்தாக்கியார், இரத்தக்கடன் போன்ற பல கூத்துக்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்ததுமல்லாமல், தனது நண்பர் பாஷையூர் பாலதாஸுடன் சேர்ந்து பல கூத்துக்களை நெறிப்படுத்தியதையும் இவர் நினைவுகூர்ந்தார்.

யாழ்.திருமறைக் கலாமன்ற இயக்குனர் அருட்கலாநிதி நீ.மரிய சவரி அடிகளாரின் வேண்டுகோளுக்கிணங்க பல நாடகங்களில் நடித்ததுமல்லாமல், ஒப்பனைப் பொறுப்பாளனாகவும் கடமையாற்றி இவர் பல பெண்களுக்கு நாட்டுக் கூத்தில் ஆர்வத்தினை ஏற்படுத்தி, நடிக்கும் வாய்ப்பினையும் உருவாக்கி உதவி புரிந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தால் வருடா வருடம் மேடையேற்றப்படும் இயேசுவின் திருப்பாடுகள் காட்சிகள் பழைமை வாய்ந்த சிந்தாகுலத்திரட்டு, பஞ்சவர்ணத்தூது, பேரின்பக் காதல் போன்ற புத்தகத்திலுள்ள ஒப்பாரி இராகத்தைப் பாடி 'காட்சியும் கானமும்' என்ற பெயரில் மேடையேற்ற உதவி புரிந்தார். இவர் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவன ஊழியராக கடமையாற்றிய போதிலும் வார இறுதி நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் தனது குடும்பப் பொறுப்புகளோடு, தனது நேரத்தை கலைப் பணிக்காகவே மிக அர்ப்பணிப்புடன் செலவு செய்தமை பாராட்டத்தக்கது.

1997 மற்றும்1998ஆம் ஆண்டுகளில் திருமறைக் கலாமன்றம் 'வடலிக்கூத்தர், கலைப்பயணம்' என்ற பெயரில் பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், நெதர்லாந்து, சுவிஸ், இத்தாலி, போன்ற நாடுகளுக்கு கலைப்பயணம் சென்றபோது அப்பயணத்தில் இணைந்து நாடகங்களில் நடித்து அதிக அனுபவத்தினைப் பெற்றதாகவும் இவர் குறிப்பிடுகிறார். கூத்துக்களில் மட்டுமன்றி யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் 'பலிக்களம்' என்னும் இயேசுவின் திருப்பாடுகளின் நாடகத்தில் அன்னாஸ் பாத்திரமாகவும், 'ஜீவப்பிரயத்தனம்' என்னும் நவீன நாடகத்தில் யாழ்ப்பாடியாகவும் 'ஒற்றுமையே பலம்' என்னும் சிறுவர் நாடகத்தில் முக்கிய பாத்திரத்தையும் ஏற்று நடித்ததைப் பெருமையுடன் நினைவுகூர்கிறார்.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் இளம் எழுத்தாளர்கள் மற்றும் நடிகர்களாகிய ஜோன்சன் ராஜ்குமார், சாம் பிரதீபன் ஆகியோரை ஊக்கப்படுத்தி அவர்களைக்கொண்டு சோழன் மகன், கம்பன் மகன் போன்ற நாட்டுக் கூத்துக்களை அச்சேற்றுவதில் முக்கிய பங்காற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது கலைப் பணியைப் பாராட்டி 2005ஆம் ஆண்டு யாழ்.திருமறைக் கலாமன்றம் 'கலைஞானபூஷணன்' என்னும் பட்டத்தையும், 2006 ஆம் ஆண்டு யாழ்.பிரதேச செயலகம் 'யாழ். இரத்தினா' என்ற விருதையும் வழங்கிக் கௌரவித்தது.

இறுதியாக இக்கலைஞருடைய வாழ்க்கையில் மறக்க முடியாத நாளாக கடந்த 14-12-2010 ஆம் நாள் அமைந்தது. கொழும்பில் நடந்தேறிய கலைஞருக்கான பாராட்டு விழாவில் இவருக்கு 'கலாபூஷணம்' விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். நாடகத்தையும் நடித்து, யாழ். மக்களின் மரபுவழிக்கலையை ஒருபோதும் அழியவிடக் கூடாது என்று முனைப்புடன் தொடர்ந்து செயற்பட்டு வந்த இவர் மே மாதம் 28 ஆம் திகதி இவ்வுலகை விட்டு மறைந்தார்.

**நன்றி: தாய்வீடு**

## இலக்கியப் போட்டிகள்!

ஞானம் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரனின் 80 ஆவது அகவையை முன்னிட்டு ஞானம் சஞ்சிகை நடத்தும் மாபெரும் இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளக. 2000ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை வெளிவந்த சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கான பரிசுப் போட்டிகள் ஆறு பிரிவுகளில் நடைபெறுகின்றன.

முதற் பிரிவு : நாவல், குறுநாவல், குறுநாவல் தொகுப்பு, இரண்டாம் பிரிவு : சிறுகதை - குறைந்தது 9 சிறுகதைகள் உள்ளடங்கிய சிறுகதைத் தொகுப்பு, மூன்றாம் பிரிவு : கவிதை - கவிதைத் தொகுப்பு - மரபுக் கவிதை, புதுக்கவிதை, காவியம், நான்காம் பிரிவு : கட்டுரை - பொருட்பரப்பு எதுவாகவும் இருக்கலாம், ஐந்தாம் பிரிவு : ஈழத்துப் பழந்தமிழ் ஆய்வு - பல்கலைக்கழக மாணவர்களுக்குரியது, ஆறாம் பிரிவு : ஈழத்துச் சிற்றிதழ்.

**போட்டிகளுக்கான விதிமுறைகள் :**

ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் எவரும் இப்போட்டிகளில் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுப் போட்டிகளில் கலந்துகொள்ளலாம். ஆனால், ஒரு பிரிவுக்கு ஒரு படைப்பை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

போட்டி முடிவுத் திகதி 30-06-2021.

அதன் பின்னர் வந்துசேரும் படைப்புகள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஞானம் ஆசிரியர் குழுமத்துடன் போட்டி தொடர்பான கடிதம், தொலைபேசித் தொடர்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

**ஞானம் பதிப்பகத்தின் நூல்கள்**

இப்போட்டிக்கு ஞானம் பதிப்பகத்தின் மூலம் வெளிவந்த எந்த நூலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அனுப்பவேண்டிய முகவரி – Editor, Gnanam, 3-B, 46th Lane, Colombo 06, Sri Lanka. என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். தபால் மேலுறையின் இடதுபக்க மூலையில் பங்குபற்றும் போட்டிப் பிரிவின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். நடுவர் குழுவின் முடிவே இறுதியானது.

**பிரிவு 1 - 4 மேலதிக விதிமுறைகள் :**

ஆகக் குறைந்தது 80 பக்கங்கள் கொண்ட நூல்களாக இருத்தல் வேண்டும். நூலின் இரண்டு பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும். போட்டியாளர்கள் தமது இலக்கிய முயற்சிகள் உள்ளடங்கிய தம்மைப்பற்றிய சிறுகுறிப்பு ஒன்றினையும் அவர்கள் வெளியிட்ட நூல்களின் பட்டியலையும் வேறாக இணைத்தல் வேண்டும்.

**பிரிவு 5 மேலதிக விதிமுறைகள் :**

தற்போது பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் மட்டுமே இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். இப்போட்டிக்கென எழுதப்பட்ட ஈழத்துப் பழந்தமிழ் இலக்கியம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மாத்திரமே போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும். பட்டப்படிப்புக்கு சமர்ப்பித்த ஆய்வுகளையோ, அதன் பகுதிகளையோ அனுப்ப முடியாது.

ஆய்வுக்கட்டுரைகள் ஆகக் குறைந்தது A4 தாளின் 40 பக்கங்களில் தட்டச்சு செய்து 2 பிரதிகளை அனுப்புதல் வேண்டும். அனுப்பப்படும் ஆய்வு அவரால் எழுதப்பட்டது என்பதற்கான பல்கலைக்கழகத் துறைத்தலைவரின் உறுதிக் கடிதமும் இணைக்கப்படல் வேண்டும்.

**பிரிவு 6 மேலதிக விதிமுறைகள் :**

போட்டியில் பங்குபற்றும் சிற்றிதழின் ஆசிரியர் ஈழத்தில் பிறந்தவராக இருத்தல் வேண்டும். (1) சிற்றிதழ் பற்றிய சிறுகுறிப்பு (2)இதுவரை காலமும் வெளிவந்த இதழ்களின் அட்டைப்படம், பொருளடக்கம், ஆசிரியத் தலையங்கம் ஆகியவற்றின் புகைப்படப் பிரதிகள் (3) வெவ்வேறு காலங்களில் வெளிவந்த 10 இதழ்களின் இரண்டு பிரதிகள் ஆகியவற்றை இணைத்தல் வேண்டும்.

ஒவ்வொரு பிரிவுக்கும் வெவ்வேறாக பரிசுத் தொகைகளும் பரிசுச் சான்றிதழ்களும் வழங்கப்படும். முதற்பரிசு ரூபா 25,000/= இரண்டாம் பரிசு ரூபா 15,000/= மூன்றாம் பரிசு ரூபா 10,000/=

## 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்திய திறனாய்வுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள்

கனடாவில் வசிக்கும் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான குரு அரவிந்தன் வாசகர் வட்டம் நடத்திய திறனாய்வுப் போட்டி 2021 முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கமைவாக,

முதலாவது தொடக்கம் ஐந்தாவது பரிசுகளை முறையே நரேஸ் நியூட்டன், களுபோவிலை, (25,000 ரூபா), சிவனேஸ் ரஞ்சிதா, கெக்கிராவ, (20,000 ரூபா), மு.முருகேஷ், வந்தவாசி, தமிழ்நாடு (15,000 ரூபா), ஆ.பெ. ஸ்ரீ கந்தநேஷன், யாழ்ப்பாணம் (10,000 ரூபா), ப.சுப்ரபாரதிமணியன், திருப்பூர், தமிழ்நாடு (7,500 ரூபா) ஆகியோருக்கு இலங்கை ரூபாவிலேயே பரிசுத்தொகை வழங்கப்படவுள்ளது.

15 பாராட்டுப் பரிசுகள் தலா 5,000 வீதம் இலங்கை ரூபா:-

அனுராதா பாக்கியராஜா, வெள்ளவத்தை, (இலங்கை), முனைவர் சகோ.ஜா.அருள் சுனிலா, பெரியகுளம், தேனி, (தமிழ்நாடு), மு.இப்றாஹிம் பாத்திமா றுஸ்தா, காத்தான்குடி, (இலங்கை), கிறகறி பஞ்சரத்தினம் வேதநாயகம், வார்விக்ஷயர், றக்பி, (ஐக்கிய இராச்சியம்), மணி.க.மேற்கு மாம்பலம், சென்னை- 600033, (தமிழ்நாடு), மேகநாதன்.பெ. போடி நாயக்கனூர், தேனி மாவட்டம், (தமிழ்நாடு), முஹம்மது ஹனிபா முஹம்மது ஷர்பான், ஓட்டமாவடி, (இலங்கை, நளாயினி நந்தகுமார், மெல்போர்ன், (அவுஸ்திரேலியா), பூமணி.க.செஞ்சி தாலுகா, விழுப்புரம், (தமிழ்நாடு), பூர்ணிமா.ச. நாமக்கல் மாவட்டம், (தமிழ்நாடு), பர்வின் பானு.எஸ். தேனாம்பேட்டை, சென்னை, (தமிழ்நாடு), துடுப்பதி ரகுநாதன் டி.எஸ்.கோயமுத்தூர்-36 (தமிழ்நாடு), சக்திதாசன் கனகசபாபதி, (டென்மார்க்), சரளா முருகையன், பென்சினர் கொலனி, திருச்சி-23 (தமிழ்நாடு), தங்கராசா செல்வகுமார். குப்பிழான் தெற்கு, யாழ்ப்பாணம், (இலங்கை) ஆகியோருக்கு வழங்கப்படும்.

இளைய தலைமுறை மாணவ, மாணவிகளுக்கான 10 பாராட்டுப் பரிசுகள் தலா 5000 இலங்கை ரூபா:-

அருச்சனா சித்திவினாயகம், டொரண்டோ (கனடா), தேவரூபா நாகராஜ், வடுகப்பட்டி, (தமிழ்நாடு), கிருத்திக்கா.எஸ். முனிச்சாலை, மதுரை (தமிழ்நாடு), மோனிஷா நாகராஜ், வடுகப்பட்டி, (தமிழ்நாடு), நிரோஜினி வரதராஜன், வரணி வடக்கு, (இலங்கை), றுவிங்கா ஸ்ரீ. மிசசாகா, (கனடா), சக்தயா சாம்பவி முகுந்தன், ஸ்காபரோ, (கனடா), ஸ்ரீசங்கர் அருநோதன், மட்டக்களப்பு, (இலங்கை), திவாணி கந்தசாமி, தவசிக்குளம், வவுனியா, (இலங்கை), றிசா ஜேசுதாசன் டொரண்டோ, (கனடா) ஆகியோருக்கு வழங்கப்படும்.

சர்வதேச ரீதியாக கனடாவிலிருந்து நடந்த முதலாவது திறனாய்வுப் போட்டி – 2021 இல் 14 நாடுகளில் இருந்து தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட திறனாய்வுக் கட்டுரைகள் வந்திருந்தன. இறுதிச் சுற்றில் சிந்தனைப்பூக்கள் எஸ்.பத்மநாதன், எழுத்தாளர் கே.எஸ்.சுதாகர், கவிஞர் சரேஸ் அகணி ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினார்கள்.

பரிசு பெற்றவர்களுக்குக்கு காலக்கிரமத்தில் பரிசுத்தொகை அனுப்பி வைக்கப்படும் என குரு அரவிந்தன் வாசகர் வட்டத்தின் செயலாளர் சுலோச்சனா அருண் தெரிவித்துள்ளார்.

## இடர்கால இலக்கியங்கள்

19

கொரோனாத் தொற்று உக்கிரம் பெறத் தொடங்கியதும் சமூக முடக்கத்தின் கால எல்லையும் நீடிக்கப்பட்டிருக்கிறது. நாலைந்து பேர் கூடிக் கலந்துரையாடக் கூட சந்தர்ப்பம் வழங்கப்படாத நிலையில் காலச் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்தி விடயங்கள் நடைபெற்றிருக்கின்றன. இனி நடைபெற வேண்டிய விடயங்களைத் தடையின்றி நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் வாசகர்கள் ஒன்றுகூடி நடத்த வேண்டிய பல நூல் தொடர்பான கூட்டங்களையும், முயற்சிகளையும் கணினித் திரையில் ஒன்றுகூடி நடத்த வேண்டியதாயிற்று. மேடையில் அருகருகே இருந்து சம்பாஷித்து சூழ்நிலைக்கு ஏற்றவாறு நிகழ்சிகளை நடத்திச் சென்ற இயல்புநிலை அதில் இல்லை என்றே தோன்றுகிறது. இருந்தும் இலக்கியச் செயற்பாடுகளை இடைவிடாது நடத்திச் செல்லவேண்டும் என்ற ஆர்வத்தில் பலர் செயற்படுவது தெரிகிறது.கொரோனா காலத்துக் கல்விச் செயற்பாடுகளும் 'சூம்' செயலியினூடாகவே நடைபெறுவதைப் போன்று இலக்கியச் செயற்பாடுகளும் நடைபெறத் தொடங்கிவிட்டன. முன்பு போலல்லாது 'சூம்' செயலியினூடாக நிகழ்வுகளை நடத்துவதில் நன்மைகளும் உண்டு.

முன்பு இதுபோன்ற நிகழ்வுகளிலும், விழாக்களிலும் பங்குபற்றுவதற்கென யாராவது முக்கியஸ்தர்கள் அழைக்கப்பட்டால் அவர்கள் பல மணிநேரத்துக்கு முன்பே புறப்பட்டு வரவேண்டும். அதுவும் வெளிநாட்டவராயின் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் நின்று விமானத்தில் பாரியபொருட் செலவில் இங்கு வரவேண்டியிருக்கும். ஆனால், தற்போது அப்படியில்லை. நிலைமை மாறிவிட்டது. தற்போது நடைபெறும் இணையவழி நிகழ்வுகளில் பல மைல்களுக்கு அப்பால் நின்று இலகுவாகப் பலர் பங்குபற்றக்கூடிய வாய்ப்புகள் தாராளமாக உண்டு.

அவ்வழியாகத் தற்போது ஒரு நிகழ்வு ஒழுங்கமைக் கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்டு 40 ஆண்டுகள் நிறைவையொட்டி 30.05.2021 அன்று 'சூம்' இணையவழி நிகழ்வு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்ற அந்நிகழ்வை அறிவோர் அரங்கம் ஒழுங்கு செய்திருந்தது. 'தேநீருடன் ஒரு தேடல்' என்று தலைப்பிட்ட அந்நிகழ்வில் உலகத்தின் ஒரு கோடியிலிருந்து ஆவணமாக்கல் செயற்பாட்டாளர் தில்லைநாதன் கோபிநாத் மற்றும் மறு கோடியிலிருந்து ஒஸ்லோ பல்கலைக்கழக ஆய்வாளரும், விரிவுரையாளருமான தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ ஆகியோர் உரையாற்றினர்.

அதுபோன்று அகில இலங்கைக் கம்பன் கழகமும், அவுஸ்திரேலியக் கம்பன் கழகமும் இணைந்து இணையவழியே ஒரு நிகழ்வை நடத்தின. மாதாந்த இயலரங்க நிகழ்வாக 29.05.2021 அன்று சனிக்கிழமை இலங்கை நேரப்படி மாலை 3.30 மணியளவில் நடைபெற்ற அந்நிகழ்வுக்கு புலவர் இரா.சண்முகவடிவேல் தலைமை தாங்கினார். 'நற்றமிழ் முற்றம்' எனப் பெயரிடப்பட்டிருந்த அந்நிகழ்வில் 'ஔவை தந்த அருந்தமிழ்' என்ற தலைப்பில் மூன்று தமிழ்ப் புலமையாளர்கள் உரையாற்றினர். 'ஔவை தந்த அருந்தமிழ் ஆத்திசூடி' என்று முனைவர் தேவி குணசேகரன், 'கொன்றை வேந்தன்' என்று ஆசான் இரா.செல்வ வடிவேல், 'மூதுரை' என்று முனைவர் இரா.மது ஆகியோர் உரையாற்றினர். இந்நிகழ்வை இணையவழியே நேரலையாக, அனைவரையும் கண்டுகளிக்க வருமாறு அன்போடு அழைக்கின்றோம் என இரு கழகத்தாரும் அழைப்பை விடுத்திருந்தனர்.

அடுத்து இந்த இடர்காலத்தே தமிழ் நாட்டில் நடைபெற்ற ஒரு நிகழ்வு பற்றிப் பார்க்கலாம். இலங்கையில் மட்டுமல்ல, உலகளவிலும் இது போன்றே இணையவழியே கருத்தரங்கங்களும், பட்டிமன்றங்களும், பல இலக்கியச் செயற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. தற்காலச் சூழ்நிலைக்கேற்றவாறு ஒரு தலைப்பைத் தேர்வு செய்து சுவை மிக்க பட்டிமன்றமொன்று கடந்த 23 மே 2021 அன்று இணையவழியே நடைபெற்றது. திருச்சி கலைப் பேரவை ஒழுங்கு செய்திருந்த அந்தப் பட்டிமன்றத்தின் தலைப்பு 'இன்றைய சூழலை எதிர்கொள்ள பெரிதும் தேவை பண வலிமையா? மன வலிமையா?' என்பதாகும். நிகழ்வை திருச்சி சிவா எம்.பி. தொடக்கிவைத்தார். நிகழ்வில் நடுவராக முனைவர் இரா.மது அமர்ந்திருந்தார். 'பணவலிமையே' என முனைவர் ந.விஜயசுந்தரி, முனைவர் சா.நீலகண்டன், பேராசிரியர் சாத்தம்மைப்பிரியா ஆகியோர் வாதிட்டனர். 'மனவலிமையே' என முனைவர் குரு ஞானாம்பிகை, க.சிவகுருநாதன், ஆர்.விஜயாலயன் ஆகியோர் எதிர்வாதம் செய்தனர்.

அடுத்து இணையவழி நடைபெற்ற ஒரு வாழ்த்து நிகழ்வு குறித்து காணலாம். இந்நிகழ்வு ஒரு இலக்கியம் சார் நிகழ்வாக இல்லாவிட்டாலும் பொது வாழ்க்கைக்கென தன்னை அர்ப்பணித்த ஒரு இலக்கியவாதி பற்றியதாகும். தற்போது பெரும்பாலும் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பல கிளைகளை நிறுவி மக்கள் தொண்டாற்றி வருவதோடு உலகளாவிய ரீதியில் பல இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருபவர். பல நிகழ்வுகளில் பங்குபற்றியும் வருகின்றார். அவர்தான் சிவபூமி அறக்கட்டளையின் ஆரம்பகர்த்தா செஞ்சொல் திலகர் கலாநிதி ஆறுதிருமுருகன். அகவை அறுபதை எட்டியிருக்கும் அவரைப் பலர் இணைவழி இணைந்து வாழ்த்துகின்ற நிகழ்வு அது. கடந்த 28.05.2021 அன்று இலங்கை நேரப்படி இரவு 7 மணிக்கு 'சூம்' செயலியினூடாக நடைபெற்ற அந்த வாழ்த்து நிகழ்வுக்கு தகைசார் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமை தாங்கினார்.

அது மட்டுமல்ல, மாத மற்றும் காலாண்டு சஞ்சிகைகள் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். இடர்கால முடக்கத்தால் குறித்த நாட்களில் அவை வெளிவராவிட்டாலும் கிரமமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றை அச்சிடுவதற்குரிய பத்திரிகை விலையேற்றம் பாதிப்பை ஏற்படுத்தினாலும், அவற்றின் செயற்பாட்டாளர்கள் அவற்றைச் சமாளித்து, எதிர்கொண்டு தொடராக வெளிக்கொண்டு வருகின்றமை பாராட்டுக்குரியது.

**கணபதி சர்வானந்தா**

# தமிழன் தர்பார்



தொகுப்பு : மணி ஸ்ரீகாந்தன்

இது எங்க ஏரியா

## குறும்பா

### வேண்டுதல்

**நெஞ்சினிலே நீ மலருந் தோப்பு**
**நினைவெல்லாம் நீயே மத்தாப்பு**
**அஞ்சுகமே உனை எண்ணி**
**கெஞ்சுகிறேன் ஜெபம் பண்ணி**
**ஆனால் நீ வைக்கின்றாய் ஆப்பு!**

ஒலுவில் எஸ். ஜலால்டீன்



கணவன் : அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். பணம் அனுப்ப சொல்லி, லெட்டர் போட்டிருக்காங்க...

மனைவி : சுக்கு காய்ச்சி குடிக்கச் சொல்லுங்க எல்லாம் சரியாப் போயிடும்.

கணவன் : ஓகே... அப்படியே உங்கம்மாவுக்கு எழுதிப் போட்டு விடுகிறேன்.

மனைவி : என்னது... எங்கம்மாவுக்கா...? சொல்றத சரியா சொல்றீங்களா... ஒன்னத்துக்கும் லாயக்கு இல்லே... உடனே... ஓட்டோவுக்கு... சொல்லுங்க... ஒபீஸுக்கு ஒரு வாரம்... லீவும்.... சொல்லுங்க... போய்ப்... பாத்துட்டு வந்துடுவோம்.



## வியக்க வைத்த தலைவன்

அதிகாலை வேளை. அந்த அமெரிக்க பத்திரிகை நிருபரின் வெகு நாளைய ஆசை இப்போதுதான் நிறைவேறப்போகிறது. அடர்த்தியான செழித்த வனாந்திரத்துக்குள் ஒரு இராணுவ வீரன், அந்த நிருபருக்கு வழிகாட்டி, அழைத்துக் கொண்டு போனான்.

இருப்பிடமும் வந்தது. “காத்திருங்கள். மேலிருந்து அழைப்பு வரும். இந்த நூல் ஏணி வழியாக மேலே ஏறிப் போங்கள்'' என்று சொல்லிவிட்டு இராணுவ வீரன் போய்விட்டான்.

நிருபர் மேலே பார்த்தார். சுற்றும் முற்றும் கவனித்தார். வழிகாட்டுதல் இல்லாமல் யாரும் இங்கே வர முடியாது. தான் நேர்காணல் செய்ய வந்த அந்தத் தலைவனின் இருப்பிடத்தைப் பார்த்தார்.

இரு பிரம்மாண்டமான விருட்ச இணைப்புகளுக்கிடையில் மேலே ஒரு ராட்சத பறவைக் கூண்டு போலிருந்தது அந்தக் குடிசை.

அதில் இரண்டு யன்னல்கள் இருந்தன. ஒன்றில் ஒரு கழி நீட்டிக் கொண்டிருந்தது. அந்தக் கழியில் ஒரு கால் சட்டையும், மேல் சட்டையும் காலை வெயிலில் காய்ந்து கொண்டிருந்தன.



அழைப்புக்கு நிருபர் காத்துக் கொண்டேயிருந்தார்.

அந்தக் கால் சட்டையும், மேல் சட்டையும் கழியோடு உள்ளே போனது. பிறகு சிறிது நேரத்தில் அழைப்பு வந்தது.

மேலே ஏறிப் போனார்.

பயண சிரமத்துக்கும், அவரைக் காத்திருக்க வைத்ததற்கும் வருத்தம் தெரிவித்துவிட்டு, ஒரு கப் கறுப்பு தேநீர் தந்து உபசரித்த பின்னர் நேர்காணல் துவங்கியது.

நிருபர் கேள்விகளைத் தொடுக்க ஆரம்பித்தார்.

“நான் இங்கே வந்து காத்துக் கொண்டிருந்த போது என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?”

“காலைப் பத்திரிகைகளை அவசரமாகப் படித்து முடித்துக் கொண்டிருந்தேன்”

“அதற்கு முன்னால் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்?”

“காலைக் கடன்களை முடித்து விட்டுக் குளித்துக் கொண்டிருந்தேன்.”

“அதற்கு முன்னால்?”

“எனது ஆடைகளைக் கழுவி கழியில் கட்டிக் காய வைத்தேன்”

“உங்களிடம் எத்தனை செட் உடைகள் உள்ளன? “

“இந்த ஒரு செட்தான்”

அதிர்ந்த நிருபருக்கு, அடுத்த கேள்வி கேட்க சிறிது நேரம் பிடித்தது. பேட்டியளித்த அந்த மனிதனின் பெயர் ஹோசிமின். வியட்நாம் மக்களின் உண்மையான தலைவன்.

‘கி.ராஜநாராயணன் பதில்கள்’ என்ற நூலிலிருந்து ‘உங்களை வியக்க வைத்த தலைவன் யார்?’ என்ற கேள்விக்கு அளிக்கப்பட்ட பதிலே இது...

## சுதந்திர தினம்



சரியான பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் ‘காதலர் தினம்’

அன்பான பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் ‘அன்னையர் தினம்’

தவறான பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் ‘தியாகிகள் தினம்’

சோம்பேறிப் பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் ‘உழைப்பாளர் தினம்’

பணக்காரப் பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் ‘புத்தாண்டு தினம்’

அதி புத்திசாலிப் பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் ‘முட்டாள் தினம்’

லூஸுப் பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் ‘குழந்தைகள் தினம்’

கோபக்காரப் பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் ‘அடிமைகள் தினம்’

திருமணமே செய்யாமலிருந்தால் தினமும் ‘சுதந்திர தினம்’ உண்மைதானே....!!!

## தேநீர் கோப்பையின் மரணம்..

குருவுக்கு தேநீர் எடுத்துச் சென்ற சீடன், அந்தக் கோப்பையைத் தவற விட்டுவிட்டான். அது உடைந்து, சுக்கு நூறாகி விட்டது. மனம் கலங்கிய சீடன், கோப்பைத் துகள்களை அப்புறப்படுத்தினான்.

சீடன் கலங்கி நின்றது கண்டு, “என்ன விஷயம்..?” என்று கேட்டார் குரு. “மனிதர்கள் ஏன் சாகின்றனர்..?” என்று சீடன் கேட்டான்.. “அது இயற்கை... பிறந்த உயிர்கள் எல்லாம் ஒரு நாள் இறந்து தானே ஆக வேண்டும். மரணம் தவிர்க்க முடியாத ஒன்று, எல்லாவற்றுக்கும் அழிவுண்டு. செத்துப் போவது இயற்கை...” என்றார் குரு. உடனே சீடன், “குருவே..! உங்கள் தேநீர் கோப்பையும் செத்து விட்டது..” என்றான்.

“சுவாரஸ்யமாக சொன்னதால், இழப்பும் பொருட்படுத்தப்படுவதில்லை.” சமாளித்து வாழப் பழகுவோம்...

இளம் தாரகை ஷஹ்னா ஸப்வான்



## நாணயமான கணவன்

நாற்பது வருடங்கள் வாழ்ந்து முடித்த கணவனும், மனைவியும் அதனைக் கொண்டாடும் விதமாக நண்பர்களுக்கு ஒரு விருந்து கொடுத்தனர். விருந்தில் கலந்துகொண்ட அனைவரும் ‘‘நீங்கள் எப்படி இவ்வளவு நாளும் ஒற்றுமையாக இருந்தீர்கள்?'' என்று கேட்டனர். அதற்கு அந்தத் தம்பதிகள் கொடுத்த பதில் ‘‘நான் எனது கணவனின்/மனைவியின் சுதந்திரத்தில் தலையிட்டதே இல்லை. அதுதான் காரணம்!'' என்று.

அன்றிரவு படுக்கையில் மனைவி, கணவனிடம் ‘‘இதுவரை நான் உங்கள் சுதந்திரத்தில் தலையிட்டதே இல்லை. இன்று நீங்கள் மறைத்த உண்மை ஒன்றைச் சொல்லுங்களேன்'' என்று கேட்டாள்.

கணவன் படுக்கைக்கு அடியிலிருந்த ஒரு பெட்டியை எடுத்து கட்டில் மேல் திறந்து வைத்தான். உள்ளே ஒரு முட்டையும், ஒரு இலட்ச ரூபா பணமும் இருந்தது. அதைப் பார்த்து ‘‘இது என்ன?'' என்று கேட்ட மனைவிக்கு கணவன் கொடுத்த பதில் ‘‘உனக்கு எப்பொழுதெல்லாம் துரோகம் செய்கிறேனோ, அப்பொழுதெல்லம் இந்தப் பெட்டியில் ஒரு முட்டை வைப்பேன்'' என்றான். கணவன் செய்த ஒரே ஒரு தப்பை மன்னித்த மனைவிக்கு மீண்டும் ஒரு சந்தேகம், ‘‘சரி, அதில் ஒரு இலட்ச ரூபா எதற்காக?'' கணவன் சொன்னான். ‘‘அது எல்லாம் முட்டை வித்து சேத்து வச்ச காசு'' என்று.



மனைவி : “ஒரு நாள் வேலைக்காரி இல்லைன்னா கூட வீடே சரியில்ல பாருங்க.”

கணவன் : “இது பரவாயில்லை. எனக்கு மனசே சரியில்லாம போயிடுது பாரு.”



























தொலைபேசி இல - 0740107194
அனுப்பவேண்டிய முகவரி : இல.91,
விஜேராம மாவத்தை,
கொழும்பு-07 மின்னஞ்சல் முகவரி:
thamilandharbar@yahoo.com

சமூக வலைத்தளங்களில் நீங்கள் படைக்கும், பகிர்ந்த, படித்துச் சுவைத்த சுவாரஸ்யமான விடயங்களை எமக்கு அனுப்பிவையுங்கள். அத்தோடு சிரிப்புத் துணுக்குகள், வித்தியாசமான செல்பிகள், புகைப்படங்கள், நச்சுன்னு நாலு வரியில் எழுதப்படும் ஹைக்கூ உள்ளிட்டவற்றையும் எம்மோடு பகிர்ந்துகொண்டால் சிறப்பானதை தெரிவுசெய்து “தமிழன் தர்பார்” பக்கத்தில் பிரசுரிக்கக் காத்திருக்கிறோம்.



# வெளியே செல்லும் பெண்களே...!

## உங்கள் பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ளுங்கள்

தேசிய அளவில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களில் வழிப்பறிகள்தான் முதலிடத்தில் உள்ளன. சாலையில் தனியாக நடந்து செல்லும் பெண்களை குறிவைத்தே வழிப்பறி நடக்கிறது. அதில் நகையை பறிகொடுப்பதுடன், பலவகையிலும் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். தவறு நடந்த பின்னர் வருத்தப்படுவதைவிட முன்னரே விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும் என்பது பொலிஸாரின் அறிவுரையாகும்.

வழிப்பறி காரணமாக பாதிக்கப்படாமலிருக்க சமயோசிதமாக செயற்படுவது எப்படி என்று பார்க்கலாம்.

◆ வெளியிடங்களுக்குச் செல்லும் பெண்கள் எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும். பொது இடங்களில் கூடுதல் கவனத்துடன் இருப்பதுடன். அதிகமாக தொலைபேசி பேசுவது, அதனுள் மூழ்கியபடி நடப்பது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது. அவையும் வழிப்பறிக்குக் காரணமாக அமையக்கூடும்.

◆ பணத்தை பொது இடங்களில் வைத்து எண்ணக்கூடாது. விலையுயர்ந்த பொருட்களைக் கையாள்வதிலும் எச்சரிக்கை வேண்டும்.

◆ இரவுநேரத்தில் தனியாக வீட்டுக்குச் செல்லும் நிலையில் மக்கள் நடமாட்டம் உள்ள வழியில்தான் செல்ல வேண்டும். அதேபோல் இரவுநேரத்தில் வாகனத்தில் தனியாக செல்ல நேர்ந்தால் வெளிச்சமான பகுதியிலோ, சனநடமாட்டம் உள்ள பகுதி வழியாகவோ செல்ல வேண்டும்.

◆ வாகனத்தை நிறுத்தும்போது தனியாக நிறுத்தாமல் மற்ற வாகனங்கள் இருக்கும் இடத்திலேயே நிறுத்தவேண்டும்.

◆ வீதியில் நடந்து செல்லும்போது செல்போன் அரட்டை காரணமாக கவனக்குறைவு ஏற்பட்டு பின்தொடரும் நபர்கள் குறித்து கண்டுகொள்ளலாம் விடுவதாலேயே நகைப் பறிப்புச் சம்பவங்கள் அதிகமாக நடக்கின்றன.

◆ விலையுயர்ந்த நகைகள் அணிந்துகொண்டு வெளியில் செல்ல நேர்ந்தால் துப்பட்டா அல்லது சேலையை கொண்டு மறைத்தபடியே செல்லவேண்டும். திருமணம், வரவேற்பு உள்ளிட்ட விழாக்களுக்கு செல்லும்போது நகைகளை அந்த இடத்திற்கு கொண்டுசென்று அணிவதே பாதுகாப்பானது.

◆ எதிர்பாராமல் வழிப்பறி நடந்துவிட்டால் பதற்றப்படாமல் நிதானித்து வாகன எண், வந்த நபர்கள், வாகனத்தின் வகை ஆகியவற்றை கவனித்து பொலிஸாரிடம் தெரிவித்தால் குற்றவாளிகளை உடனே பிடிக்கமுடியும்.

◆ தனியாக அமைந்துள்ள வீடுகளில் வசிப்பவர்கள் வெளியில் சென்றுவிட்டு வந்து வீட்டுக்கதவை திறக்கும்போது எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

◆ குழந்தைகளை பாடசாலைகளில் இருந்து அழைத்துவரும்போது அறிமுகமான வாகனங்களில் பயணிக்க வேண்டும். தவிர்க்கமுடியாத சூழலில் இதர வாகனங்களில் திரும்பி வர நேர்ந்தால் பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

◆ வெளியில் சென்று வீடு திரும்பும் பெண்கள் பயணம் செய்யும் வாகனம் குறித்த விவரங்களை குடும்பத்தாருக்கு சரியாக தெரியப்படுத்த வேண்டும். தனியாக செல்லும்போது பாதிப்பு ஏற்படுவதாக உணர்ந்தால் உடனடியாக மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிக்கு சென்றுவிடவேண்டும். ஆபத்தான சமயங்களில் உடனடியாக பொலிஸாரின் உதவி எண்ணை தொடர்புகொள்ள வேண்டும்.

# இலைகளைக்கொண்டு முகப்பரு பிரச்சினைக்குத் தீர்வு



கோடையில் பெரும்பாலானோர் அவதிப்படும் ஒரு சரும பிரச்சினை என்றால் அது முகப்பருக்கள்தான். உங்கள் முகத்தில் பருக்கள் அதிகமாக வந்து உங்கள் முக அழகை பாழாக்கிக்கொண்டிருக்கிறதா? அதைத் தடுப்பது எப்படி என்று யோசித்துக்கொண்டிருக்கிறீர்களா? அப்படியானால் இதோ தீர்வு.

முகப்பருக்களைப் போக்க பல்வேறு இயற்கை வழிகள் உள்ளன. அதில் நாம் இப்போது பார்க்கப்போவது உணவுகளைப் பற்றியோ அல்லது பேஸ் மாஸ்க்குகளைப் பற்றியோ அல்ல. மருத்துவக் குணங்கள் நிறைந்த இலைகளைப் பற்றிதான். அதுவும் நமக்கு எளிதில் கிடைக்கக்கூடிய இலைகளைக் கொண்டே எளிதில் முகப்பருக்களை மாயமாக மறைய வைக்கலாம். இப்போது முகப்பருக்களைப் போக்க உதவும் அந்த இலைகள் எவையென்பதையும், அவற்றை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதையும் பார்ப்போம்.

### லெமன்கிராஸ்/ எலுமிச்சை புல்

லெமன் கிராஸ் என்னும் எலுமிச்சை புல்லில் சக்தி வாய்ந்த ஆன்டி-பாக்டீரியல் பண்புகள் உள்ளன. அதிலும் லெமன் கிராஸ் எண்ணெயில் உள்ள சிட்ரல் என்னும் உட்பொருள், சருமத்தை சுத்தம் செய்வதோடு மட்டுமன்றி, சரும தொற்றுகளைத் தடுக்கவும் செய்யும். அதற்கு அந்த எண்ணெயை இரவு தூங்கும் முன் பஞ்சுருண்டையில் நனைத்து முகப்பருக்களின் மீது தடவ வேண்டும்.





### வேப்பிலை

வேப்பிலை ஒரு பாரம்பரிய நிவாரணப் பொருள். இது சருமத்தில் சுரக்கும் அதிகப்படியான எண்ணெயைக் கட்டுப்படுத்துகிறது மற்றும் அழுக்குகள் சருமத் துளைகளை அடைப்பதைத் தடுக்கிறது. முக்கியமாக சரும தொற்றுகள் மற்றும் முகப்பருக்களைப் போக்குகிறது. அதற்கு வேப்பிலையை அரைத்து பேஸ்ட் செய்து பருக்களின் மீது தடவலாம் அல்லது வேப்பிலையை நீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்நீரைக் கொண்டு முகத்தைத் துடைத்து எடுக்கலாம்.

### கொய்யா இலை

கொய்யா இலையில் சக்தி வாய்ந்த ஆன்டி-பாக்டீரியல் பண்புகள் மற்றும் அழற்சி எதிர்ப்புப் பண்புகள் உள்ளன. இவை முகத்திலுள்ள பருக்களின் தோற்றத்தைக் குறைப்பதோடு மட்டுமின்றி, பருக்களைத் தடுக்கவும் செய்யும். அதற்கு கொய்யா இலையை நீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்நீரால் தினமும் முகத்தைக் கழுவ வேண்டும்.



### வெந்தயக் கீரை

வெந்தயக் கீரையில் ஆன்டி-செப்டிக் மற்றும் அழற்சி எதிர்ப்புப் பண்புகள் உள்ளதால், இது சருமத்தில் முகப்பருக்களின் தழும்புகளைக் குறைக்க பெரிதும் உதவுகிறது. அதற்கு சிறிது வெந்தயக் கீரை அல்லது வெந்தய விதைகளை நீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்நீரை தினமும் ஒரு வாரத்திற்கு முகத்தில் தடவி வந்தால், முகத்திலுள்ள பருக்கள் காணாமல் போய்விடும்.



### புதினா

புதினா இலையில் அழற்சி எதிர்ப்புப் பண்புகள் மற்றும் ஆன்டி-பாக்டீரியல் பண்புகள் உள்ளன. இது சருமத்தை சுத்தம் செய்வது மட்டுமன்றி, சிறந்த டோனர் போன்றும் செயற்ப+டுகிறது. இதிலுள்ள சாலிசிலிக் அமிலம், பருக்கலை தடுக்க உதவுகிறது. அதற்கு புதினா இலைகளை அரைத்து பேஸ்ட் செய்து அல்லது சாறு எடுத்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்ததும், நீரால் நன்கு கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்துவந்தால், பருக்கள் இருந்த இடம் தெரியாமல் போகும்.





# காரிகை களம்



# அலுவலகப் பணிகளில் நேர மேலாண்மை



அலுவலகத்திலோ அல்லது வீட்டிலோ, எங்கு இருந்தாலும் நம்முடைய பணியை நாம்தான் செய்யவேண்டும். அதுவும் சிறப்புற செய்தால், நம்முடைய மதிப்பும் மரியாதையும் உயரும். பணியை தொய்வின்றி செய்து முடிக்கவும், அலுவலக வாழ்க்கையில் நேர மேலாண்மையை கடைப்பிடிக்கவும் சில யோசனைகளை பகிர்ந்திருக்கிறோம். படித்து பயன்படுத்திக்கொள்ளுங்கள். உயரதிகாரிகளிடம் உங்களுக்கான நன்மதிப்பை உயர்த்திக்கொள்ளுங்கள்.

1. அதிகாலையில் எழுந்திருக்கப் பழகுங்கள். உடலை ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் வைத்துக்கொள்ளுங்கள். அதற்காக தினசரி உடற்பயிற்சிகளை செய்துவிட்டு அன்றைய தினத்தை ஆரம்பியுங்கள். அன்றைய அலுவலக வேலையை கவனமுடன் சிறப்பாகச் செய்துமுடிப்பதற்கு உடற்பயிற்சி கைகொடுக்கும்.

2. உங்கள் வேலைகளை முதலில் திட்டமிடுங்கள். இது கேட்பதற்கு மிகவும் பழைய யோசனை போலத் தெரியலாம். ஆனால், திட்டமிடாத வேலை சிறக்காது. தொழில்முனைவோர் என்றால் முடிவுகளை எடுக்கவேண்டும். தினசரி இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும். நிதி தொடர்பான காகிதங்களை சரிபார்க்க வேண்டும். வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். இதுபோன்ற வேலைகளை சரிவர முடிக்கத் திட்டமிடுதல் அவசியம். எனவே, திட்டமிட மறக்காதீர்கள்.

3. எந்த வேலையை உடனடியாகச் செய்யவேண்டும்; எந்த வேலையை சற்று நிதானமாகச் செய்யலாம் என்பதை இனங்கண்டுகொண்டு அதற்கேற்ப செயற்படுங்கள். இல்லையென்றால், தேவையற்ற வேலைகளில் உங்களின் பெரும் ஆற்றலை செலவழிக்க நேரிடும்.

4. நீங்கள் வேலையில் இருக்கும்போது கவனச்சிதறலுக்கு ஒருபோதும் இடம் கொடுக்காதீர்கள். கதைப் புத்தகம் படிப்பது, வாட்ஸ்-அப்பில் செய்தி அனுப்புவது, மின்னஞ்சலை எடுத்துப் பார்ப்பது என்று நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக செலவழிக்கும் நேரங்கள் உங்கள் வேலைத் திறனில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

5. உங்கள் அலைபேசி அல்லது மடிக்கணினியில் இருக்கும் நாட்காட்டியில் தினசரி செய்யவேண்டிய மிக முக்கியமான வேலைகளை முன்கூட்டியே குறித்துவைத்துக்கொள்ளுங்கள். குறித்துவைப்பதோடு மட்டுமல்லாமல், அதை அவ்வப்பொழுது எடுத்துப் பார்த்து உங்கள் வேலைகளை அந்தந்த நேரத்தில் முடியுங்கள். இந்தப் பழக்கம் உங்கள் கடைசிநேரப் பரபரப்பைக் குறைக்க மிகவும் கைகொடுக்கும்.

6. தொழில்சார்ந்த கூட்டங்களை நாள்முழுக்க வளவளவென இழுத்துக்கொண்டே செல்லாதீர்கள். சுருக்கமாக அதேசமயம் மிகுந்த பயனுள்ளதாக கூட்டங்களை நடத்தக் கற்றுக்கொள்ளுங்கள். அடுத்து என்ன செய்யவேண்டும்? எப்படிச் செய்யவேண்டும்? யார் யாரெல்லாம் அதில் இணையப் போகிறார்கள் என்பது குறித்துத் தெளிவாகப் பேசினால் போதும்.

7. எல்லா வேலைகளையும் நீங்கள் ஒருவரே செய்தால் எந்த வேலையையும் உங்களால் முடிக்க முடியாது. அதனால் வேலைகளை திறமைமிக்க ஊழியர்களிடம் பிரித்துக்கொடுக்க மறக்காதீர்கள். நீங்கள் சிறுதொழில் முனைவோர் என்றால் வெளியிலிருந்து உங்களுக்கு வேலை செய்துகொடுக்கும் திறமைமிக்க மனிதர்களை கண்டறிந்து அவர்களிடம் உங்கள் வேலைகளைக் கொடுங்கள். கட்டணத்தின்பேரில் வேலைகளை செய்துகொடுக்க திறமைமிக்க நிறைய பேர் வெளியே காத்திருக்கிறார்கள்.



# வெண்டைக்காய் சாலட்

சர்க்கரை நோயாளிகள் அடிக்கடி ஒரே மாதிரியான சாலட்களை சாப்பிட்டுக்கொண்டிருந்தால், அது ருசியின்மையாகிவிடும். அவர்களுக்கு இது ஒரு புதுவகையான சாலட். சத்துகளும், சுவையும் நிறைந்தவை.

### தேவையான பொருட்கள்

*வெண்டைக்காய்,*
*குடைமிளகாய்,*
*கத்தரிக்காய் - 50 கிராம்*
*பாலாடைக்கட்டி - 10 கிராம்,*
*மிளகு - 10 கிராம்,*
*துளசி, பூண்டு, ஒலிவ் ஒயில்,*
*உப்பு - தேவையான அளவு*

### செய்முறை

முதலில் சோஸ் போன்ற கலவையை தயார்செய்ய வேண்டும். அதற்காக குடைமிளகாயை துண்டுகளாக நறுக்கி, தோசைக்கல்லை சூடாக்கி எண்ணெய்விடாமல் சுடவேண்டும். குடைமிளகாயை சுட்டதும் அத்துடன், துளசி, ஒலிவ் ஒயில், மிளகு, பூண்டு, உப்பு போன்றவைகளை சேர்த்து மிக்சியில் சோஸ் போன்று அரைத்தெடுங்கள்.

கத்தரிக்காயை வட்டமாக மெலிதாகவும், வெண்டைக்காயை நீளவாக்கிலும் வெட்டுங்கள். இரண்டையும் அடுப்புத்தணலில் பதமாக கருகாத விதத்தில் சுட்டு எடுங்கள்.

அகன்ற பாத்திரத்தில் முதலில் கத்தரிக்காயை அடுக்குங்கள். அதற்கு மேல் பாலாடைக்கட்டியை கலந்துவிட்டு, வெண்டைக்காயை அடுக்குங்கள். அதன் மேல் குடைமிளகாய் சோஸ் சேர்த்து சுவையுங்கள்.

இந்த சாலட் சர்க்கரை நோயாளிகளுக்கு மட்டுமன்றி எல்லோருக்கும் ஏற்றது. இதில் சேர்க்கப்படும் வெண்டைக்காயில் பெகடின் என்ற நார்ச்சத்து நிறைந்திருக்கிறது. இது இதயத்துடிப்பை சீராக்குவதோடு, கெட்ட கொழுப்பையும் குறைக்கும். கத்தரிக்காயிலும் நார்ச்சத்து இருக்கிறது. அது குடல் புற்றுநோயை தடுக்கும் சக்திகொண்டது. குடைமிளகாயில் விற்றமின் சத்துகளும், பீட்டா கரோட்டினும் உள்ளன. கொழுப்பு மிகக் குறைவாகவே உள்ளது. பாலாடைக்கட்டியில் கல்சியமும், விற்றமின் டி சத்தும் அதிகம் இருக்கின்றன. சர்க்கரை நோயாளிகள் இதனை அடிக்கடி சாப்பிடலாம்.

# பாசிக்குடா கடற்கரை

பாசிக்குடா (Pasikudah) என்பது மட்டக்களப்பிலிருந்து 35 கி.மீ. தொலைவில் வடமேற்கில் அமைந்துள்ள ஒரு கரையோரப் பிரதேசமாகும். வாழைச்சேனை பிரதேசத்திற்கு உட்பட்ட இவ்விடமானது இலங்கையின் மிகவும் அழகான கடற்கரைகளுள் ஒன்றாகும். புகழ்பெற்ற உல்லாசப் பயணிகளைக் கவருமிடமாக இருந்த இது, ஈழப்போர் இடம்பெற்றதால் இதன் உல்லாசப் பயணிகளை இழந்தது. 2004 இல் இடம்பெற்ற இந்தியப் பெருங்கடல் நிலநடுக்கம் நிலைமையை மேலும் மோசமாக்கியது. ஈழப்போர் முடிவுற்றதும் இப்பகுதி உல்லாசப் பயணிகளை உள்வாங்கும் இடமாக மாறி வருகின்றது.

அலைகளின் அகோரமில்லாத, ஆழமில்லாத விசாலமான கடற்பரப்பு, முருகைக் கற்பாறைகள், கடல் தாவரங்கள், கடல் வாழ் உயிரினங்கள் ஆகியவற்றின் இயற்கை வனப்பும், உல்லாச விடுதிகளும், கிடுகுகளால் அழகுற, நேர்த்தியாக வேயப்பட்ட “கபானா” என்றழைக்கப்படும் உல்லாச விடுதிகளும், படகுச்சவாரிக்கு ஏற்ற கடலும், பாசிக்குடாவின் சிறப்புகளாகும்.







இங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் பல சுற்றுலா விடுதிகள் காணப்படுகின்றன. இங்கு சகலவிதமான நட்சத்திர விடுதிகளும் உள்ளன. இந்த விடுதிகளில் இலவச WIFI மற்றும் நீச்சல் குளம் போன்ற வசதிகளும் காணப்படுகின்றன.

குறிப்பாக 2009 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் சுனாமி மறுவாழ்வு மற்றும் புனர்நிர்மாணத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மக்களினது மனம் கவர்ந்த சுற்றுலாத்தலமாக மாறிவிட்டது. பாசிக்குடா உலகின் ஆழமான கடற்கரையில் ஒன்றாகும். இக்கடலானது இலங்கையின் ஏனைய கடலோரப் பகுதிகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் ஆழம் குறைந்த கடற்கரையாகவே காணப்படுகின்றது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் இங்கு அதிகளவில் முதலீடுகளை இடுகின்றனர். இது ஒரு முதலீட்டு மையமாகவும் காணப்படுவதே இதற்குக் காரணமாகும்.




# சம்பள வாசல்

நாம் ஒவ்வொருவரும் நமது பொருளாதார தகைமைக்கு ஏற்றவாறு வட்டிக்கு, அடகு வைத்து கடன் பணம் வாங்குதலை காலம் காலமாக மேற்கொண்டு வருகின்றோம். தனி மனிதன் தொட்டு அரசுகளும் இந்த வலையில் சிக்கியுள்ளமையை நாம் அறிவோம். அதற்கமைய பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கையில் வட்டிக்கு வாங்குதல், அடகு வைத்தல் மற்றும் கடன் வாங்குதல் பொதுவான பழக்கமாகவுள்ளது. பெருந்தோட்டங்களில் மற்றைய நாட்களைவிட சம்பள நாள் சற்று மகிழ்ச்சியாகவும், குதூகலமாகவும் வெளிப்பார்வைக்குத் தென்படுவது வழக்கம்.

சம்பள வாசல் என்பது பெருந்தோட்ட முகாமையாளர் அலுவலகத்தின் முற்றம் அல்லது முகாமையாளர் வீட்டு முற்றமாக இருக்கும். மாதம் முழுவதிலும் உழைத்த சம்பளத்தைப் பெறும் நாள் அது. மற்றைய நாட்களை போலில்லாமல் நல்ல ஆடைகளுடன் தொழிலாளர்கள் அங்கு காத்திருப்பது வழமை. இவர்களோடு வட்டிக்காரன் மற்றும் வளையல்காரன், சில்லறைக் கடைக்காரன், பாய்மார், ஆசாரி ஐயா, நிலமே, ஆராச்சி வீட்டு அக்கா போன்றவர்கள் தமது வட்டிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளக் காத்திருப்பதும் வழக்கம். 1980/90 ஆம் ஆண்டுகளில் நிலை இவ்வாறு காணப்பட்டது. காலம் மாறிப்போனாலும் இன்று மேற்படி சம்பள வாசல்கள் இருக்கத்தான் செய்கின்றன. சில பெருந்தோட்டங்கள் தொழிலாளர்களது கிராமிய கூட்டுறவு வங்கிப் புத்தகங்களில் சம்பளத்தை வைப்பு செய்கின்றன. மேற்படி வட்டிக்காரர்கள் குறிப்பிட்ட வங்கிக்கு முன்னால் நிற்பது அல்லது அந்த வீடுகளுக்குச் செல்லும் நிலை இன்றும் தொடர்கின்றது. எனினும், ஒரு சில முன்னேற்றங்களை மறுக்க முடியாது. மேற்படி வட்டி, அடகுத்தொழில் செய்பவர்கள் தாம் செய்வது ஒரு முக்கிய பணி, உதவி என்று தம்மை ஒப்பிப்பது ஒரு நடைமுறை. இவர்கள் மேற்கொள்ளும் ஊழல், மோசடிகள் குறித்து பொதுமக்கள் அறிந்து மறுபேச்சுப் பேச முடியாத காலம் அது. ஒரு பக்கம் பெரும்பான்மை இனத்தவர் என்பதாலும், மறுபக்கம் அடாவடித்தனம் காட்டுவதாலும் வேறு வழியில்லாததாலும் தொடர்ச்சியாக இவர்கள் ஏமாற்றப்பட்டனர் என்பதே உண்மை.

இம்மக்கள் தங்களது வாழ்க்கையின் தேவைகளுக்கமைய (சடங்கு, திருமணம், திதி, சீர்வரிசை, புதுவருடப்பிறப்பு, சுப/அசுப காரியம்) வட்டிக்குக் கடன் வாங்குதல் அல்லது அடகு வைப்பதென்பது மிகவும் சுலபமான விடயமாகக் கருதப்பட்டது. தங்களது வெள்ளி, வெண்கலப் பாத்திரங்கலான அண்டா, குண்டா, தட்டு, பானை, குடம், கிண்ணம், விளக்கு போன்ற பழமைவாய்ந்த, அழகான மற்றும் பெறுமதியான பொருட்கள் அடகு வைக்கப்பட்டன. தாய் வீட்டில் சீதனமாகக் கொண்டு வரப்பட்ட அல்லது தமது தாய் தனக்குத் தந்த பொருட்களை வட்டிக்காரர்களிடம் அடகு வைத்து பணம் பெறும் ஒரு நிலை இருந்தமை ஒரு அவலமே. இந்த கந்துவட்டிக்காரர்கள், மனசாட்சியில்லாதவர்கள் என்பதை மக்களின் சாப வசனங்களைக் கேட்கும் போது உணரலாம். இப்படி சேமிக்கப்பட்ட வெள்ளி, வெண்கலப் பாத்திரங்கள் (தமிழ்ப் பெயர் பொறிக்கப்பட்டிருக்கும்) மேற்படி வட்டிக்காரர்களின் வீடுகளின் வரவேற்பறையில் பழைமை அலங்காரப்

## பொக்கெட் பேனா


பொருட்களாக காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்.

அடுத்ததாக தங்கம் அடகு பிடித்தலைக் காண்போம். இதன்போதும் தங்கத்தின் பெறுமதியை மக்கள் சொன்னாலும் வழங்க இயலுமான தொகையைத் தீர்மானிப்பது வட்டிக்காரர்களே. வட்டியின் அளவு, ஒரு வருடகால எல்லையாகும். ஒரு மாதம் வட்டி வழங்காவிட்டால் அதற்கு கந்துவட்டி அறவிடப்பட்டும். இந்த வட்டிக்கார நிலமே, பாய்மார், ஆசாரி ஐயாக்களுக்கு ஒரு பழக்கமுண்டு. இவர்களிடம் அடகு வைக்கப்படும் பொருட்களைத் திருப்பித் தருவதில் அதிக அக்கறை காட்ட மாட்டர்கள். இவற்றுடன் மேலும் ஒருவகை வட்டிக்கு பணம் வழங்கும் முறையுள்ளது. அது மாதாந்தம் வீட்டுக்கு தேவையான பொருட்களை வழங்குதல். பின்னர் குறிப்பிட்ட தொகைக்கு வட்டியுடன் கணக்கிடல். இவர்களுக்கு சில்லறை, அடகு, சில்க்ஸ் என சுமார் மூன்று கடைகள் இருக்கும். ஒரு கடையில் அடகு வைத்துவிட்டு அவர்களது மற்றைய கடைகளில் மக்களுக்குத் தேவையான பொருட்களையும் வாங்க வேண்டும். இது ஒருவகை சுழற்சி முறை. அதை மாற்றிக்கொள்ளும் உரிமை இம்மக்களுக்கு இருந்தாலும் அம் மாற்றத்தின் பின்விளைவுகளை எண்ணி நடைமுறையை மாற்றிக்கொள்வதில்லை.

மேற்படி எல்லா வகையான வட்டிக்காரர்களும் பெருந்தோட்ட மக்கள் ஒய்வுபெறும் காலமறிந்து அவர்களால் மீள செலுத்த முடியாதவகையில் வட்டிக்குப் பணம் கொடுப்பது வழக்கம். இதன்போது இவர்களது அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், வங்கிப் புத்தகம், பிரஜா உரிமைப் பத்திரம் என இவர்களது அடிப்படை ஆவணங்களை எடுத்துக் கொண்டு பணம் வழங்குவர். இது மக்களின் நன்மைக்காக அல்ல. இது ஒருவகை சூழ்ச்சியே. கடன் மேல் கடன்வாங்கி செலுத்த முடியாமல் காலம் ஆகிவிடும். பரவாயில்லை. பிறகு பார்க்கலாம் என ஆறுதல் வார்த்தைகள் இவர்களால் தெரிவிக்கப்படும். ஓய்வுபெற்ற பிறகு ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதிய தொகை பெற இவர்களுக்கு மேற்குறிப்பிட்ட அடிப்படை ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டியிருக்கும். அப்போது இந்த வட்டிகாரர்கள் முன்வந்து சில தொழிற்சங்க உறுப்பினர்களுடன் இணைந்து குறிப்பிட்ட தொகை அந்த நபர் பெறுவதற்கு உதவி செய்வர். குறிப்பிட்ட காசோலை கிடைக்கப்பெற்றதும் வட்டிக்காரர், தொழிற்சங்கப் பிரதிநிதி மற்றும் குறிப்பிட்ட தொழிலாளருடன் வங்கியில் பணத்தை பெறுவார். பின் வட்டிக்காரர் இதுவரை பெற்றிருந்த தொகைக்கு வட்டிக்கு மேல் வட்டியிட்டு தம்முடைய பணத்தைத் தருமாறு கூறி அறவிட்டுச் செல்வார். பின் தொழிற்சங்கப் பிரதிநிதி ஒரு தொகையை அன்பளிப்பாக தருமாறு பலவந்தமாக ஒரு தொகையை பெற்றுச் செல்வார். இறுதியாக குறிப்பிட்ட சில தொழிலாளிகளுக்கு நாலில் ஒரு பங்கு தொகை எஞ்சியிருப்பது வழக்கம்.

வட்டிக்காரர்களில் ஒருசில நல்ல மனம் படைத்த மனிதர்களையும் எம்மால் மறக்க முடியாது. நடைமுறையில் அதிகமான பெருந்தோட்டக் கிராமங்களில் வட்டிக்காரர்களை மேற்கண்டவாறு காண்பது அரிது. இன்று வட்டிக்கு பணம் வழங்கும் முறை நவீனமாகிவிட்டது. ‘மைக்ரோ கிரெடிட்’ எனும் பெயரில் கழுத்துப்பட்டிகளோடு வெள்ளையும் சொள்ளையுமாக ஒரு மோட்டார் சைக்கிளில் வந்து மேற்படி அதே வேலையைச் செய்கின்றனர். இந்நிலைக்கு மக்களின் அறியாமையும் அதிக செல்வாக்கு செலுத்துகின்றது. முறையான சேமிப்பு முறையொன்றை ஏற்படுத்திக்கொள்ளாத வரை இந்த நிலை தொடர்கதையாகவே இருக்கும்.

# புக்காங் விண்கல் (Fukong meteorite)



இந்த புக்காங் விண்கல் சீனாவில் புக்காங் எனுமிடத்தில் அமைந்துள்ள மலைகளுக்கு இடையே கடந்த 2000 ஆம் ஆண்டு கண்டுபிடிக் கப்பட்டது.

இதன் ஆயுள் 4.5 பில்லியன் ஆண்டுகளாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. 2000 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட போது இதன் நிறை 1003 கிலோ கிராமாக இருந்தது.

பிறகு, இதன் முதன்மை நிறையிலிருந்து 20 கிலோ கிராம் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எக்சோபிளானட்கள் (Exoplanet)




நமது சூரியக் குடும்பத்துக்கு வெளியிலிருந்து புதிதாக ஒரு கோள் வந்து சூரியனைச் சுற்றினால் அதனை எக்ஸோபிளானட் என்பர்.

முதன்முதலில் இதுபோல் வெளிப்புறக் கோள் ஒன்று இருப்பது 1917 இல் கண்டுபிடிக்கப்பட்டது.

எனினும் 1992 இல் தான் உறுதிப்படுத்தப்பட்டது. மே 1, 2021 நிலைவரப்படி 4,719 வெளிப்புறக் கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எக்ஸோபிளானட்கள் ஏன் முக்கியமானவை?

விண்மீன்கள், சூரியக் குடும்பம், கிரகங்கள், பிற சூரியக் குடும்ப உருவாக்கம் ஆகியவற்றைப் பற்றி அறிய இந்த எக்ஸோபிளானட்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

எத்தனை வெளிக்கோள்கள் இருக்கலாம்?

இதுவரை கிட்டத்தட்ட 6000 க்கும் மேற்பட்ட வெளிக்கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் பாதி தொலைநோக்கிகளின் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்டவை. மீதி உறுதிப்படுத்தலுக்கு காத்திருப்புப் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளன. ஒருசில கோள்களில் நிலவும் தட்பவெப்ப நிலையைக் கொண்டு அவற்றில் மனிதர்கள் வாழ முடியுமா என்ற ஆராய்ச்சியும் நடைபெற்று வருகின்றது.




**இலங்கையில் உள்ள ஆணைக்குழுக்களின் பெயர்கள் எவை?**

*ஹரேந்திரன்- களுவாஞ்சிக்குடி*

ஆணைக்குழுக்களின் அத்தனைபெயர்களையும் இங்கு பிரசுரிப்பது சாத்தியமில்லை நண்பரே! கீழுள்ள இணையதளம் ஊடாக முழுமையான தகவல்களை அறிந்துகொள்ளுங்கள்.
அறிந்துகொள்ள>>>https://bit.ly/2TvcmWd

**மலைநாட்டுக்கு சூரியன் மிக அருகாமையில் இருந்தாலும், அங்கு குளிராக இருப்பதற்கான காரணம் என்ன?**

*அ.நி.மு. உமர் - மட்டக்களப்பு*



கடல் மட்டத்தில் இருந்து 300 மீற்றருக்கு அதிக உயரத்தில்தான் மலையகம் உள்ளது. அதனால்தான் அங்கு குளிராக உள்ளதாக விஞ்ஞான ரீதியிலான காரணிகள் உண்டு.

நீங்கள் சொல்வதுபோல சூரியன் மலைநாட்டுக்கு அருகில் இருக்கிறது என்றால் ஏன் பெரும்பாலானவர்கள் சூரியனை காண கடற்கரைக்கு செல்கிறார்கள்.

**பிழை செய்பவர்களுக்கு குறும்பனின் ஆலோசனை என்ன...?**

*கே. புவனேஸ்வரி - கிருலப்பனை*

கண்ணை மூடி 10 நிமிடம் யோசித்துப்பாருங்கள், அப்போதான் யார் மீது பழிபோடலாம் என்பது தெரியும்.

**பல்கலைக்கழக வாய்ப்பை தவற விட்டு கலங்கும் மாணவர்கள், பல்கலை வாய்ப்பை பெற்றும் போதையில் மார்தட்டும் மாணவர்களைப் பற்றி?**

*வே.பார்த்திபன் - திருகோணமலை*

வாழ்க்கை என்பது உங்களை கண்டுபிடிப்பதல்ல. உங்களை உருவாக்கிக் கொள்ளுதல்!
பில்கேட்ஸ் பல்கலைக்கழகம் செல்லவில்லை
சப்பாத்து துடைத்தவர்தான் ஆப்ரஹாம் லிங்கன்
ரஜினிகாந்த் ஒரு பஸ் கண்டெக்டர்
எரிபொருள் நிலையத்தில் பணியாற்றியவர்தான் அம்பானி
10ஆம் வகுப்பில் தேர்ச்சியடையாதவர்தான் சச்சின் டெண்டுல்கர்
பல்கலை வாய்ப்பை பெற்ற போதையில் மார்தட்டும் மாணவர்களே, போதையில் பாதை மாறாமல் பயணிப்பதுதான் சிறந்தது.

**எம்மை விட்டுவிலகிச் செல்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்;?**

*குணசீலன் அருண்குமார் - கிராண்ட்பாஸ்*



யாராவது ஒருவர் நம்மை நிராகரித்தால் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

சாதனைசெய்த அனைவருமே யாராவது ஒருவரால் நிராகரிக்கப்பட்டவர்களே.!

**பயணத்தடையைப் பற்றி குறும்பன் நினைப்பது என்னவோ?**

*எஸ்.நேசராஜா - வெள்ளவத்தை*

கடைகளையும் பாடசாலைகளையும் அடைக்கும் அரசாங்கம் எங்களது வங்கிக் கடன்களையும் அப்படியே அடைத்துவிட்டால் நாங்க எதுக்குடா வெளியவரபோறம்..!

**இராமானுஜம்; முகநூலில் அரசாங்கத்திற்கு விழுந்த அடி !**

01. பயணத்தடை என்ற போர்வையில் கொழும்பை இயக்கலாம்.

02. எச்சில் உமிழ மாஸ்க்கை அகற்றிய ஏழையை பொலிஸ் தூக்கிச்செல்லும், திட்டமிட்டு பிறந்தநாள் கொண்டாடிய பிரபலங்களை மரியாதையோடு விடுதலைசெய்யும்.

03. பணம் உள்ளவன் உணவை வீட்டுக்கு கொண்டுவரச்செய்யலாம்.

04. பசி அனைவருக்கும் பொதுவானதல்ல.

05. வீட்டை முடக்கி விமானங்களை வரச்செய்யலாம்.

06. அரச இயந்திரத்தை இயக்க, தீர்மானிக்க, கட்டளையிட மஹிந்தவுக்கு மகனாகப் பிறந்திருக்கவேண்டும்.

07. நிர்வாகம் - அரசியல் - அரசியல் நிர்வாகம் இவை மூன்றிலும் கைதேர்ந்திருப்பது கடினம்.

08. ஒரு பிரச்சினையை மறக்கவைக்க இன்னுமொன்றை உருவாக்கித்தான் ஆகவேண்டும்.

09. தமிழர்களின் அமைச்சுக்கு நிதியில்லாவிட்டாலும் ஊமையின் கையில் மணிபோலிருக்கவேண்டும்.

10. அநீதியை முறையிடவும் அதைக் கேட்கவும் ஆட்களில்லை.

**உங்களுடைய கேள்விகளை குறும்பனிடம் கேளுங்கள்**
**whatsapp - 076 2728213**
**e-mail- kurumpan@yahoo.com**

தமிழன் தொடர்கதை

# மகள் தூங்குகிறாள்

## அத்தியாயம் -25



"அக்கா...! நாங்க என்னக்கா இப்போ செய்றது..?" என ரொமேசிகாவின் தங்கை சற்று அச்சம் நிறைந்த தொனியில் கேட்டாள்.

அதனைக் கேட்ட ரொமேசிகா "கொஞ்சம் நில்லு தங்கச்சி..!

இந்தப் பக்கமாக யாரு சரி வரட்டும்.

அவுங்ககிட்டே ஸ்கூலுக்கு போற வழி எதுனு கேட்போம்" என்று தனது தங்கைக்கு கொஞ்சம் மனதைரியம் கொடுத்தாள் ரொமேசிகா.

ஏழெட்டு நிமிடங்கள் போராட்டத்தில் போயிருக்கும். அந்த நேரம் பார்த்து அந்த வழியாக ஒரு ஓட்டோ மெல்ல வந்து கொண்டிருந்தது.

அந்த ஓட்டோவை ஓட்டி வந்தவன் இவர்களின் தடுமாற்றத்தைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர்கள் இந்தக் கிராமத்திற்குப் புதியவர்கள் என்பதை அந்த தடுமாற்றத்திலிருந்து அவன் மிகவும் நன்றாகவே உணர்ந்து கொண்டான். அதனால் அவர்கள் நிறுத்தாமலேயே ஓட்டோவை அவர்களின் அருகிலில் நிறுத்தி அவன் அவர்களை உற்றுப் பார்த்தான்.

அவனுக்கு கிட்டத்தட்ட 22 வயதிருக்கும். கட்டேறிய உடல். அழகான முகம். அவனின் தோற்றம் அவனை ஒரு ஹீரோ போன்ற தோற்றத்தைக் காட்டிக் கொண்டிருந்தது.

அவன் ரொமேசிகாவை உற்று நோக்கினான். அவளோ வயதை மீறிய வளர்த்தி. அழகான புருவம். செம்பருத்திப் பூ இதழ்கள். கதை பேசும் விழிகள். மனதை வதை பண்ணும் அழகுத் தோற்றம். அதைக் கண்டதும்

"இவ்வளவு அழகில், அதுவும் இந்தக் கிராமத்தில் இந்த வயதில் இப்படி யாருமே இருக்க வாய்ப்பில்லையே..!

ஒருவேளை இவுங்க வேறு ஊர்ல இருந்து இங்கே வந்திருப்பாங்களோ..?

அப்படி வந்திருந்தால்...

இப்படி ஸ்கூல் சீருடையில இருக்க வேண்டிய அவசியமில்லையே...

ஆனால், எப்படியோ இவர்கள் இடம் தெரியாமல்தான் தடுமாறுகிறாங்களோ என்று தெரியவில்லை..." என்று தன் மனதிற்குள் எண்ணிக் கொண்ட அந்த இளைஞன்

"சரி..! எதுக்கும் இவுங்க கிட்டேயே கேட்டுப் பார்ப்போம். அப்போ விஷயம் முடிந்தது" என்று எண்ணிக் கொண்டவன் அவர்களைப் பார்த்து

"என்ன..? இங்கே ரெண்டு பேரும் தடுமாறிக்கிட்டு நிற்கிறீங்க..?

வழி ஏதாச்சும் உங்களுக்கு தெரியலையா..?" என்றான்.

அந்த இவிளைஞன் அவ்வாறு கேட்க ரொமேசிகா ஒன்றும் சொல்ல முடியாமல் மௌனமாக இருந்தாள்.

அதற்கு ரொமேசிகாவின் தங்கை அந்த இளைஞனைப் பார்த்து

"அங்கிள்... நாங்க இந்தக் கிராமத்திற்கு புதுசு..! அதுதான். இண்டைக்குத்தான் ரெண்டாவது நாளாக நாங்க ஸ்கூலுக்கு போறோம். நேற்று அப்பாவோடு வந்தோம். இன்றைக்கு தனியாக வந்தோம். அதுதான் போறதுக்கு வழி தெரியல.நேற்று எங்கப்பா வழியை காட்டித்தான் தந்தார்.

ஆனாலும், அது எங்களுக்கு இண்டைக்கு மறந்து போச்சு.

அதுதான். கொஞ்சம் பாடசாலைக்குப் போகிற வழியை சொல்லித் தாறீங்களா..?" என்று கெஞ்சலுடன் அந்த ஓட்டோக்கார இளைஞனிடம் கேட்டாள் ரொமேசிகாவின் தங்கை.

"அப்படியா..? அதுதானா விஷயம்..?

சரி, நானும் அந்த வழியாலதான் போறேன்.

வேண்டுமென்றால் ரெண்டு பேரும் இந்த ஓட்டோவில் வாங்க.

அங்கே அவ்விடத்தில் விட்டு விட்டுப் போகிறேன்" என்று அந்த ஓட்டோக்காரன் அவர்கள் இருவரையும் பார்த்துச் சொல்ல.

அவர்களின் மனதிற்குள் அச்சம் குடி புகுந்து விட்டது. காரணம் முன் பின் தெரியாத இளைஞன். அதுவும் ஓட்டோவில் வேறு..!

"இவனை நம்பிப் போகலாமா..?

இவன் நல்லவன்தானா..? இல்லாட்டி கெட்டவன்தானா..?" என்றெல்லாம் ரொமேசிகா தன் மனதிற்குள் கேள்விகளைக் கேட்கத் தொடங்கி விட்டாள்.

அதனை நன்கு உணர்ந்து கொண்ட அந்த ஓட்டோக்கார இளைஞன்

"என்ன...! ரொம்பவும் பலமாக யோசிக்கிறீங்க..?

இவன் நாயகன் கமல் மாதிரி நல்லவனா, கெட்டவனானு பார்க்கிறீங்களா..?

இப்படி பார்த்துக்கிட்டே இருந்தீங்கன்னா ஸ்கூலுக்குப் போக முடியுமாம்மா..?

பயப்படாதீங்கம்மா...

நான் நிச்சயமாக கெட்டவனில்லை.

பயப்படாமல் என்கூட வாங்க.

அப்போதான் நீங்களும் வழியைப் பார்த்துக் கொள்ளுவீங்க...

அதற்கப்புறமாக நாளைக்கு யாருடைய துணையுமில்லாமல் நீங்க தனியே போயிடுவீங்க..." என்றான் அந்த ஓட்டோக்கார இளைஞன்.

அதைக்கேட்டதும் ரொமேசிகாவின் தங்கை

"என்ன செய்வது..?" என்பதைப் போல் ரொமேசிகாவின் முகத்தைப் பார்த்தாள்.

ரொமேசிகாவும் கொஞ்ச நேரம் யோசித்துப் பார்த்து விட்டு வேறு வழி எதுவுமில்லாமல் "ஸ்கூலுக்கு வேறு நேரமும் போகிறது. அதனால் சரி போவோம்" என்பதைப்போல் தலையசைக்க இருவரும் அந்த ஓட்டோவில் ஏறிக் கொண்டனர். ஓட்டோ புறப்பட்டது. வழிநெடுகிலும் அந்த இளைஞன் மௌனமாக இருக்கவில்லை. அவர்களைப்பற்றி விசாரித்துக் கொண்டே வந்தான்.

"என்னோட பேரு நிசாந்த...

நான் செய்கின்ற தொழில் ஓட்டோ ஓட்டுறது.

எனக்கு அப்பா இல்லை. அம்மா இருக்கு. ரெண்டு தங்கச்சிமாரும் இருக்காங்க.

நான் காலையில ஸ்கூலுக்குப் பக்கத்துலதான் ஓட்டோவைப் போடுவேன்.

பகலுக்கு சாப்பிடப்போய் பின்னேரம் மீண்டும் ஓட்டோவைக் கொண்டு வந்து அவ்விடத்தில் போடுவேன். மீண்டும் ஆறு மணிக்கு வீட்டுக்குப் புறப்பட்டு போயிடுவேன்"

என்று தன்னைப் பற்றிக் கேட்காமலேயே அறிமுகம் அத்தனையையும் அவர்களிடம் சொல்லி முடித்தான்.

"என்னைப் பற்றியே சொல்லிக்கிட்டு வருகிறேன்.

உங்களைப்பற்றியும் கொஞ்சம் சொல்லுங்களேன் கேட்போம்" என்றான் அவர்களிடம் ஓட்டோக்கார இளைஞனான நிசாந்த.

அதனைக் கேட்டதும் ரொமேசிகா பதில் சொல்லவில்லை. அதற்கு பதிலாக ரொமேசிகாவின் தங்கைதான் பதில் சொன்னாள்.

"இவுங்க என்னோட அக்கா..! அவளோட பேரு ரொமேசிகா.

எனக்கு இன்னொரு தங்கச்சி இருக்கு.

நாங்க வேறு கிராமத்திலிருந்து இந்த கிராமத்திற்கு தொழிலுக்காக வந்திருக்கோம்" என்று தொடங்கி தம்மைப் பற்றி அனைத்தையும் அவனிடம் சொன்னாள்.

இப்படியே வழி நெடுகிலும் பேசிக் கொண்டுப் போக ஸ்கூலும் வந்தது. உடனே நிசாந்த ஓட்டோவை நிறுத்தினான்.

"இதுதான் நீங்கள் தேடின ஸ்கூல்..." என்றபடி அவர்களை அவ்விடத்தில் இறக்கி விட்டான்.

பாடசாலை முடிந்த பிறகு ரொமேசிகாவும், அவளது தங்கையும் வீடு நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் போது அந்த நேரம் பார்த்து அவ்வழியாக பகல் சாப்பாட்டுக்காக வீடு நோக்கி போவதற்காக அவ்வழியாக மீண்டும் வந்தான் நிசாந்த.

அப்போது அவனது கண்ணில் மீண்டும் சிக்கினார்கள் ரொமேசிகாவும், அவள் தங்கையும். அதனைக் கண்ட நிசாந்த உடனே அவர்களுக்கு அருகில் ஓட்டோவை நிறுத்தி விட்டு அவர்களை நோக்கி தலையை வெளியே நீட்டி


"என்ன ஸ்கூல் விட்டு வீட்டுக்கா போறீங்க..?" என்றான்.

**தொடரும்...**

- ஸாலிஹ் அஸீம்

தமிழன் சிறுகதை

# முககவசம்



அது கொரோனா அதிகரித்துக் காணப்பட்ட காலமென்பதால் பொலிஸ் கெடுபிடிகள் அதிகமாகவே இருந்தன. சில முக்கிய சந்திகளில் திடீர் திடீரென்று நின்று கொண்டிருக்கும் அவர்கள் அவ்வழிகளால் முகக்கவசம் அணியாமல் வாகனங்களிலும், நடந்தும் செல்லுகிறவர்களை இடைமறித்து வழக்குப் பதிவு செய்தும், சிலரிடம் அவ்வாறு வழக்குப் பதிவு செய்யப் போவதாகவும், வாகனத்தைப் பறிமுதல் செய்யப் போவதாகவும் பயமுறுத்தி இலஞ்சம் வாங்குவதென்றும் தமது நடவடிக்கைகளைச் செய்து வந்தனர்.

இதனால் என்னைப் போன்றவர்கள் முகக்கவசம் அணிவது சிரமமாக இருக்கிறது என்பதற்காக பொலிஸாரின் கெடுபிடிக்கு பயந்து, நோயின் கோரத்தினை மறந்து, அதனை நாடிவரை இறக்கிவைத்து விட்டு, அந்த முக்கிய சந்திகளிலும் சில நேரம் தூரத்தில் பொலிஸாரைக் கண்டாலோ முகக்கவசத்தினை உயர்த்தி மூக்கை மறைத்துக் கொள்வதும் வழக்கம். சில சந்தர்ப்பங்களில் முகக்கவசத்தை சட்டைப்பைக்குள்ளும் வைத்துக்கொண்டு சாதாரணமாக செல்வதும், பின்னர் ஏதோ நினைவு வரும் போது அணிவதும் என்று வழமையாகிப் போயிருந்தது.

கொரோனா வேகமாகப் பரவி மரணங்கள் கொத்துக்கொத்தாக இடம்பெறுகின்றபோது இவ்வாறான செயற்பாடுகள் மோசமானவையென்ற போதிலும் அதனை மறந்து அவ்வாறு செயற்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

அன்று வழமை போன்று தங்கையின் வீட்டுக்குச் சென்ற நான் தங்கையின் பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருந்து விட்டு மழை வருவதற்கான சூழல் ஏற்படவும்

"மழை வார மாதிரியிருக்கு. அதுக்கு முன்னாடி வீட்டுக்குப்போய் சேர வேண்டும்" என்று தங்கையிடம் சொல்லிவிட்டு விடைபெற்று வெளியில் வந்து கொஞ்ச தூரம் சென்றிருப்பேன். அதற்குள் மழை பொழியத் தொடங்கி விட்டது. ஓரளவுக்கு நனைந்து விட்டேன் என்பதால் திரும்பிச் செல்லாமல் நேராக வீடு நோக்கியே பயணித்தேன். அந்த அவசரத்தில் முகக்கவசத்தை மறந்து விட்டேன்.

குளத்தோரப் பாதையால் சென்று வான் சந்தியைத் தாண்டியே என்னுடைய வீட்டுக்குச் செல்லவேண்டும் என்பதால் அவ்வழியாக வந்து சந்தியை நெருங்கிக் கொண்டிருந்தபோது நான் சற்றும் எதிர்பாராத வகையில் அங்கு பொலிஸார் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

அதனைக் கண்டதும் எனக்குள் திக்கென்றிருந்தது. உடனே சட்டைப்பைக்குள் கையை விட்டு முகக்கவசத்தைத் தேடினேன். ஆனால், அது அங்கேயிருக்கவில்லை.

"என்னாச்சுது..? தங்கையின் பிள்ளைகள் எங்காவது போட்டு விட்டார்களோ..?" என்று நினைக்கும் போதே

"மே வரேன்.. கோ மாஸ்க்? கொய்த யன்ன?" என்றதும் எனக்கு காலிரண்டும் நடுங்கத்தொடங்கின. இதயம் படபடக்க நான் அச்சத்துடன் நிமிர்ந்து பார்த்தேன். அங்கே பொலிஸார் இன்னொருவரையே அவ்வாறு அதட்டிக் கொண்டிருந்தார்கள். அதனைக் கண்ட நான் உஷாராகி உடனே சைக்கிளை வந்த பக்கமாகத் திருப்பியவாறு வேகமாக ஓட்டத் தொடங்கினேன் உண்மையில் சைக்கிளோட்டப் பந்தயம் வைத்திருந்தால் நான்தான் முதலாவதாக வந்திருப்பேன். அந்தளவு வேகமாக வந்தேன். அவ்வாறு சிறிது தூரம் வேகமாக வந்து கொண்டிருந்த என்னைக் கண்ட அவ்விடத்திலுள்ள வீட்டு வாசலில் நின்றுக்கொண்டிருந்த எனக்கு தெரிந்த ஒருவர்

"நில்லுங்க நில்லுங்க... என்னயிது? இவ்வளவு வேகமாகப் போறீங்க..?" என்றார்.

அதனைக்கேட்ட நான்

"பொ...லிஸ்... பொலிஸ்..." என்று தடுமாறினேன். அதனைக் கேட்டவர் உடனே "வாங்க... உள்ளே வாங்க..." என்று கதவைத் திறந்து விட கீழே விழாத குறையாக சைக்கிளை சுவரில் சாத்திவிட்டு உள்ளே சென்று கதிரையில் உட்கார்ந்தேன். எனக்கு மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கியது.

அதனைக் கண்ட அவருடைய மனைவி ஒரு கிளாஸ் தண்ணீரோடு வந்தார். அதனை வாங்கிய நான் மடக் மடக் என்று குடித்தேன். அவர் நடந்ததைக் கேட்க நானும் அதனை சொன்னேன். அதனைக் கேட்டவர் என்னைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தார். எனக்கோ கோபம் கோபமாக வந்தது.

"என்ன இது? உங்களுக்கு நான் பட்ட கஷ்டம் கொமடியாக இருக்கா?" என்றேன். அதனைக் கேட்டவர்

"அப்படியில்லை. உங்கட முகக்கவசத்தை எங்கே வைத்தீங்க?" என்றார்.

"அதுதான் எனக்கு தெரியலயே..! தெரிந்தால்தான் அணிந்து கொண்டு நிம்மதியாக போயிருப்பேனே..!

நான் தங்கை வீட்டுக்குப் போனேன் பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டிருந்தேன். அப்போது அதனை எடுத்து விளையாட்டாக எங்காவது அவர்கள் போட்டிருப்பார்கள்" என்றேன். அதனைக் கேட்டவர் சிரிப்பை நிறுத்தாமலேயே

"அப்படியென்றால் உங்கட நாடியில போட்டிருக்கிற முகக்கவசம் யாருடையது?" என்றார். அதனைக் கேட்டு உடனே நாடியில் கையை வைத்துப் பார்த்தேன். அங்கே அது இருந்தது. அப்போதுதான் எனக்கு விளங்கியது அவசரத்தில் அதனை நான் பாக்கக் மறந்துவிட்டேன் என்பது. உடனே வெட்கத்தில் நான் தலைகுனிய அவர் இன்னும் சிரித்துக் கொண்டேயிருந்தார்.



காரைக்கவி

# சீத்துவக்கேடு 138

உவர் எங்கட இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில ஓர் இடத்தில உந்த கார்த்திகை திருநாளை அழல் சேர் குட்டம் எண்டு சொல்லுறார் எண்டா ஆச்சி.

உதுக்கு ஒரு காரணம் இருக்கெண்டு விசயம் தெரிஞ்சவை சொல்லுகினம் என்னவெண்டால், கார்த்திகையின்ரை அதிதேவதை அக்கினியாம். அதாலதான் இளங்கோவடிகள் கார்த்திகையை அழல் எண்டு சொன்னவராம் எண்டு ஆச்சி அதுக்கு விளக்கமும் சொன்னா.



திருவண்ணாமலை மகா தீபம்

உந்த விளக்கீடு பொதுவா மூண்டு வகையாக கொண்டாடுறது வழக்கம்.

எங்கட வீடுகளிலை நாங்கள் வீட்டைச் சுத்தி விளக்குகளைக் கொளுத்திறதை வீட்டு விளக்கீடு எண்டுவம்.

முருகன்ரை கோயில்களிலை விளக்கு கொளுத்திறது, சொக்கப்பனை கொளுத்திறதை குமாராலய தீபம் எண்டுவம். அதமாதிரி மற்றக் கோயில்களிலை கொளுத்திறதை சர்வாலய தீபம் எண்டுவம்.

உந்தக் கோயில்களிலை கனவிதமான விளக்குகள். எல்லாமா பதினாறு விதமான விளக்குகள் கொளுத்துவினம் எண்டு அப்பு சொல்ல, உடன ஆச்சி உப்பிடிச் சொன்னாச் சரியே அதுகள் என்னவெண்டு சொன்னா எல்லோ பெடிக்கும் விசயம் விளங்கும் எண்டா ஆச்சி.

உடன அப்பு, உவன் உப்பத்தே பெடியள் மாதிரி எங்கட பழைய விசயங்களை அறியவேணும் எண்டு பெரிசா நினைக்கிறேல்லை எண்டாலும் நீ சொன்னதுக்காக சோத்துப் பிரச்சினை வரக்கூடாது எண்டிட்டு சொல்லுறன் எண்டு ஆச்சியைப் பாத்துச் சொல்லிப் போட்டு விளக்கு வகைகளை சொல்லத் தொடங்கினார்.

தீபம், மகா தீபம், கணு தீபம், வியான் தீபம், மேரு தீபம், மயூர தீபம், சிம்ம தீபம், ஐந்தட்டு தீபம், துவஜ தீபம், புருஷா மிருக தீபம், நட்சத்திர தீபம், அலங்கார தீபம், ஓல தீபம், கமடதி தீபம், நாக தீபம், விருட்சப தீபம் எண்டு பதினாறு வகையான தீபங்கள் இருக்கு கண்டியோ.

உதில மகாதீபம் எண்ட விளக்கை ஏத்திற விழாத்தான் திருவண்ணாமலையில வலு கலாதியா நடக்கிற விழா எண்டார் அப்பு.

உப்பிடி விளக்குகளுக்கு இல்லாட்டில் தீபங்களுக்கு நாங்கள் சைவ ஆக்கள் முக்கியம் குடுத்ததுக்கு என்ன காரணம் எண்டால், சிவபெருமானை நான் முந்திச் சொன்ன மாதிரி ஒளி வடிவமா சோதி வடிவமா பாத்ததுதான் காரணம் கண்டியோ எண்டார் அப்பு.



உடன ஆச்சி, அப்ப உப்பிடி சிவபெருமானை ஒளி வடிவமா பாத்ததாலதான் "விறகில் தீயினன்" எண்டும் "மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்" எண்டும் ''ஞானச் சுடர் விளக்காய் நின்றவன்'' எண்டு அப்பரும், "சோதியுள் ஓர் சோதியானாய்" எண்டு சம்பந்தரும், "சோதியே, சுடரே, சூழ் ஒளி விளக்கே" எண்டு மாணிக்கவாசகரும், "தூண்டா விளக்கின் நற்சோதி" எண்டு சுந்தரரும் பாடி இருக்கினமோ எண்டா.

உதுமட்டுமே "ஒளி வளர் விளக்கே" எண்டு திருமாளிகைத் தேவரும், ''அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்" எண்டு சேக்கிழாரும், "கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே'' எண்டு திருமூலரும் பாடி எல்லே இருக்கினம் எண்டார் அப்பு.

அதால விளக்கு எண்டது தமிழருக்கு மிகவும் முக்கியமானது. பழங் காலத்தில இருந்தே எங்கட தமிழ் ஆக்களிட்டை இருந்து விளக்குப் புழங்கிக் கொண்டு வருகுது கண்டியோ எண்ட அப்பு, உதாலதான் எங்கட எந்த சடங்குகளிலையும் அது கலியாண வீடெண்டாலும் சரி, செத்த வீடெண்டாலும் சரி, ஏன் கனக்கப் போவான் எங்கட எல்லாத் திருவிழாக்களிலையும் வைபவங்களிலையும் நாங்கள் விளக்குக்கு கடும் முக்கியம் குடுக்கிறனாங்கள்.

அதாலதான் எந்த விழாத் தொடங்கேக்கையும் எந்த வைபவம் தொடங்கேக்கையும் நாங்கள் விளக்கேத்திறனாங்கள் எண்டார்.

விளங்கச் செய்யிறதே விளக்கு எண்டு பெரிய ஆக்கள் சொல்லுகினம். அப்பிடி எண்டால் என்னவெண்டால் மறைப்பதை நீக்கி மறைக்கப்பட்டதை விளக்கு காட்டுமாம்.

உப்ப இருட்டுக்கை என்னவும் கிடந்தால் இருட்டு அதைத் தெரியாம மறைச்சுப் போடும். நாங்கள் விளக்கு கொளுத்தினம் எண்டால் அந்த இருட்டு விலகி மறைபட்டுக் கிடந்தது தெரியும்.

உதால விளக்கை அறிவின் குறியீடாகவும் எங்கட ஆக்கள் சொன்னவை. என்னண்டால் அறியாமை இருளை நீக்கி அறிவைத் தாற எங்கட கடவுள் மாதிரித்தான் விளக்கு கண்டியோ எண்டு முடிச்சார் அப்பு.

**(தொடரும்)**

# இவ்வார இராசி பலன்கள்



**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

### மேட ராசி அன்பர்களே!

இவ்வாரம் உங்களுக்கு 9ஆம் இடத்தில் குருபகவான் சஞ்சாரம் செய்வது மிகச் சிறப்பாகும். இவ்வாரம் மகிழ்ச்சியான வாரமாக காணப்படும். புது கொள்முதல், புது தொழில்கள் ஆரம்பிப்பது உல்லாசப் பயணங்கள், தல யாத்திரைகள் என்பன மகிழ்ச்சியைத் தரக்கூடியதாக அமையும். கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது. அரச உத்தியோகத்தர்கள் நன்மையடைவார்கள். சுயதொழில் புரிவோர், கலைஞர்களுக்கு நன்மையான வாரமாக அமையும். திருமணத்தை எதிர்கொள்ள காத்திருப்போருக்கு நல்ல வரன்கள் அமையும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நல்ல மதிப்பெண்களைப் பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் அதிக இலாபம் அடைவார்கள்.

### இடப ராசி அன்பர்களே

இவ்வாரம் உங்களுக்கு எதிர்பார்த்த விடயங்கள் கைகூடி வரும். மனதில் அமைதி நிலை தோன்றும். உடல்நிலையில் சிறு சிறு உபாதைகள் தோன்றி மறையும். தூர தேசத்திலிருந்து நல்ல செய்தி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சிநிலை தோன்றும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் உதவி கிட்டும். பணவரவு திருப்திகரமாக அமையும். பிள்ளைகள் வழியில் சந்தோசம் அடைவர். சுயதொழில் புரிவோர் இலாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு தடைப்பட்ட கல்வி தொடரும். உத்தியோகத்தர்களுக்கு நன்மை கிட்டும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவார்கள்.

### மிதுன ராசி அன்பர்களே

மிருகசீரிடம் 3ஆம் பாதம், புனர்பூசம் 2ஆம், 3ஆம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு அதிகூடிய நற்பலனை இவ்வாரம் எதிர்பார்க்கலாம். கைவிட்டுச் சென்ற பொருட்கள் மீள கிடைப்பதுடன், நண்பர்கள் மூலம் உதவி கிட்டும். இதுவரைகாலமும் தடைப்பட்ட காரியங்கள் நிறைவேறும். புதுப்பொருட்கள் வாங்கல், மனைவி வழியில் நன்மை கிட்டும். புதுமனை, புது வாகனம் வாங்கும் வாய்ப்புகள் அமையும். உல்லாசப் பயணங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சியைத் தரும். கணவன் - மனைவியிடத்து புரிந்துணர்வு அதிகம் காணப்படும். தொழில் எதிர்பார்ப்போருக்கு நினைத்த வகையில் தொழில் வாய்ப்புகள் அமையும். மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் காணப்படும். தொழில் அதிபர்களுக்கு அதிக இலாபம் கிடைக்கும்.

### கடக ராசி அன்பர்களே

இவ்வாரம் உங்களுக்கு தொழிலில் முன்னேற்றம் காணப் படும். பொருட்கொள்முதலில் நற்பலனை எதிர்பார்க்கலாம். திருமணத்தை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு சாதகமான காலமாகும். மனதில் இருந்த கஷ்டங்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆழமாக சிந்தித்து செயற்பட்டால் கருமங்களில் வெற்றி நிச்சயம். கொடுக்கல் வாங்கல் விடயங்களில் கவனம் தேவை. தொழில் புரிபவர்கள், மாணவர்களுக்கு சிறப்பான வாரமாக அமையும். அரச உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவர்.

### சிம்ம ராசி அன்பர்களே

தொழில் நிலையில் தலம்பல் நிலை உருவாகும். புதிய முயற்சிகளில் மிக அவதானம் தேவை. பணவரவு சற்று தாமதமாக வந்துசேரும். அரச உத்தியோகத்தரின் எதிர்காலம் சிறந்து விளங்கும். பதவி உயர்வுகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். குடும்பத்தில் ஏற்கனவே நிச்சயித்திருந்த சுப கருமங்கள் நிறைவேறும். பிள்ளைகளால் வார இறுதியில் மனக்குழப்பங்கள் தோன்றும். கலைஞர்களுக்கு போதுமான வருவாய் கிட்டும். சுயதொழில் புரிவோருக்கு திருப்தியான வாரமாக அமையும். சிலருக்கு புது தொழில் துவங்குவதற்கு சாதகமான காலப்பகுதியாகும். மாணவர்களுக்கு கல்வி மூலம் பல வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளும் காலமாகும். அரசியலில் உள்ளோர்க்கு மகிழ்ச்சியான வாரமாகும். வியாபாரிகள், விவசாயிகள் அதிக இலாபமடைவார்கள்.

### கன்னி ராசி அன்பர்களே

குரு அருள் மூலம் எந்தவொரு விடயத்தையும் சாதிக்கும் ஆற்றல் இருக்கும். பணம், சட்டம், சுப விடயம், ஆன்மீகம், வியாபாரம், பழம், புஷ்பங்கள் மூலம் இலாபம் கிட்டும். பிறர் துணையுடன் எதையும் சாதிப்பது, எடுத்த காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். உங்களுக்கு பின்னால் உங்கள் சேமிப்பு, ஆள் பலம், பக்தி துணை நிற்கும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். அரச உத்தியோகத்தர்கள் அதிக இலாபம் அடைவார்கள். விவசாயிகள், வியாபாரிகள் அதிக இலாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு நன்மையான வாரமாக அமையும்.

### துலா ராசி அன்பர்களே

இந்த வாரம் நீங்கள் கவலையின்றி உங்கள் முயற்சிகளில் வேகமாகச் செயற்படலாம். பிரச்சினைகள் படிப்படியாக விலகிச் செல்லும். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெறுவீர்கள். குடும்பத்தில் நிம்மதி கிடைக்க பெறும் முயற்சி தேவை. உங்களின் குடும்ப விவகாரத்தில் பிறர் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. பணியாளர்கள் சக ஊழியர்களிடம் சுமுகமாக நடந்துகொள்வது சிறப்பு. கணவன் – மனைவி உறவு மேலோங்கும். பெரியோர்களின் ஆசிகள், வாழ்த்துகளைப் பெறுவர். புதுப்பொருட்கள் கொள்முதல் செய்யும் வாய்ப்பு கிட்டும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். வியாபாரிகள், விவசாயிகள் சம இலாபமடைவார்கள்.

### விருச்சிக ராசி அன்பர்களே

இவ்வாரம் உங்களுக்கு குடும்பத்தில் கஷ்டங்கள் குறைந்து மகிழ்ச்சியான வாரமாக அமையும். வழக்கு விவகாரங்களில் வெற்றி கிட்டும். பணவரவு திருப்தியைத் தரும். பண முதலீடு செய்பவர்கள் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. தொழில் புரியும் இடத்தில் மேலதிகாரியுடன் அனுசரித்து செல்வது நன்மையைத் தரும். அசையும் அசையா சொத்துகள் கை வந்துசேரும். விளையாட்டில் பங்குகொள்ளும் வீரர்கள் உடல்நலம் பேணுதல் அவசியம். மாணவர்களுக்கு உற்சாகமான வாரமாக அமையும். வியாபாரிகள் புது முதலீடுகள் செய்வது நன்மை தரும்.

### தனுசு ராசி அன்பர்களே

தற்காலம் உங்களுக்கு ஏழரைச் சனி கடைக்கூறு நடைபெறுகின்றது. அத்துடன் குரு 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். உடல்நிலையில் இடையிடையே ரோகங்கள் உண்டாகும். குடும்ப நிலையில் சில சில கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிடும். பொருளாதார நிலை நன்றாக இருக்கும். கொடுக்கல் வாங்கல் நிலையில் சுமுகநிலை ஏற்படும். தொழில்துறையில் உள்ளோருக்கு ஆர்வமும், உற்சாகமும் அதிகரிக்கும். வர்த்தகத்துறையில் உள்ளோருக்கு வருமானம் அதிகரிக்கும். சனி வழிபாடு செய்வது நன்மை தரும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் தேவை. வியாபாரிகளுக்கு சம இலாபம் கிட்டும்.

### மகர ராசி அன்பர்களே

தற்காலம் குரு பகவான் ஜன்மத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே, மாறி மாறி கஷ்டமும் யோசனையும் தோன்றி மறையும். உடல்நிலை பாதிக்கப்படலாம். உறவினர்கள், நண்பர்களிடையே உறவு பலவீனமடையும் வாய்ப்புகள் உள்ளன. பொருளாதாரத்தில் மந்த நிலை காணப்படும். கொடுக்கல் வாங்கல் விடயங்களில் சில பிணக்குகள் தோன்றி மறையும். தொழில் செய்வோர் நிம்மதி குறைந்து காணப்படுவர். அலைச்சல் உண்டாகும். பொதுவாக இவர்களுக்கு இவ்வாரம் சம பலனை எதிர்பார்க்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை ஏற்படும். வியாழக்கிழமைகளில் குரு பகவானுக்கு கடலை மோலை சார்த்தி வழிபடுதல் நன்மையை தரும்.

### கும்ப ராசி அன்பர்களே

இவ்வாரம் உங்களுக்கு சுப பலன்கள் இடம்பெற வாய்ப்புண்டு. ஆரம்பிக்கும் முயற்சிகள் அனுகூலம் தரக்கூடியதாக அமையும். உடல்நிலையில் ரோகங்கள் ஏற்பட்டு மறையும். பொருளாதார தேவைகளை பூர்த்திசெய்யக் கூடியதாக இருக்கும். குடும்ப நிலையில் ஒற்றுமை மேலோங்கும். ஊதிய அதிகரிப்பு, இடமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. வருமானம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் அதிக மதிப்பெண்கள் கிடைக்கும் வாய்ப்புகள் உண்டு. விவசாயிகள் அதிக இலாபமடைவார்கள். தொழிலதிபர்கள் புது முதலீடு செய்து இலாபம் பெறுவார்கள்.

### மீன ராசி அன்பர்களே

பூரட்டாதி 4ஆம் கால், உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு குரு, சனி 11ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வதால் இவ்வாரம் நன்மையான வாரமாக அமையும். விசேட முன்னேற்றங்கள் காணப்படும். கொடுக்கல் வாங்கல் விடயங்களில் புரிந்துணர்வு தோன்றும். பொருளாதாரம் பலமடைந்து தேவையான பொருட்கள் வாங்கக்கூடியதாக இருக்கும். உறவினர்கள், நண்பர்கள் மூலம் நல்லாதரவு கிட்டும். சகல விடயங்களிலும் வெற்றியைத் தரும் வாரமாக அமையும். மாணவர்களுக்கு கல்வி சிறப்படையும். வியாபாரிகளுக்கு இலாபம் கிட்டும்.



# மன்னனே...!

மன்னனே..! உன் காதல்தேசத்தில்
இந்த ராணியின் பிரவேசம்
புனித பூமியில் பிரவேசித்ததைப் போல்
புனித நதியில் நீராடியதை போல
போர்க்களத்தில் ஒரு பூ பூத்ததை போல்
இடர்காலத்து நிவாரணம்போல்
அற்புதமானது

மன்னனே உன் காதல்
வற்றிய ஜீவநதியில்
ஒரு துளி நீருக்காக
துடிதுடித்துக் கொண்டிருந்த
மீன் குஞ்சுக்கான பெரும் சமுத்திரம்
போல் ஆழமானது

நீ இறுகப் பற்றிய
இறுகிய கரங்களுக்குள்
இறுகிக் கிடக்கிறது
என் உயிர் - ஒருபோதும்
முடிச்சுக்களை அவிழ்த்துவிடாதே
வெறும் கூடாகிப்போவேன்

ஏனெனில் இறுகிய கணங்களிலெல்லாம்
இறுக்கியணைத்து இலகுவாக்கிவிட
உன்னால் மட்டும்தான் முடிகிறது
அழுது வடித்திடும்
தருணங்களிலெல்லாம்
ஆறுதலளித்திட உன்னால்
மட்டும்தான் முடிகிறது

ஆக்ரோஷப் பொழுதுகளிலெல்லாம்
அமைதிப்படுத்திட உன்னால்
மட்டும்தான் முடிகிறது
என் கோபங்களை என்
பிடிவாதங்களை ஏற்றுக்கொள்ளவும்
உன்னால் மட்டும்தான் முடிகிறது

நான் உன்னைக் கொண்டாடிக்
கொண்டிருக்கிறேன்
நீ என்னை வென்றுகொண்டிருக்கிறாய்
ஆம்..! நீ மன்னனல்லவா?
நம் காதல் தேசத்தில்
எனை ஆளும் மன்னனல்லவா?

மயிலிறகு மனசு
சிபானா அஸீம்

# காலம் சொல்லும் பாதையில்

வாழ்க்கைப் பயணம்
முடிவுறா வசந்தகோலம்
பூத்துக் குலுங்கும்
பற்பல சங்கதிகள்

கானல்நீர் விம்பமாய்
உறவுகளும் பட்டினியும்
செல்லும் பாதை
செம்மையாக இல்லை

தடைகளைத் தகர்த்தி
மனிதனாக ஆசையில்லை
தருணத்தில் தருமனும்
தோள் கொடுப்பதில்லை

இயந்திர வாழ்வில்
இன்பமும் துன்பமும்
இங்கிதம் அறியா
பேதைகள் கூட்டம்

நெஞ்சில் வஞ்சகமும்
உதட்டில் புகழ்ச்சியும்
நெருக்கமும் கபடமும்
மரணகுழியே அருகில்

இருளாய் படரும்
வாழ்வில் புதுமை
இதய வானில்
சிறகடித்துக் கனவாகிடு

இளந்தென்றல் தீண்டிட
இயல்பாக உருமாறிடு
இளமைக் குடம்பி
வண்ணப் பூச்சியாகிறது

பட்டமரம் பூத்து
பசுமை பொழிகிறது
வற்றிய குளத்தில்
ஊற்றெடுக்கும் நீரருவி

புதுவிதி செய்து
புதுமைகள் படைத்திடு
காலம் சொல்லும்
பாதையில் சிறகடித்திடு

தன்னம்பிக்கை ஆயுதம்
ஏந்தியே வென்றிடு
இலட்சியம் காணும்
பூமி உன்வசம்

கந்தசாமி அபிலாஷ்
மட்டக்களப்பு




# மனவெளியின் பாடல்கள்



ரொட்டியைத் திருப்பிப் போடுகின்ற
தாய்க்கு மகனை பாடசாலைக்கும்
கணவனை அலுவலகத்துக்கும் அனுப்பும்
வேலையைத் தவிர வேறு
எந்தத் தேவையும் காலையில்
இருப்பதில்லை

இஸ்திரியிடப்பட்ட சட்டையை
அணிந்து கொண்டிருக்கும் மகனிடம்
அழுக்காக்கி கொண்டு வர வேண்டாமென
மெல்லிய அதட்டலில் சொன்னாள்
கொப்பிகளை எடுத்து பைக்குள்
வைக்க முற்படுகின்ற போது
வீட்டுப் பயிற்சி செய்யாத மகனின்
தலையில் இலேசாக குட்டி விட்டு
விடிய விடிய படமும் பாட்டும்தான்
எனக் கடிந்து கொள்கிறாள்

அவசர அவசரமாக தானாகவே
விடையை பென்சிலால்
கொப்பியில் எழுதி
பாடசாலைக்குச் சென்று அதனை
பார்த்து எழுதுமாறு கூறி
மகனையும் கணவனையும்
வீதிவரை வழியனுப்பி விட்டு
நேற்று இரவு குடும்பத்துடன் சேர்ந்து
பார்த்த தொலைக்காட்சி நாடகத்தின்
மறு ஒளிபரப்புக்காய் காத்திருந்தாள்

-நஸார் இஜாஸ்-



# கோவிட் பத்தொன்பது

சீனக்காரன் சூழ்ச்சியிது
சீண்டி விட்டுப் பார்க்குமெங்கும்
சீரழிஞ்ச சிதை கூட்டம்
சின்னா பின்னமாய் மூச்சடக்கும்
சினமுள்ள வில்லியுருவமானதோ!

பாம்பு தின்று வந்ததாலோ
பாலை வார்த்த சாமியெல்லாம்
பாதியிலே போன கதை
பாரினிலே தெரிந்ததாம்!

பார்வையிட முடியாதாம்
பாவியான பத்தொன்பது வைரஸால்
புரிந்துணர்வு கொள்ளனுமே
புரியாத நம் இனத்து வர்க்கங்களில்
தலையிலக்கணம் தெரியாமல்
தடம் புரளுகையில்!

ஒரு திட்டவட்டத்தில்
ஒரு மண்ணும் தெரியாதது போல்
தாவித்தாவி தரமானவன் நானென்று
உலகமெங்கும் அச்சமற்ற
இராட்சசனை
அடியோடு அணைக்கட்டு
போடனுமே

சுகாதார முறைகளை பேணனுமே
சுதந்திரமாய் ஒரு மீற்றரில் பயணிக்க
சூறையாடும் சூனியக்காரனை
அழித்து
சூட்சுமமாய் வாழ்வினை வாழ
ஆட்கொல்லி பத்தொன்பதை
விரட்டிடுவோம்!

கலாபூஷணம்
மாதம்பை கதிர்

# அந்நியன்



ஏற்றிய தீபத்தின் அணையாத
ஒளியே - என் விழிகள் அறிந்த
அழகு தேவதையே
ஆயிரம் ஆண்டுகள் விலங்கிட்டு
என்னை சிறையிலே உணவின்றி
வைத்தாலும் உன் நினைவுகள்
என்னை உயிரோடே வாழ வைக்கும்

அடைபட்ட கதவிற்குள் அழியாத
உன் நினைவுகளை வர்ணமிட்டு
தினமும் பத்திரமாய் காத்து
விழிகளுக்கு
வலிக்காமல் வலியினால் கண்ணீரை
தரையினிலே சேகரித்து உனக்காக
நானுதிர்க்கும் கண்ணீரை வீணாக்க
மனதின்றி தினம் அதில் நீராடி
வருகிறேன்

உண்ணாமல் எனக்காய்
நோன்பிருந்த
நாட்கள் இன்று அழகாக
கலைந்தாலும்
நமக்கான நாளெண்ணி ஏங்கிடும்
என் விழிகள் விடுதலை
கொள்ளுமோ
உன்னை நினைக்கின்ற
முப்பொழுதும்

என்னைத் தாலாட்டும்
நினைவலைகள்
இன்று எனை விட்டு அகன்றிடுமோ

என்னுள்ளே அன்று நீ நாட்டிய
ரோஜாச்செடி காதல் எனும்
நீரினால் குலுங்கியதே பூத்து
இன்று இதழ்களை காற்றிலே
உதிர்க்கவிட்டு வாடிவதங்கி
வார்த்தைகள் இன்றி பிரிவினால்
வாழ்க்கையே இழந்து வழியின்றி
தவிக்கிறதே காதல் என்னும்
நீர் காண தினம் தினம் ஏங்கி

வருவாயோ என்னவளே
வாழ்க்கையின் துணையாக
என் வலிகளை குறைக்கின்ற
ஔடதத்தின் வடிவாக
காத்திருப்பேன் காலமெல்லாம்
காதலியே உன் வருகைக்காக
சீக்கிரமாய் வந்து விடு என்று
நானும் கூறமாட்டேன்
காரணந்தான் காலம் நம்மை
வேலியிட்டுக் காக்கிறதே..!

வன்னித் தமிழ் மறவன்
கிளிநொச்சி



# மொழியாள் சிறப்பாடு

அகரத்துடன் தொடங்கிடும்
அகமெல்லாம் ஒலித்து ஒளிதரும்

நயமொழி நம் செந்தமிழ்
நாவுக்கினிய வளமொழி

வல் மெல் இடை சேர்ந்து
வனப்பான ஓசையுடைய செம்மொழி

எளிமைக்கு எடுத்துக்காட்டாகிடும்
எஞ்ஞான்றும் மாறாமொழி

வார்த்தைக்கும் பஞ்சமில்லை
வரிகளுக்கும் குறைவில்லை

பேசும்போதே இனித்திடும்
பேசப்பேச வளர்ந்திடும்

பண்பாட்டுடன் பல கதை பேசும்
பண்பாய் நடந்திட வழிகோலும்

புரிந்தால் தனிசுகம்
புசித்தால் சுவை பலரகம்

தொன்மை என்பதால் மறைந்து விடாது
தொடர்ந்து வளரும் ஊழி முடிவுவரை

அகமகிழ்ந்து குறைதீர
அனுதினம் அழகாய் தமிழுரை

தமிழுக்கில்லை இறப்பு
தளர்ந்துவிடாது அதன் சிறப்பு

எம்.ஏ.எப்.நிப்லா சஃபீன்
சாய்ந்தமருது

